D
V211,31'Pob
Pob.2.3
227072

வெளியீடு 14-07-2006 Issued 14-07-2006

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
7 ஆக 2006
சென்னை-600 008

74/08

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**சனிக்கிழமை, மே 27, 2006—தொகுதி 2—எண் 3**

**Saturday the 27th May, 2006—Volume 2—No. 3**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

D
12.11.2.1.06
P06-2-3
227072

652
13/11/2006

## 27–5–2006

## உள்ளடக்கம்

பக்கங்கள்


| | |
|---|---|
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| *முன்னாள் உறுப்பினர் மறைவு* | 163-164 |
| **2. தகவல் கோரல்—** | |
| *உரிமை மீறல் பிரச்சினை முன்னறிவிப்புகள்* | 164-165 |
| **3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 165-283 |
| திரு. தி. வேல் முருகன் | 165-181 |
| *செல்வி ஜெ ஜெயலலிதா | 175-176, 185-215 |
| *திரு. ஞா. ஜாண் ஜோசப் | 181-185 |
| *திரு. எஸ். ராஜசேகரன் | 215-220 |
| திரு. கோவை தங்கம் | 220-232 |
| *திரு. குத்தாலம் க. அன்பழகன் | 232-239 |
| *திரு. நா. இராமகிருஷ்ணன் | 239-244 |
| *திரு. டி. ரவிக்குமார் | 244-255 |

பக்கங்கள்

3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

திரு. சி. ஞானசேகரன் 255-277

*திரு. கி. ஆறுமுகம் 278-283

4. அறிவிப்பு—

அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களை மீண்டும் பேரவைப் பணிகளில் கலந்துகொள்ள அனுமதிப்பது குறித்த அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு 283-284

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 284

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வைகாசி 13, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 மே 27, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி."

ஆழ்ந்த அறிவும், விடாமுயற்சியும் கொண்டு ஒருவர் அயராது பாடுபட்டால் அவரைச் சேர்ந்துள்ள குடிமக்களின் பெருமை உயரும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். இதை முடித்துவிடலாம். ஒரு இரங்கற் குறிப்பு இருக்கிறது. (குறுக்கீடு) இரங்கற் குறிப்பு இருக்கிறது, உட்காருங்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. டி. வேலையா அவர்கள் 13–1–2006 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. டி. வேலையா அவர்கள், திருநெல்வேலி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1991 முதல் 1996 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார். இந்த முன்னாள் உறுப்பினரின் மறைவால், அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன். மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. தகவல் கோரல்

### உரிமை மீறல் பிரச்சினை முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, நான் ஒரு உரிமை மீறல் பிரச்சினையைக் கொடுத்து இருக்கிறேன். மற்ற அலுவல்களுக்கு முன்னால் அதை எடுத்துக்கொள்ள வேண்டும். பேரவை விதி 219-ன்படி அதை முதலில் எடுக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்துள்ள உரிமை மீறல் பிரச்சினை எனது ஆய்விலே இருக்கிறது. அதை அனுமதிக்கலாமா, வேண்டாமா என்பது குறித்து முடிவு எடுத்து, பிறகு சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** As per Rule 219, let me explain the issue and then only, the Hon. Speaker could refer that to a Committee or so. Before that, opportunity should be given to a Member to raise the issue.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொடுத்துள்ள உரிமை மீறல் பிரச்சினை இருக்கிறது. அது என்னுடைய consideration-ல் இருக்கிறது. அது குறித்த தீர்ப்பினை, பிறகு சொல்கிறேன். உட்காருங்கள்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227072.
சென்னை-600 008



(குறுக்கீடு) உட்காருங்கள். நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) அது என்னுடைய consideration-ல் இருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகுதான் முடிவு எடுக்க முடியும். உட்காருங்கள். (குறுக்கீடு) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். (குறுக்கீடு)

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நானும் ஓர் உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். அது குறித்தும், தாங்கள் இன்று அனுமதிக்கிறீர்களா, என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்விலே இருக்கிறது. அதைப் பார்த்துவிட்டு, அதற்குப் பிறகு நான் முடிவு சொல்கிறேன்.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல் முருகன் அவர்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான இந்த விவாதத்தில் கலந்துகொண்டு பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இரண்டாவது முறையாக இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பைத் தந்து, என்னுடைய வெற்றிக்காக அயராது உழைத்த, ஒடுக்கப்பட்ட மக்களின், பிற்படுத்தப்பட்ட மக்களின், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கைக்காகவும், கல்விக்காகவும் அகில இந்தியா முழுவதும் சென்று இந்த மக்களின் உரிமைகளுக்காகப் போராடி வருகின்ற எம் தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், இந்திய நாட்டின் சுகாதாரத் துறை அமைச்சராகவும், இரண்டு நாட்களுக்கு முன்பு ஜெனிவாவில் நடைபெற்ற உலகச் சுகாதாரப் பொது மையத்தினுடைய, மிக அதிகமான உலக நாடுகள் பங்கெடுத்துக் கொள்கின்ற அந்த சுகாதார மாநாட்டில் அந்த கமிட்டியினுடைய 'A' தலைவராகப் பொறுப்பேற்று உலக மக்களின் சுகாதாரத்தைப் பாதுகாக்க

[திரு. தி. வேல் முருகன்] [2006 மே 27

இருக்கின்ற எங்கள் வருங்கால தமிழகத்தின் வரலாற்று நாயகன், மருத்துவர் சின்ன ஐயா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என் நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மகத்தான மாமன்றத்திற்கு ஐந்தாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று வந்துள்ள, உலகத்தில் வாழ்கின்ற ஒப்பற்ற தமிழர்களுக்கெல்லாம் (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வறியா உழைப்பாளியாகவும், உலகத் தமிழினத்தவர் எங்கு பாதிக்கப்பட்டாலும் குரல் கொடுக்கின்ற ஒரே தமிழினத் தலைவராகவும் விளங்குகின்ற, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சொந்த வேட்பாளர்கள் நிற்கின்ற பகுதிகளில்கூட பிரச்சாரம் முடிகின்றபோது மேடைக்குச் சென்று வெறும் கையசைத்துவிட்டு வந்த தலைவர், பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்கு எனக்காக வாக்குக் கேட்டு வருகின்றபோது—தமிழகத்தில் எந்த மேடையிலும் அதிக நேரம் பேசியதில்லை—3.5 நிமிடங்கள் எனக்காக வாக்குக் கேட்ட அந்தத் தலைவனை என் நெஞ்சார நிறுத்தி, என்னுடைய வெற்றிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த தலைவர் கலைஞர் தலைமையிலான கூட்டணி இயக்கத்தினுடைய தலைவர்களுக்கும், தோழமைக் கட்சியினுடைய நண்பர்களுக்கும், செயல் மறவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

இந்த ஆளுநர் உரையை நான் படித்துப் பார்த்தேன். ஆளுநர் உரையில், தமிழகத்திலே அடித்தள மக்களிலிருந்து, தொழில் நிறுவனம் முதல், சாதாரணப் பிரச்சினையிலிருந்து தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தப் பிரச்சினைகளையும் ஒரே நிதிநிலை அறிக்கையின் மூலமாக முத்தமிழ் அறிஞர் தீர்ப்பதற்கு முன்பாகவே (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு ஆளுநர் அவர்கள் உரை முன்னுதாரணமாக, அத்தனை பிரச்சினைகளையும் தொட்டு இருக்கிறது. இந்தத் தமிழகத்தினுடைய அனைத்துத் தரப்பு மக்களுடைய பாராட்டுதல்களையும் பெற்றிருக்கிறது. படித்தவர்கள், பண்பாளர்கள், கல்வியாளர்கள், பொருளாதார மேதைகள் என்று அத்தனை தரப்பு மக்களும் வரவேற்கின்ற ஒரு மகத்தான ஆளுநர் உரையை வழங்கியமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுடைய துயரைத் துடைப்பதற்கு, குறிப்பாக ஏழை விவசாயிகளுடைய வாட்டத்தைப் போக்குவதற்காக 7,500 கோடி ரூபாய் கடனைத் தள்ளுபடி செய்து, அதோடு மட்டுமல்ல, 'சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்கிற தாரக மந்திரத்துடன் தலைமை ஏற்றிருக்கின்ற



2006 மே 27] [திரு. தி. வேல் முருகன்]

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரையில் தமிழகத்தினுடைய வரலாற்றில் எந்த ஒரு முதலமைச்சரும் செய்யாத ஒரு சாதனையாக, எந்த வாக்காள மக்கள் எல்லாம் வாக்களித்துத் தேர்ந்தெடுத்து இந்த ஆட்சி அரியணையில் தலைவர் அவர்கள் ஏறினார்களோ, அந்த ஆட்சி அரியணையில் அமர்ந்து அந்த மக்களுக்கான சட்டத்தை இயற்றுவதற்கு முன்பாக, அந்த மக்களுக்கான உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கு முன்பாக, அந்த மக்கள் முன்னேயே நான் கையெழுத்திடுகிறேன் என்ற ஒரு மகத்தான வரலாற்றைத் தமிழகத்தினுடைய வரலாற்றில் உருவாக்கித் தந்தவர்தான் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 9–40

கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு வழங்க முடியுமா என்று ஏளனம் பேசியவர்கள் உண்டு; எள்ளி நகையாடியவர்கள் உண்டு. வழங்க முடியும் என்பதை, பதவி ஏற்ற அடுத்த சில மணித்துளிகளிலேயே செய்து காட்டியவர்தான் நம்முடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளெல்லாம் கொடுக்க முடியுமா, இது சாத்தியமா, இது நடைபெறுமா என்று ஏளனம் பேசிய தொலைக்காட்சிகளும், ஆதிக்கத் திமிர் பிடித்த பத்திரிகைகளும், எள்ளி நகையாடி, கட்டுரைகளும், தலையங்கங்களும் எழுதியபோது, வழங்கிக் காட்டுகிறேன், அதுவும் தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோருடைய முப்பெரும் விழாவில் தொடங்கி வைக்கிறேன் என்று அறிவித்திருப்பவர்கள் தலைவர் கலைஞர் அவர்களும், இந்த அரசும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மக்களுடைய நாடித் துடிப்புகளை அடைந்து, மாணவமணிகளுடைய பிரச்சினைகளை உணர்ந்து, தொழிலாளர் வர்க்கத்தினுடைய பிரச்சினைகளை உணர்ந்து, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து, பிற்படுத்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து, கடந்த 5 ஆண்டுக் கால ஆட்சியில் கல்விக் கொள்கை இந்த நாட்டைச் சீரழித்து, சின்னாபின்னமாக்கி, எந்த ஒரு முடிவும் எட்டப்படாமல், ஏழை, எளிய மக்களுடைய கல்வித் தரத்தைச் சூறையாடியதற்கெல்லாம், இன்றைக்கு ஒரு முடிவு கட்டுகிறேன்

என்ற உணர்வில்தான், entrance exam என்று சொல்லக்கூடிய நுழைவுத் தேர்வை அடுத்த ஆண்டு முதல் முழுமையாக ரத்துச் செய்து, மாணவர்களுடைய வாட்டத்தைப் போக்குகின்றேன் என்று அறிவித்திருக்கிறார்.

கடந்த கால ஆட்சியிலே தலைவர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்ட உழவர் சந்தை. உழவர் சந்தை, ஏழை எளிய, விவசாய மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை ஒரே இடத்தில் கொண்டுவந்து விற்பனை செய்து அதிக இலாபம் பெறுகின்ற ஒரு அற்புதமான திட்டம். ஆட்சி மாறியது, காட்சிகள் மாறின. அடியோடு அது ரத்துச் செய்யப்பட்டது. ஆனால், இன்றைக்கு என்னுடைய தொகுதியிலிருந்து தொலைபேசி அழைப்பு—உழவர் சந்தையை மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் திறப்பதற்கு ஆணையிட்டிருக்கிறார், எந்த இடத்தைத் தேர்வு செய்யவேண்டும், சட்டமன்ற உறுப்பினர்களே, இடத்தைத் தாருங்கள் என்று அரசு அதிகாரிகள் கேட்கின்ற ஒரு மிகத் துரிதமான, அவசரமான ஒரு நடவடிக்கையை எடுக்கின்ற ஒரு அரசாக இந்த அரசை நான் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடு மட்டுமல்ல. இங்கே இந்த அரசு பதவியேற்றவுடனேயே ஏதாவது நடந்து விடுமோ என்று சிலர் ஏங்கிக்கொண்டிருந்த நேரத்தில், எதுவும் நடந்திடாது, இலவச மின்சாரம் இந்த மக்களுக்குத் தொடரும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருக்கிறீர்களே, அதேபோல் இன்றைக்குத் தென்னக நதிகளை—என்னுடைய தொகுதியிலே, குறிப்பாக, கடந்த ஆண்டுகளில் பல முறை இந்த மன்றத்திலே எழுந்து போராடினேன், வாதாடினேன், கை தூக்கினேன். 5 ஆண்டுக் காலத்தில் நான் விவாதத்திலே கலந்துகொண்டு பேசுவதற்குக் கைதூக்கியபோது, மாண்புமிகு அன்றைய பேரவைத் தலைவர் ஒரேயொரு முறைகூட என்னை அழைத்ததேயில்லை. ஆனால், முதல் நாள், நேற்றையதினம் கைதூக்கினேன். ஆளும் கட்சியாக இருந்தாலும், இன்றைக்கு அவை முன்னவராக இருந்தாலும், தலைவர் கலைஞராக இருந்தாலும், பேராசிரியராக இருந்தாலும், கைதூக்குகிற யாராக இருந்தாலும், வாய்ப்புத் தாருங்கள் என்ற அடிப்படையிலே முந்தையதினமே முதல் வாய்ப்பு, முத்தான வாய்ப்பு வேல் முருகனுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதிலிருந்து தெரிகிறது, ஜனநாயகம் எந்தப் பக்கம் இருக்கிறது என்பதைப் பத்திரிகையாளர்களும், படித்தவர்களும், தொலைக் காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களும் தெரிந்துகொள்வார்கள்.





வீராணம் என்ற திட்டம் ஒரு வீணான திட்டம். மக்களுக்குக் குடிநீரை எடுத்துச் செல்வதற்கு, வீராணம் ஏரியிலிருந்து நீரை எடுத்துச் செல்வதற்கு, எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. என்னுடைய தொகுதியிலே மட்டும 54 ராட்ஷச borewell-களை அமைத்து, அந்தக் குடிநீரை உறிஞ்சி எடுக்கின்றீர்களே, தயவுசெய்து அதைத் தடுத்து நிறுத்துங்கள் என்று மன்றாடினேன். பேசுவதற்கு வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. ஆனால் இன்றைக்கு அந்தப் பிரச்சினை மட்டுமல்ல, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், மக்கள் பிரச்சினைகளை வாதாடுவதற்கு வாய்ப்புத் தருகின்ற ஒரு ஜனநாயகப் பூந்தோட்டமாக இந்தச் சட்டமன்றத்தை நடத்துகின்ற நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் பனைத் தொழிலாளர்களுக்கு நல வாரியம் வேண்டுமென்று பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். செவி சாய்க்கப்படவில்லை, ஆணைகள் பிறப்பிக்கப்படவில்லை. ஆனால், இன்றைக்கு இந்த ஆளுநர் உரையில் பனை நல வாரியம் அமைக்கப்படும் என்கிற உறுதி தரப்பட்டிருக்கிறது; பாராட்டுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், தாய்மொழியை ஆட்சிமொழியாக மத்திய அரசில் கொண்டுவர வேண்டும், அதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்தோம், நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆளுநர் உரையில், தாய்த் தமிழகத்தினுடைய தமிழர்களுக்கும், புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும், உலகத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கெல்லாம் தலைமகனாகவும், தமிழினத்தின் தலைவனாகவும் இருக்கின்ற முத்தமிழ் அறிஞரே, இந்த ஆளுநர் உரையில் அது இடம் பெறுவதற்கான வாய்ப்பை, மத்திய அரசு நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு இந்த அரசு முயற்சிக்கும் என்கிற இனிப்பான செய்தி உலகத்தில் வாழ்கின்ற தமிழர்களின் நெஞ்சங்களில் எல்லாம் இன்றைக்கு இனிப்பை வழங்கி இருக்கிறது.

அதோடு மட்டுமல்ல, எங்கள் தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்களும், தமிழ்நாட்டினுடைய தமிழ் அறிஞர்களும், அனைத்துத் தரப்புத் தமிழக மக்களும் கடந்த அரசில் வேண்டுகோள் வைத்தோம். அனைத்துப் பள்ளிகளிலும் எந்தப் பாடப் பிரிவுகள் இருக்கின்றனவோ, இல்லையோ, ஆனால் தாய்த் தமிழ்நாட்டில் எந்த மாணவனாக இருந்தாலும், கட்டாயம் தமிழைத் தாய்மொழிப் பாடமாகக் கொண்டு,

வேற்றுமொழி மாணவர்கள் படித்தாலுங்கூட, கட்டாயம் தமிழைப் பாடமாக வைப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று குரல் கொடுத்தோம், அதற்கான பதில் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆனால், இன்றைக்கு ஆளுநர் உரையில், எந்த மாணவனாக இருந்தாலும், தமிழகத்தில் படிக்கின்ற, எந்தப் பள்ளியில் படிக்கின்ற மாணவனாக இருந்தாலும், தாய்மொழி தமிழாக அவனுக்கு இருந்தாலும், வேற்று மொழிச் சொந்தக்காரர்களாக இருந்தாலும், தமிழையும் கட்டாயப் பாடமாகப் படிக்க வேண்டும் என்கிற உத்தரவு இன்றைக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 9–45*

அதோடு மட்டுமல்ல, சத்துணவில் முட்டையை கடந்த கால அரசு நிறுத்தியபோது, நாங்கள் கேட்டோம், ஏன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களாலும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களாலும் கொண்டு வரப்பட்ட சத்துணவுத் திட்டம்; முட்டை என்பது சத்தான பொருள்தானே, அதை ஏன் நீங்கள் எடுக்கின்றீர்கள் என்று கேட்டோம். அப்போது சமூக நலத் துறை அமைச்சராக இருந்தவர் சொன்னார், முட்டையைவிட சத்தான பருப்புகளை நாங்கள் தருகிறோம், பயறு வகைகளைத் தருகிறோம் என்று சொன்னார்கள். அதையும் தாருங்கள், முட்டையையும் சேர்த்துத் தாருங்கள் என்று சொன்னோம். ஆனால், அன்றைக்கு மறுக்கப்பட்டது. ஆனால், முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு, இன்றைக்கு வாரத்திற்கு இரண்டு முட்டைகள் வழங்கப்பட இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி வழங்கப்படும் என்று குறிப்பிடுகின்றபோது, கடந்த கால ஆட்சியில் கொடுத்து வந்த அந்தப் பொருட்களை நாங்கள் எடுத்துவிட்டு வழங்குகிறோம் என்று சொல்லவில்லை, அதுவும் இருக்கும், இதுவும் வழங்கப்படும் என்கிற அடிப்படையில்தான், இன்றைக்கு வாரத்திற்கு இரண்டு முட்டைகள் வழங்கப்பட இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இன்றைக்கு அரசுப் பள்ளிகளில் காலியாக இருக்கின்ற இடங்களில்—தொகுப்பூதியத்திலே ஆசிரியர் பெருமக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்களே, எதிர்காலச் சிற்பிகளான இளைய தலைமுறையினரை உருவாக்குகின்ற அந்த ஆசிரியர் பணியிடங்களை எல்லாம் உடனடியாக நிரப்புவதற்கு ஆணையிடப்படும் என்கிற உத்தரவையும் நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.





அதேபோல, தொழிற்கல்வி அனுமதி முறையில் குழப்பங்களை நீக்கி, மாணவர்களுடைய சேர்க்கை நெறிமுறைப்படுத்தப்படும்; இதிலே மிகப் பெரிய ஒரு அவலம், கடந்த கால ஆட்சியிலே நடந்தது. என்னவென்று சொன்னால், இன்னும் ஒரு சில தினங்களுக்குள் அவர்களுக்குத் தேர்வுகள் இருக்கும், தேர்வுகள் இருப்பதற்கு முன்பாக, entrance உண்டு என்ற ஒரு அறிவிப்பு வரும். உடனே, மேல்சாதி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், உயர் நீதிமன்றத்திலே முறையிட்டு, அதைத் தடுப்பதற்கான ஆணை வரும். அந்த மாணவர்கள் குழம்பிப் போய், தங்கள் கல்வியைத் தொடருவதா, படிப்பதா, நிறுத்துவதா, entrance-க்குத் தயாராவதா, தேர்விற்குப் படித்து எழுதிப் பட்டம் பெறுவதா என்கிற மிகப் பெரிய குழப்பம் இருந்தது. அதேபோல, counselling முறை என்று எல்லா முறைகளிலும் ஒட்டுமொத்தமாகக் கடந்த காலக் கல்விக் கொள்கை—குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தக் கல்விக் கொள்கையில் மிகப் பெரிய குளறுபடியும், ஒரு அநியாயமும், ஒரு அக்கிரமும் நடந்ததே தவிர, கல்வித் துறையில் எந்த ஒரு சாதனையும் நிகழ்த்தப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, B.Ed., என்கிற அந்த ஆசிரியர் பயிற்சிக்கான இடம், இரண்டு ஆண்டுகளில் மட்டும் கல்வித் துறையில் 138 இடங்களுக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், 138 இடங்களுக்கு அனுமதி கொடுத்ததற்கு, கல்வியாளர்களைக் கொண்ட குழு அமைத்தீர்களா, அல்லது கல்வியாளர்களைக் கொண்டு அந்த இடங்கள் எல்லாம், அந்த ஆசிரியர் பயிற்சியை நடத்துவதற்குப் போதுமான இடங்களா, அதற்கான infrastructures ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்று ஆய்வு செய்ததா என்று கேட்க விரும்புகிறேன். முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு குழுவை அமைத்து, 138 இடங்களுக்கு ஒரே ஆண்டில் அனுமதி தருவதற்கான உள்நோக்கம் என்ன என்பதைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், ஆசிரியர் பயிற்சிப் பள்ளி. கடந்த 2 ஆண்டுகளில் மட்டும்—ஆட்சி அதிகாரம் முடிகின்ற தருவாயில், 2 ஆண்டுகளில் மட்டும்—250 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அதிலே ஒரு வேதனையான செய்தி. என்னுடைய பண்ருட்டி தொகுதியிலே, பல முறை இந்தச் சட்டமன்றத்தில்—முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இங்கே வருகை தந்திருக்கிறார்—மாண்புமிகு முன்னாள் முதலமைச்சரிடத்திலே

வேண்டினேன். முதலமைச்சர் அவர்களே, என்னுடைய தொகுதியிலிருந்து பண்ருட்டியார் 30 ஆண்டுக் காலம் இந்த அவையிலே உட்கார்ந்து அழகு பார்த்திருக்கிறார், பல ஆண்டுக் காலம் அமைச்சராக இருந்திருக்கிறார், இதுவரையில் அரசு கலைக் கல்லூரி ஒன்று கிடையாது, அரசு Polytechnic ஒன்று கிடையாது, அரசு I.T.I. ஒன்று கிடையாது. என் தொகுதியிலே படிக்கின்ற 5,000—க்கும் மேற்பட்ட மாணவர்கள், மேல்நிலைக் கல்வியை முடித்துவிட்டு, உயர்நிலைக் கல்விக்குச் செல்வதற்கு, ஒன்று, கடலூர் செல்ல வேண்டும் அல்லது சிதம்பரம் செல்ல வேண்டும் அல்லது விழுப்புரம் செல்ல வேண்டும் அல்லது விருத்தாச்சலம் செல்ல வேண்டும்., என் தொகுதியிலே அமைத்துத் தாருங்கள் என்று 5 ஆண்டுக் காலமும் கெஞ்சினேன், கதறினேன், வாய்ப்புக்கள் இல்லை, அனுமதிகள் அங்கு தரப்படவில்லை. பேசுவதற்கே அனுமதி இல்லை என்கிறபோது, கல்லூரிகள் வழங்குவதற்கு எங்கிருந்து அனுமதி தரப்படும்? (மேசையைத் தட்டும் ஒலி) வழங்கப்படவில்லை.

என்னுடைய தொகுதியிலே தனியாருடைய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கும், B.Ed. என்கிற அந்த மேல்நிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்கும் infrastructures என்று சொல்லக்கூடிய கூரைக் கொட்டகையே இல்லாத இடத்தில் 5—க்கு அனுமதி ஒரே ஆண்டில் தரப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இது எப்படி நடந்தது? யார்மூலமாக நடந்தது? இதற்கு நடந்த பேரங்கள் என்ன என்பதையெல்லாம் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு குழுவை அமைத்து, கல்வியாளர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, நியாயமான, நேர்மையான விசாரணையை நடத்தவேண்டும். நல்ல பள்ளிக்கூடங்கள் இருந்து, அவற்றுக்கான வசதி வாய்ப்புக்கள் செய்யப்பட்டிருந்து, அனுமதி அளித்திருந்தால் நாங்கள் வருத்தப்படப் போவதில்லை.

அரசாங்கத்தின் சார்பாகக் கேட்டோம். ஏழை மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், வஞ்சிக்கப்பட்ட மக்கள், சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களாக இருக்கின்ற அந்த மக்களுக்கு, மேல்நிலைப் பள்ளி கிடைப்பதற்கு அரசின் சார்பாக அமைத்துத் தாருங்கள் என்று சொன்னோம், அனுமதியில்லை.

தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் இன்றைக்குச் சேரவேண்டுமென்று சொன்னால், இரண்டு இலட்சம் ரூபாய், மூன்று இலட்சம் ரூபாய். B.Ed., சீட்டு வேண்டுமென்று சொன்னால் இரண்டு இலட்சம் ரூபாய், மூன்று இலட்சம் ரூபாய் வாங்குகின்றார்களே, அப்படி அந்த மக்களுடைய, அவர்கள் உழைத்த பணத்தைச் சுரண்டுவதற்காகவே





தனியார் பள்ளிகள் முளைத்திருக்கின்றன, புற்றீசல் போல ஆங்காங்கே முளைத்திருக்கின்றன. இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

முற்பகல் 9—50

அதேபோல, இன்றைக்குத் தனியார் கல்வி நிறுவனங்களில் S.C., B.C., M.B.C., மக்களுக்கு, சிறுபான்மைக் கல்லூரிகளைத் தவிர்த்து, அனைத்துக் கல்லூரிகளிலும் இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவோம் என்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முத்தான அறிவிப்பு. உயிர் மூச்சுக் கொள்கை, இட ஒதுக்கீட்டுக் கொள்கை என்று இன்றைக்கு இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களுக்கும் சென்று—எம் தமிழினப் போராளி, மருத்துவர் ஐயா அவர்கள், 27 சதவிகித இட ஒதுக்கீடு காக்கப்பட வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத்தான் டெல்லிக்குச் சென்றார், அன்னை சோனியா அவர்களைச் சந்தித்தார், பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்தார், மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் அர்ஜுன் சிங் அவர்களைச் சந்தித்தார், சமூக நீதிக்கான தலைவர்களைச் சந்தித்தார், ராம் விலாஸ் பஸ்வான் அவர்களைச் சந்தித்தார், லாலு பிரசாத் யாதவ் அவர்களைச் சந்தித்தார், இன்னும் இருக்கின்ற தலைவர்களையெல்லாம் சந்தித்து, அந்த உரிமைப் போரில் எங்கள் ஐயா அங்கே டெல்லியில் போராடியபோது, தமிழகத்திலிருந்து ஒரு தொலைபேசி வந்தது. அந்தத் தொலைபேசியில் யார் தெரியுமா? அவர்தான், சமூக நீதியை, இந்த வன்னிய மக்கள்—2 கோடி வன்னிய மக்களுக்காக நாங்கள் இட ஒதுக்கீடு கேட்டு, கல்வி கேட்டுப் போராடி, 21 உயிர்களை ஒரே நாளில் சுட்டுக் கொன்று, எங்கள் வீடுகளில் இழவு விழுந்தபோது, எங்கள் குடும்பங்கள் துயரத்தில் தத்தளித்தபோது, எங்கள் சமூகத்தைச் சார்ந்தவர்களுக்குக் கல்வி இல்லையென்று மறுக்கப்பட்டபோது, நானும் ஒரு பிற்படுத்தப்பட்டவன்தான், ஆயிரம் மிக மிகப் போட்டாலும் தகும், நான் மிக மிகப் பிற்படுத்தப்பட்டவன், கேளுங்கள், தருகிறேன் என்று 20 சதவிகித இட ஒதுக்கீட்டை, 107 சாதிகளுக்கு அழைத்துப் பேசி அள்ளிக் கொடுத்த (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் அறிஞருடைய குரல்தான், டெல்லியில் பிரதமர் அலுவலகத்தில் என் ஐயா பேசிக் கொண்டிருந்தபோது வந்தது. என்ன வந்தது தெரியுமா? முதல் அறிக்கையை நான் தருகின்றேன். 27 சதவிகித இட ஒதுக்கீட்டை மத்திய அரசு அமல்படுத்த வேண்டுமென்ற கடிதத்தை பிரதமருக்கு நான் தருகின்றேன், தயாநிதி மாறன் மூலமாகத் தந்தனுப்பியிருக்கின்றேன், சந்தோஷமா என்று கேட்டார்.

கடிதம் கிடைத்தது; பாரதப் பிரதமர் அவர்களுடைய செவியும் சாய்ந்தது. அன்னை சோனியா அவர்களும் உள்ளார்ந்த அன்போடு அதற்கு நல்ல தீர்வை எட்டுகின்றேன் என்று சொன்னார். அடுத்த நிமிடம் அதற்கான உத்தரவுகள் எழுதி, தீர்மானம் நிறைவேறியது.

அடுத்த தொலைபேசி வந்தது. நேற்றையதினம் என் ஐயா அவர்கள் என்னை அழைத்துச் சொன்னார். திரும்பவும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், 'உங்கள் கொள்கைக்கு வெற்றி கிடைத்தாகிவிட்டது. மிக சந்தோஷம்தானா' என்று திரும்பவும் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்புகொண்டு என் ஐயா அவர்களை வாழ்த்திச் சொன்னார். அதற்காகத்தான் நேற்றையதினம் பெங்களூர், கர்நாடகா, மகாராஷ்ட்ரா, உத்திரப்பிரதேசம் என்று இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களினுடைய சமூக நீதித் தலைவர்களையும் சந்தித்து, நன்றி சொல்லிவிட்டு, எங்கள் ஐயா அவர்கள் இன்றையதினம்தான் தமிழகத்திற்குத் திரும்பினார். எதற்காக இதையெல்லாம் சொல்கின்றேன் என்று சொன்னால், இன்றைக்கு இந்த மக்களுடைய வாட்டத்தையும், இந்த மக்களுடைய பிரச்சினைகளையும் உணர்ந்து, தானாகவே முன்வந்து இந்த மக்களுக்கான நலத் திட்டங்களை அறிவிக்கின்ற ஓர் அற்புதமான அரசு.

இன்று காலை அலுவல் ஆய்வுக் குழுவிலே — எங்கள் தலைவர் அவர்களும் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்காக நேற்றையதினம் பெங்களூர் சென்றிருக்கின்றார், இன்றைக்கு வருவாரோ, வரமாட்டாரோ, அலுவல் ஆய்வுக் குழுவில் 9 மணிக்கு நான் — கலந்துகொள்ள வேண்டுமென்று அவசர அவசரமாகக் கிளம்பி வந்தேன். சரியாக 8–30 மணிக்கு கோபாலபுரத்திலிருந்து புறப்பட்டு இந்த வயதிலும் தனது அரசு அதிகாரிகளோடு கோட்டைக்கு எட்டே முக்காலுக்கே வருகின்ற ஒரு மகத்தான தலைவரைப் பார்க்கின்றோம், மகிழ்ச்சியாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவர் அவர்களே, அதனால் சொல்கின்றேன், கடந்த கால ஆட்சியில் நீங்கள் கிராமப்புற மாணவர்களுக்கு இட ஒதுக்கீட்டைத் தந்து, அந்த மாணவர்களுக்கான சலுகை மதிப்பெண்களையும் வழங்கினீர்களே, அதையும் இந்த முறை நீங்கள் கொஞ்சம் ஆலோசனை செய்து, மீண்டும் அந்த மதிப்பெண்களை அந்த மாணவர்களுக்குக் கூடுதலாக அளித்து, அவர்கள் உரிமை பெறுவதற்கு வாய்ப்புத் தாருங்கள் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.





12 ஆம் வகுப்பின் கடந்த பொதுத் தேர்வில் மிகப் பெரிய குளறுபடி. மார்க்—அதாவது, பாடத்தை அறிமுகப்படுத்துகின்றார்கள். அறிமுகப்படுத்துகின்ற பாடத்திற்கு அதற்கான பயிற்சி அந்த ஆசிரியர்களுக்குத் தந்து அறிமுகப்படுத்தினார்களா? இல்லை. கல்வியாளர்கள் குழு கூட்டப்பட்டு அறிமுகப்படுத்தினார்களா? இல்லை. அதோடு இல்லை, அந்தக் கல்வியாளர்கள் குழுவிலே அந்த மாணவர்களுடைய பிரதிநிதிகளையோ, ஆசிரியர்களுடைய பிரதிநிதிகளையோ, கல்லூரியினுடைய பேராசிரியர்களையோ வைத்து அந்தப் பாடங்களைத் தயாரித்து தந்து, அந்தப் பாடங்களை மாணவர்களுக்கு நடத்தி, அவர்கள் தேர்விலே அதிக மதிப்பெண் எடுப்பதற்கான வாய்ப்பை உருவாக்குகின்ற அளவிற்கு ஆசிரியர் பெருமக்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டதா என்றால், அதுவும் இல்லை. என்ன நடந்தது? தமிழகத்தினுடைய வரலாற்றிலேயே இல்லாத அளவிற்கு கிட்டத்தட்ட ஒன்றே கால் இலட்சம் மாணவர்களுக்கு மேல் இன்றைக்கு 12 ஆம் வகுப்புத் தேர்வில் தோல்வியடைந்து, தற்கொலை செய்துகொள்கிறார்களே, இந்தத் தற்கொலைகளுக்கு எல்லாம் காரணமாக இருந்த முன்னாள் கல்வி அமைச்சர் இந்த அவையிலே என்ன பதில் சொல்லப் போகிறார்? அவர் நேற்றையதினம் சொன்னார், நாங்கள் டெல்லிக்குச் சென்றோம், இட ஒதுக்கீட்டுக்காக வழக்கைப் பதிவு செய்தோம் என்று. நேற்றைக்கு எனக்குப் பேசுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. ஆனால் பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பேசுகின்ற வாய்ப்பு எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

*முற்பகல் 9–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்.

***செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச தாங்கள் எப்போது நேரம் ஒதுக்கித் தருவீர்கள் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இப்போது பேசிக்கொண்டிருக்கிற பாட்டாளி மக்கள் கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. வேல் முருகன் அவர்கள் என்னைப் பற்றியும், கடந்த ஐந்தாண்டுக் காலமாக என் தலைமையில் இயங்கிய அரசு பற்றியும் பல தவறான கருத்துகளை இங்கே தெரிவித்திருக்கிறார். தவறான செய்திகளை இங்கே கொடுத்திருக்கிறார். ஆகவே, அதற்கெல்லாம் நான் விளக்கம் கூறவேண்டும், பதில் கூறவேண்டும். தாங்கள் இப்போது அனுமதி அளித்தாலும் நான் பதில் கூறுவதற்குத் தயாராக இருக்கிறேன்.

*எங்கள் கட்சியைப் பொறுத்தவரை, 61 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். 26 ஆம் தேதி எங்கள் கட்சிக்கென்று 20 நிமிடங்கள் ஒதுக்கியிருக்க வேண்டும். 10 நிமிடங்கள்தான் பயன்படுத்தப்பட்டன. இன்றையதினம் 20 நிமிடங்கள் கொடுக்க வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அனுமதி கேட்டிருக்கிறீர்கள். உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கும். அப்பொழுது பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. உங்களுக்கு அனுமதி கிடைக்கும்போது பேசுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** 30 ஆம் தேதி எதிர்க் கட்சித் தலைவர் இங்கே வர இயலாத சூழ்நிலை இருப்பதால், அவருக்குப் பதிலாக நான் பேசுவதற்கு, குறைந்தபட்சம் 40 நிமிடங்களாவது தர வேண்டும். ஆக, ஒட்டுமொத்தம் 95 நிமிடங்கள்—ஒன்றரை மணி நேரம் நீங்கள் கொடுக்க வேண்டும். எப்போது கொடுப்பீர்கள் என்று தெரிந்துகொள்ளலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அனுமதி கேட்டிருக்கிறீர்கள். அனுமதி கொடுக்கும் விஷயமாக பிறகு சொல்கிறேன். அப்போது அனுமதி கொடுக்கப்படும். ஆகவே உறுப்பினர், உங்கள் வாய்ப்பு வரும்போது பேசுங்கள், உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** உறுப்பினர் வாய்ப்பு எப்போது வரும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வரும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** அதேபோல், பல ஆண்டுக் காலம் ஒடுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், தொட்டாலே தீட்டு என்கிற சாதியின் பெயரைச் சொல்லி, கோயில்களிலே நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட அடித்தளத்து மக்களுடைய எண்ணங்களைப் புரிந்து கொண்ட தானைத் தலைவர், அந்த மக்கள், தலித் இயக்கங்கள் சார்பாகவும், இன்னும் கோரிக்கைகள் வரப்படவில்லை; சட்டமன்றம் கூட்டப்படவில்லை; சட்டமன்றத்தினுடைய உறுப்பினர்களால் மாமன்றத்திலே கோரிக்கைகள் வைக்கப்படவில்லை. ஆனால், இந்தக் கோரிக்கைகள் எல்லாம் வருவதற்கு முன்பாக ஆண்டாண்டுக் காலமாக அடிமை வாழ்வு வாழ்ந்த அந்தச் சமூகத்தினுடைய அந்த அடிமை விலங்குகளை உடைத்தெறிந்து, உள்ளே செல்லுங்கள், கோயில் கட்டுவதற்கு உரிமை இருக்கிறது, கல் எடுத்து வைப்பதற்கு உரிமை இருக்கிறது, கோயில் கும்பாபிஷேகம் செய்வதற்கு உரிமை இருக்கிறது,



கோயிலிலே இருக்கின்ற இதர வேலைகளைச் செய்வதற்கு உரிமை இருக்கிறது, ஆனால், அந்தச் சிலை என்பது உள்ளே சென்ற பிறகு மட்டும் நாங்கள் சென்று சாமி கும்பிடுவதற்கு அனுமதி இல்லையா என்று ஏங்கிய, என் இட ஒதுக்கீட்டுப் போராளி ஐயா அவர்களுடைய கொள்கையை நடைமுறைப்படுத்துகின்ற வகையில், முத்தமிழ் அறிஞர் கேட்காமலேயே அறிவித்திருக்கிறார், (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் அர்ச்சகர் ஆகலாம். சாமி கும்பிடப் போவதற்கே உரிமை கேட்ட காலத்தில், சாமிக்கே பூஜை செய்கின்ற இடத்தில் கொண்டு போய் அமர்த்திய தலைவர் அவர்களே, உங்களுக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பாகவும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, அன்றையதினம் எனக்குப் பேசுவதற்குப் பேரவைத் தலைவர் முழுமையாக வாய்ப்புத் தரவில்லை. இன்றைக்கு தமிழகத்திலேயே இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, மிகப் பெரிய பிரச்சினை. இந்தப் பிரச்சினை எழுந்து, இங்கு நீறு பூத்த நெருப்பாக இருக்கிறது. எந்த ஒரு இயக்கமும் இந்த நாட்டிலே நம்முடைய கூட்டணிக் கட்சிகளைத் தவிர, ஆதரவுக் குரல் கொடுத்ததாக இன்றைய நாள் வரையில் வரலாறு இல்லை.

நேற்றையதினம் நான் பாதி பேசுகிறபோதே எனக்கு ஒலிபெருக்கி தடுக்கப்பட்ட காரணத்தினாலே இன்றைக்கு நான் கேட்கிறேன். ஐந்தாண்டுக் காலமாக இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை தொடர்பாக உச்ச நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருக்கிறது என்றார்களே; நான் கேட்கிறேன், ஒரு வேல் முருகன், ஒரு சட்டமன்ற உறுப்பினரை மூன்று மாதம் கழித்து, ஒரு கொலை வழக்கில் கைது செய்வதற்காக ஒரு மாவட்டத்தினுடைய காவல் துறைக் கண்காணிப்பாளரையே மாற்றிவிட்டு, ஒரு வேண்டப்பட்ட காவல் துறைக் கண்காணிப்பாளரைக் கொண்டு வந்து நிறுத்தி, பொய்யான வாக்குமூலங்களைப் பெற்று அவசர, அவசரமாக அந்த வழக்கிலே ஈடுபடுத்தி, என்னைத் தண்டிக்க வேண்டும்—என்னை மட்டும் தண்டித்திருந்தாலும் பரவாயில்லை, அரசியலில் வந்து தொலைந்தோம், அனுபவித்திருப்போம்—என் அண்ணன், என் தம்பி, இயக்கத்தினுடைய ஒன்றியச் செயலாளர், மாவட்டப் பொறுப்பாளர்கள் என அத்தனை பேரையும் தண்டிப்பதற்கு முயற்சித்த அந்த அவசர நடவடிக்கை, அந்த அவசரத் தேவை. இந்த இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை, ஒடுக்கப்பட்ட மக்களின் பிரச்சினை, வஞ்சிக்கப்பட்ட மக்களின் பிரச்சினை, பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் பிரச்சினை, இதிலே ஏன் அந்த வேகம், அந்த அவசரம் இல்லை என்று

கேட்கின்றபோது, பதில் கிடையாது. நான் கேட்கிறேன். இப்படி அன்றைக்கு ஒட்டுமொத்த ஒரு அரசாங்கமே ஒரு தனிப்பட்ட சட்டமன்ற உறுப்பினருக்காக, ஒரு தனிப்பட்ட நபருக்காக, ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் அல்ல; K.T. Tulsi என்கிற உச்ச நீதிமன்றத்தினுடைய மூத்த வழக்கறிஞர் ஒரு முறை, இரு முறை அல்ல. பேரவைத் தலைவர் அவர்களே, 16 முறை என் வழக்கிலே உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலே முறையிட்டார்கள். நானும் என்னுடைய முந்திரி போட்ட காசு, கூலி விவசாயம் செய்து என் அப்பா அந்தக் காலத்திலே கொஞ்சம், கொஞ்சமாக உழைத்து வைத்த காசு, சொத்து, வீடு, உறவினர் நகை, என் மனைவியினுடைய தாலியை முதற்கொண்டு அடகு வைத்து உச்ச நீதிமன்றத்திற்கு 16 முறை Senior Counsel என்கிற வழக்கறிஞர்களை வைத்து அங்கே நான் வாதிடுவதற்கு முயற்சித்தேன். பொருளாரத்தில் நஷ்டத்தை உண்டாக்க வேண்டும், மன உளைச்சலை ஏற்படுத்த வேண்டும், இவனுக்கு மிகப் பெரிய ஒரு கஷ்டத்தைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே அந்த அரசு...

முற்பகல் 10–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் வேல் முருகன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** நான் கேட்கிறேன். என்னைப் பழிவாங்க எடுத்த முயற்சி, என்னை மட்டும் பழிவாங்கினார்களா, இன்றைக்குப் பல்வேறு பொய் வழக்குகள். இன்னும் சொல்லப் போனால், என் தமிழினப் போராளி, ஒடுக்கப்பட்ட 107 சாதி மக்களுக்கும் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மூலமாக இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த என் வரலாற்று நாயகன்மீதே கொலை முயற்சி வழக்கை, கொலை வழக்கைப் பதிவு செய்வதற்குத் தூண்டியது கடந்த கால அரசு. இந்திய நாட்டினுடைய 100 கோடி மக்களுடைய சுகாதாரத் துறை அமைச்சர்மீது கொலை வழக்கு. அவர் அண்ணன், அவர் தம்பி, அவர் மகன், அவர் பேரன், பேத்திகள் என்று அத்தனை பேர்கள்மீதும் வழக்கைப் போட்ட ஒரு பாசிச அரசு, ஆணவ அரசு என்பதைக் கடைசி காலத்திலும் நிரூபித்த கொடுமைகள் இந்த மண்ணிலே அரங்கேறி இருக்கின்றன என்பதை இந்தப் பேரவையின்மூலமாக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்களுக்கு என் தொகுதியின் சார்பாக சில கோரிக்கைகளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 5 ஆண்டு



காலமாகக் கோரிக்கைகளை வைத்து, வைத்து, வேல் முருகன் ஓய்ந்து போனான். கோரிக்கை வைப்பதற்கு வருவதற்கு முன்பாக நீதிமன்றத்தின் படிக்கட்டுகளை ஏறி, ஏறி, இறங்கி ஓய்ந்து போனான். குடும்பத்தோடு அவ்வளவு இன்னல்களையும், துன்பங்களையும், துயரங்களையும் தாண்டி உங்கள் ஆதரவோடு எங்கள் ஐயாவின் ஆதரவோடு மீண்டும் இந்தப் பேரவைக்கு வந்துள்ள எனக்கு வாக்களித்த என் தொகுதி மக்களுக்கு நன்றியைக் காணிக்கையாக்குகிற விதத்தில், உங்களிடத்திலும் கோரிக்கை வைக்கிறேன்.

இதுநாள் வரையிலும் எங்கள் தொகுதியில் அரசின் சார்பாக ஒரு கலைக் கல்லூரியும் கிடையாது. Polytechnic-ம் கிடையாது. I.T.I.யும் கிடையாது. இந்த மூன்றையும் உங்கள் 5 ஆண்டுக் காலத்தில் அரசின் சார்பாக என் தொகுதிக்கு, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே, நீங்கள் செய்து தரவேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டுகோள் வைக்கிறேன். கடந்த 5 ஆண்டுக் காலத்தில் தொடர்ந்து கோரிக்கை வைத்தேன், முந்திரிக்குத் தொழிற்சாலை அமைத்துத் தாருங்கள் என்று. நீங்கள் அமைத்துத் தருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.

அதேபோல், என்னுடைய தொகுதியிலே இருக்கிற பலாப் பழங்களைக் கொண்டு ஒரு juice தயாரிப்பதற்கான தொழிற்சாலை கொண்டு வருவதற்கும் தாங்கள் உத்தரவிட வேண்டும் என்று கேட்டு, இந்த நேரத்திலே முந்திரி விவசாயிகள் நீண்ட நாட்களாக, கடந்த அரசு தேயிலைக்கு அரசே விலை நிர்ணயம் செய்தது, அரசே கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தார்களே, அதேபோல தாங்கள் முந்திரிக்கு விலை நிர்ணயம் செய்து, முந்திரியை நீங்களே கொள்முதல் செய்வதற்கும் தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னை இவ்வளவு பெரிய, மிகப் பெரிய ஜாம்பவான்கள் என்று சொல்லப்பட்டவர்கள் எல்லாம் எதிர்த்து நின்றபோதும், எனக்கு வாக்களித்து மீண்டும் இந்தப் பேரவையில் அனுமதித்திருக்கிற என் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கும், என் தொகுதியிலே இருக்கிற கூட்டணிக் கட்சியினுடைய செயல் மறவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்த கூட்டணிக் கட்சியினுடைய தலைவர்களுக்கும் நன்றி கூறுகிற இந்த வேளையில், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள்.

கடந்த 10 ஆண்டுக் காலத்திற்கும் மேலாக பல்வேறு சிறைச்சாலைகளில், தமிழகம் முழுக்க இந்த ஆண்டு அறிவிப்பார்கள், இந்த ஆண்டு விடுவார்கள் என்று ஏங்கித் தவித்துக்கொண்டிருக்கிற, என்னைப்போல் பல்வேறு பொய் வழக்குகளுக்கு ஆளாகி சிறைக் கொட்டடியில் அடைபட்டுக் கிடக்கின்ற சிறைக் கைதிகளை 10 ஆண்டு கழித்தவர்களை, நன்னடத்தையின் அடிப்படையிலே, அண்ணா பிறந்த நாளிலோ, பெரியார் பிறந்த நாளிலோ, முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் பிறந்த நாளிலோ அவர்களை விடுதலை செய்வதற்கு நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

ஏழையெளிய மக்கள் பட்டா கேட்டு மனுச் செய்கிறபோது, அரசு அதிகாரிகள், அவர்கள் 30 ஆண்டுக் காலம், 40 ஆண்டுக் காலம் வீடு கட்டி வாழ்ந்திருந்தாலுங்கூட ஏரிப் புறம்போக்கு, அது குட்டைப் புறம்போக்கு என்று 58 ஆண்டுக் கால சுதந்திர இந்தியாவில் அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு மறுக்கப்படுகிறது. அதற்கு விதிவிலக்கு அளித்து அந்த மக்களுக்கு, 20 ஆண்டுக் காலம், 10 ஆண்டுக் காலத்திற்கு மேலாகத் தொடர்ந்து அங்கு குடியிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கும் தலைவர் கலைஞருடைய இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி கடந்த 5 ஆண்டுக் காலம் பேசுவதற்கே வாய்ப்பு மறுக்கப்பட்ட நான், முதன்முதலாக உங்கள் அரசு பொறுப்பேற்றவுடனேயே என்னுடைய ஆதங்கங்களையும், என் மனதிலே குமுறிக் கொண்டிருந்த என் தொகுதியினுடைய சில பிரச்சினைகளையும், இத்தனை ஆண்டுக் காலம் போராடிப் போராடி வேல் முருகன் இந்தத் தொகுதிக்கு ஒன்றுமே செய்யவில்லையே என்று மக்கள் என்னை ஏளனம் செய்து விடுவார்களோ என்று மிகப் பெரிய ஒரு வேதனையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறேன். அந்த வேதனைகளை என் மனதில் இருந்து அகற்றுவதற்கு, எனக்குத் துன்பம் வந்தபோது, துயரம் வந்தபோது, கூட்டணிக் கட்சித் தலைவர் என்ற முறையிலே நான் வருகிறேன், உனக்காக, உங்கள் குடும்பத்தைப் பழி வாங்கிய அவர்களைக் கண்டித்துப் பொதுக் கூட்டத்தில் பேசுகிறேன் என்று அறிவித்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களே, உங்களுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டது. உடனே அண்ணன் ஆற்காட்டார் அவர்களை அனுப்பி வைத்தீர்கள்.





விடிந்தால் கூட்டம், முதல் நாள் இரவு கூட்டத்திற்கான தேதி மறுக்கப்பட்டது, அனுமதி மறுக்கப்பட்டது. இதெல்லாம் ஜனநாயகத்தில் அவர்கள் ஆற்றிய பணி என்பதையும் கவனத்தில் கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மீண்டும் இந்த அவையிலே பேசுவதற்காகவும், அவையிலே வருவதற்காகவும் எல்லாவிதத்திலும் எனக்கு ஒத்துழைப்புத் தந்த எங்களுடைய கட்சியினுடைய தலைவர் அண்ணன் மணி அவர்களுக்கும், ஏனைய என் சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளுடைய செயல் வீரர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறி, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப் அவர்கள்.

***திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இப்பேரவையில் ஆற்றிய பேருரைமீது மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள் முன்மொழிந்த நன்றியுரையை இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன். தேர்தலில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தை எங்களுடைய கட்சி வரவேற்கிறது.

ஜனநாயகமா, சர்வாதிகாரமா என்ற கோஷத்தை முன்வைத்து இந்தத் தேர்தலை எங்களுடைய கட்சி சந்தித்தது. தமிழகத்து மக்கள் ஜனநாயகத்தின் பக்கம் நிற்க வேண்டுமென்று எங்களுடைய கட்சி வேண்டுகோள் விடுத்தது. அந்த வேண்டுகோளை ஏற்று மகத்தான தீர்ப்பினைத் தமிழக மக்கள் அளித்துள்ளார்கள். அந்த மகத்தான தீர்ப்பை அளித்த தமிழகத்தின் அனைத்துப் பகுதி மக்களுக்கும், என் தொகுதி மக்களுக்கும் முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கோட்பாடு. ஆளும் கட்சியானாலும், எதிர்க் கட்சியானாலும், இதர பிற கட்சிகளானாலும் இக்கோட்பாட்டை அடியொற்றி சஞ்சரிப்பது இந்த மாபெரும் சபையின் மரபினை, மாண்பினை பாதுகாக்கக் கை கொடுக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். எங்கள் பங்கினை உத்தரவாதமாகத் தருகிறோம். மேதகு ஆளுநர்

அவர்களின் உரை, உயர்வானது, உன்னதமானது. தமிழகத்தினுடைய சர்வ தரப்பு மக்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்தக்கூடிய அளவில் இலக்கு நிச்சயித்துத் தயாரிக்கப்பட்ட உரை என்று நாங்கள் இந்த உரையைப் பார்க்கிறோம்.

இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ ரேஷன் அரிசி. இது நடைமுறைப்படுத்தப்பட்ட பின், மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது. தமிழகத்தில் மட்டுமல்ல, நாட்டின் பிற மாநிலங்களில்கூட இது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நாங்கள் கருதுகின்றோம். ரேஷன் அட்டையில் பொறிக்கப்பட்ட ஆங்கில எழுத்துக்களை வைத்து ரேஷன் அரிசியின் விலையைக் கடந்த ஆட்சி நிர்ணயம் செய்தது. 'பி' எழுத்துக்கு ஒரு விலை, 'ஒய்' எழுத்துக்கு இன்னொரு விலை. 'ஜி' எழுத்தென்றால் ஒன்றுமில்லை என்ற நிலை. அந்தக் காலத்தில்கூட 'பி' அட்டைக்குக்கூட ரேஷன் அரிசி இரண்டு ரூபாய்க்குக் கிடைத்ததில்லை என்பதைச் சுட்டிக்காட்ட நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம்.

"நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது"

என்று கூறுவார் வள்ளுவர். இன்றைக்குத் தமிழகத்திலே வறுமையால் கண்ணுறக்கம் இல்லாமல் கிடக்கும் கோடிக்கணக்கான ஏழை மக்கள் நிம்மதியாகக் கண்ணுறங்குவார்கள். அந்தக் கோடிக்கணக்கான மக்கள் இந்த அரசைத் தங்களுடைய கண்மணிபோல் பாதுகாப்பார்கள் என்பது திண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–10

மதமாற்றத் தடைச் சட்டத்தைத் திரும்பப் பெறுவதாக அறிக்கை கூறுகிறது. இந்த நாட்டில் இருக்கக்கூடிய அரசியல் அமைப்புச் சாசனம் அனைத்து மக்களுக்கும் மத சுதந்திரத்தை உத்தரவாதம் செய்கிறது. இந்த அரசு இந்த நடவடிக்கை எடுப்பதன் மூலமாக, அரசியல் அமைப்புச் சட்டத்தின் மாண்பினை, மகத்துவத்தினைப் பேணிக் காக்கக் கை கொடுக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். எல்லா மதத்தினரும் அன்பைப் போற்றுகிறார்கள். அன்பே கடவுள், அன்பே சிவம் என்றெல்லாம் பேசப்படுகிறது. அந்தக் கோணத்தில் நின்று பார்க்கக்கூடிய நேரத்தில், மதச் சிறுபான்மை மக்களாக இருந்தாலும், மதப் பெரும்பான்மை மக்களாக இருந்தாலும் இந்த முடிவை 100 சதவிகிதம் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர்கள் ஆகலாம், ஆதி திராவிடர்கள் எந்த மதத்தைச்





சார்ந்தவர்களாக இருந்தாலும் ஆதி திராவிடர்களுக்குரிய சலுகைகள் பெறலாம் என்று அறிக்கை கூறுகிறது. இத்தகைய துணிச்சலான அறிவிப்புகள் ஜாதி, மத பேதத்தைக் குறைக்கவும். சமூகச் சீர்திருத்தத்தின் ஆக்கத்தைக் கூட்டவும் கை கொடுக்கும் என்று கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது.

'காணி நிலம் வேண்டும். அதிலே ஒரு ம்ாளிகை கட்டித்தர வேண்டும்' என்றான் பாரதி. பாரதி கேட்ட நிலத்தைப் பொறுத்தவரையில், காணி நிலம் மட்டும்தான் கேட்டார். பாரதி கேட்டதோ காணி நிலம். ஆனால், மாண்புமிகு கலைஞர் அவர்கள் தருவதாக உத்தரவாதம் சொல்லி இருப்பதோ 10 காணி நிலம். (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு சிரம சாத்திய காரியம் என்று கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சி கருதுகிறது. சுலபமான விஷயம் அல்ல. ஆனால், மேற்கு வங்க, கேரள இடது சாரி அரசுகள் இதை வெற்றிகரமாகச் சாதித்து உள்ளன. 7–வது முறையாக, தொடர்ச்சியாக ஒரு அரசாங்கம், மேற்கு வங்கத்திலே ஆட்சிப் பொறுப்பேற்றுள்ளது என்றால், அதற்குண்டான காரணங்களில், அடிப்படை மூல காரணமாக அமைவது நில விநியோகம் என்பதை நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். ஆகவே, காலவரையறை நிர்ணயம் செய்து நில விநியோகத்தைத் துவக்க வேண்டும். அந்த நிலத்தில் ஆழமான அஸ்திவாரத்தை இந்த அரசுக்காக மக்கள் எழுப்புவார்கள் என்பதில் ஐயமில்லை.

சாலைகளைப் பராமரிக்க உயர் முக்கியத்துவம் தரப்படும் என்று உரை கூறுகிறது. இதை நாங்கள் வந்தனை செய்கிறோம். அதே நேரத்தில், தினசரி 5 முதல் 25 வரையிலும் சாலை விபத்துகள் மூலமாகப் பயணிகள் இறந்துகொண்டு இருக்கிறார்கள். இதைப்பற்றி நாங்கள் கவலை கொண்டுள்ளோம். சாலை விபத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை தேவை. சாலை விபத்துகளில் இறப்போரின் குடும்பத்தாருக்கு நிதியும், நீதியும் துரிதமாகக் கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். இன்றைக்குத் தமிழகத்தில் ஏராளமான சிறு தொழில்கள் நசிவின் விளிம்பிலே இருந்துகொண்டு இருக்கின்றன. பீடி, தீப்பெட்டி, உப்பளம், தேனி வளர்ப்பு, கயிறு, முந்திரி, நெசவு போன்ற ஏராளமான தொழில்கள் அழிந்துகொண்டு இருக்கின்றன. இந்தத் தொழில்களைப் பாதுகாக்க வேண்டும்; இந்தத் தொழில்களில் ஈடுபட்டுள்ள இலட்சோப இலட்சம் மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். அரசு மருத்துவமனைகளில்

உள்ள காலியிடங்கள் நிரப்பப்படும்; 'வருமுன் காப்போம்' திட்டம் மீண்டும் அமல்படுத்தப்படும் என்கின்ற இந்த அறிவிப்புகள் எல்லாம் மகிழ்ச்சியைத் தருகின்றன. அரசு மருத்துவமனைகள் நவீனமயமாக்கப்படவேண்டும். மருத்துவக் கல்லூரிகளில் உயர்ந்த சிகிச்சை கிட்டுவதை உத்தரவாதப்படுத்த வேண்டும். நாகர்கோவில், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரியைக் கடந்த ஆட்சிக் காலத்தில் நோய் பிடித்துள்ளது. அந்த மருத்துவக் கல்லூரியின் நோயை அகற்ற உடனடியாக, தேவையான மருத்துவம் செய்யப்பட வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10–15*

இங்ஙனம் எத்தனை, எத்தனையோ நல்ல அம்சங்கள் இந்த உரையில் உள்ளன. அவற்றையெல்லாம் அவையில் கூற நேரம் போதவில்லை. என்னுடைய தொகுதியைப் பற்றி, நான் சார்ந்திருக்கின்ற மாவட்டத்தைப் பற்றி, அதன் தேவைகளைப் பற்றி, நீண்ட காலத் தேவைகளைப் பற்றி ஓரிரு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

நெய்யாறு இடது கரைக் கால்வாய். கடந்த 40 ஆண்டு காலமாகக் கேரள மாநிலத்திலிருந்து, நெய்யார் dam-லிருந்து தண்ணீர் தந்துகொண்டிருந்தார்கள். இரண்டு ஆண்டு காலமாக அந்தத் தண்ணீர் நிறுத்தப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் எத்தனையோ முறை மன்றாடியிருக்கிறோம், போராடியிருக்கிறோம். ஆனால், கடந்த ஆட்சி அதைக் கண்டுகொள்ளவில்லை. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தோழர் டி. மணி அவர்களும், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.பி. பெல்லார்மின் அவர்களும் திருவனந்தபுரம் சென்று அமைச்சர்களை, முதலமைச்சரை எல்லாம் சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். இரண்டு மாநிலங்களுக்கு இடையேயான இந்தப் பிரச்சினை குறித்து சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தரப்பில் பேசினால் போதாது, அரசாங்கம் பேசவேண்டுமென்று அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். அதை இந்த மாமன்றத்தில் தெரிவித்திருக்கிறோம். ஆனால், அரசுத் தரப்பில் பேசுவதற்கு எந்த முயற்சியும் கடந்த காலத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்த விஷயத்தை இந்த அரசாங்கம் கனிவோடு பரிசீலிக்கும் என்று கருதுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தின் தொழில் வளர்ச்சியைக் கணக்கில்கொண்டு ஒரு கனரக ரப்பர் தொழிற்சாலை வேண்டுமென்ற நீண்ட நாள் கோரிக்கை இருந்துகொண்டிருக்கிறது. ஆசியாவிலேயே முதல்



தர ரப்பர் எங்கே விளைகிறது என்று கேட்டால், கன்னியாகுமரி மாவட்டத்தில் விளைகிறது. அந்த ரப்பரைப் பயன்படுத்தி, அந்த மாவட்டத்திலேயே, அந்த மாவட்டத்தில் ஓடக்கூடிய அரசுப் பேருந்துகளுக்குத் தேவையான டயர்களை உற்பத்தி செய்ய முடியும். பல நூறு பேருக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்க முடியும். அதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தேங்காய்ப்பட்டினம்—இரையும்மன் மீன்பிடித் துறைமுகம் கிடப்பில் போடப்பட்ட நிலையில் இருக்கிறது. அதற்குப் புத்துயிர் ஊட்ட வேண்டும். இந்த ஆளுநர் உரையில்கூட மீன்பிடித் துறைமுகங்கள் அமைக்கப்படும் என்று கூறியிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஆனால், தேங்காய்பட்டினம்—இரையும்மன் மீன்பிடித் துறைமுகம் அதில் இடம்பெற வேண்டும்.

குளச்சலில் வர்த்தகத் துறைமுகம் வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடிய கோரிக்கையாக இருக்கிறது. அந்த வர்த்தகத் துறைமுகம் அமைக்கப்பட வேண்டும்.

எங்களுடைய மாவட்டத்தில் ஏராளமான மலையோரப் பகுதிகள் இருக்கின்றன. அந்த மலையோரப் பகுதிகளில், அந்தப் பூமியினுடைய தனித் தன்மையைக் கணக்கில் எடுத்து, அதன் வளர்ச்சிக்காகச் சிறப்புத் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வலிய ஏலா உள்பட மலையோர கிராமங்களின் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலை, பஸ், மின்சாரம், கைவச பூமிக்குப் பட்டா போன்றவை கிடைக்கவும், வன விலங்குகளின் தொல்லையைத் தடுக்கவும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்தப் பேரவையில் பணிவோடு கேட்டுக் கொண்டு, ஆளுநர் அவர்கள் ஆற்றியிருக்கக்கூடிய பேருரைக்கு நன்றி தெரிவித்து, அமைகின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைக் கொடுக்கச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜாண் ஜோசப் அவர்கள் இப்போது பேசுகின்றபோது நில விநியோகம் பற்றிக் குறிப்பிட்டார். அதாவது ஆளுநர் உரையில்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் பேசும்போது உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படும்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அதை நீங்கள் எப்போது என்று சொல்லவில்லையே?

[2006 மே 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, நான் ஒன்றைச் சொல்கிறேன்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** எனக்கு ஆழமான சந்தேகங்கள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் கேட்க வேண்டும். விளக்கம் பெற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்வதை முதலில் கேட்டுக்கொள்ளுங்கள். நேற்று உங்கள் உறுப்பினர் எஸ்.வி. சண்முகம் *10–59*–க்கு ஆரம்பித்து, *11–46*–க்கு முடித்தார். *47* நிமிடங்கள் பேசியிருக்கிறார். இன்றைக்கு நீங்கள் பேசுகிறபோது பேசுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் இங்கே இல்லை. நிறைய குறுக்கீடுகள் இருந்திருக்கும். எனக்குத் தெரியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு நீங்கள் பேசுவதற்கு வேண்டுகோள் கொடுத்த நேரம் *9–56*. நீங்கள் மிகவும் அதிகமாக time கேட்கிறீர்கள். எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு என்று ஒதுக்கியிருப்பது *30* ஆம் தேதி. நீங்கள் இன்றைகுப் பேசவேண்டுமென்றால் அவ்வளவு time கிடைக்காது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இப்போது எங்கள் உறுப்பினர்கள் இங்கே இருந்திருந்தால், அவர்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்திருப்பீர்கள் அல்லவா? அந்த நேரத்தை எனக்குக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் நான் சொல்கிறேன் அல்லவா? எதிர்க்கட்சித் தலைவர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கிற தேதி *30* ஆம் தேதி.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** எதிர்க்கட்சித் தலைவர்கள் வேறு. அனைத்திந்திய அண்ணா தி.மு.கழக பிரதான எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு இன்றைக்கு நீங்கள் நேரம் ஒதுக்கியிருப்பீர்கள். அவர்கள் இல்லை. அந்த நேரத்தை எனக்குத் தாருங்கள்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு, நீங்கள் வேண்டுகோள் கொடுத்த டைம், *9–56*–க்குக் கொடுத்திருக்கிறீர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அது எத்தனை மணிக்குக் கொடுத்தால் என்னங்க?



2006 மே 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது வேண்டுகோளுக்குக் கொடுக்கிறோம். நீங்கள் கேட்கிற அளவிற்கு டைம் கிடைக்காது. நீங்கள் *30* நிமிஷம் பேசிக்கொள்ளலாம், அவ்வளவுதான்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** எப்போது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது பேசலாம் நீங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** ஒட்டுமொத்தமாகவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம். இப்போது பேசலாம் நீங்கள். *30* நிமிஷம் உங்களுக்கு ஒதுக்கப்படும், அவ்வளவுதான்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அப்போது, *30* ஆம் தேதி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *30* ஆம் தேதி உள்ளது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வந்தால்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அது நீங்கள் அனுமதித்தால்தானே வர முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின்னிட்டுத்தான் அது பற்றி யோசிக்கப்படும்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நீங்கள் இன்னும் தீர்ப்புச் சொல்லவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பின்னிட்டுத்தான் அது பற்றி யோசிக்கப்படும்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அதை நீங்கள் பின்னாலே யோசித்துச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மூன்றாவதாக வாய்ப்பு உங்களுக்குத்தான் வருகிறது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** எப்போது? இன்றைக்கா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது, இப்போதுதான்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** எப்போது? இப்போது வாய்ப்புத் தருகிறீர்களா?

[2006 மே 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வேண்டுகோள் கொடுத்ததற்குப் பிறகு உங்கள் பெயர் சேர்க்கப்பட்டிருக்கிறது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்கும்போது நேரம் 9–56. இன்று இரண்டு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். அடுத்ததாக உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறோம். ஆனால், டைம் அரை மணி நேரம்தான். 30 நிமிடங்கள்தான்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** சரி. அப்போது 30 ஆம் தேதி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 30 ஆம் தேதிக்கான அறிவிப்பு பின்னால் வரும். குழுவிலே எடுக்கிற முடிவுப்படி பரிசீலனை செய்து, அதற்குப் பிறகு முடிவு எடுக்கப்படும்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** 30 ஆம் தேதி எதிர்க்கட்சித் தலைவரை நீங்கள் அனுமதிக்கிறீர்கள் என்றே வைத்துக்கொள்வோம். அவருக்குப் பதிலாக நான் பேச வேண்டுமென்று வந்தேன் என்றால், நேரம் கொடுக்க வேண்டும் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி இப்போது நான் முடிவு எடுக்க முடியாது. 30 ஆம் தேதி.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இவர் ஏனுங்க குறுக்கிடுகிறார்? நீங்களும், நானும் இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம். இவர் யாருங்க?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர்தான் தீர்ப்புச் சொல்ல வேண்டும். நான் பேரவைத் தலைவரிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். மற்றவர்களுக்கு இதில் குறுக்கிட எந்தவிதமான உரிமையும் இல்லை, முகாந்திரமும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பேரவைத் தலைவர். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இன்றைக்குப் பேசுகிறீர்களா? 30 ஆம் தேதி பேசுகிறீர்களா?



2006 மே 27]

**செல்வி ஜெ ஜெயலலிதா:** 30 ஆம் தேதி பேசினால் எவ்வளவு நேரம் தருவீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 30 ஆம் தேதி எதிர்க்கட்சித் தலைவர் வந்துவிட்டார் என்றால், அவருக்குக் கொடுக்கிற டைம். இன்றைக்கு என்றால், உங்களுக்கு அரை மணி நேரம்தான் ஒதுக்க முடியும்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** 30 ஆம் தேதி எதிர்க்கட்சித் தலைவருக்குப் பதிலாக நான் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்றைக்குப் பேச வேண்டுமென்றால் அது அவர்.... 30 ஆம் தேதி.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** சரி, இன்றைக்கு எவ்வளவு நேரம் தருவீர்கள்? அதைக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு அரை மணி நேரம் கொடுக்கிறேன்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** சரி, எப்போது தருவீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது பேசலாம் நீங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இப்போதே ஆரம்பிக்கவா? இப்போதே ஆரம்பிக்கலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆரம்பிக்கலாம் நீங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** சரி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! என்னை அரசியலுக்குக் கொண்டு வந்த எனது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்கி, என்னை மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்து, இந்த அவைக்கு மீண்டும் என்னை அனுப்பி வைத்த எனது ஆண்டிப்பட்டி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனது பேச்சைத் தொடங்குகிறேன்.

நீங்கள் 30 நிமிடங்கள்தான் தர முடியும் என்று சொன்னதால், நான் முடிந்தவரை சுருக்கமாகப் பேச முயற்சிக்கிறேன். அது கொஞ்சம் சிரமம். ஏன் என்றால், இந்த ஆளுநர் உரையில் பல தவறுகள் இருக்கின்றன. பல உண்மைக்கு மாறான செய்திகள் இருக்கின்றன. அத்தனைக்கும் விளக்கம் கூறியாக வேண்டும். 30 நிமிடங்கள் இதற்குப் போதுமா என்பது தெரியவில்லை. இருந்தாலும், முயற்சி செய்கிறேன்.

முதலில், ஆளுநர் உரையில், நிலமற்ற ஏழைகளுக்கு 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலத்தைக் கொடுப்பதாக இங்கே 8 ஆம் பாராவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் என்ன சொல்கிறார்கள் என்றால், முந்தைய ஆட்சியில் 2001–2002 ஆம் ஆண்டு இங்கே தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில், அரசு 20 இலட்சம் எக்டேர், அதாவது 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டது. அந்த அடிப்படையில் நிலமற்ற ஏழைகளுக்கு இந்த நிலம் தலா இரண்டு ஏக்கர் என்ற வீதத்தில் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். 2001–2002 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில் 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலம் என்று குறிப்பிட்டிருக்கிறோமே தவிர, அந்த 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலமும் அரசுக்குச் சொந்தம் என்று எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. இதற்கான விளக்கத்தைத் தேர்தல் பிரச்சாரத்தின்போதே நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சருக்கோ, இந்த அரசுக்கோ அதைப் பற்றித் தெரியாது என்று சொல்ல முடியாது. இருந்தாலும், இந்தத் தவறான தகவல், தவறான அறிவிப்பு, மீண்டும் இதில் இடம் பெற்றிருக்கிறது. அரசிடம் இருப்பது மூன்றரை இலட்சம் ஏக்கர் தரிசு நிலம்தான். 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தில் மீதமுள்ள 46.5 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் private பட்டா நிலம்; சிறு, குறு விவசாயிகள் ஆளுக்கு 2 ஏக்கர், 3 ஏக்கர் என்று நிலம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஏழைபாழைகளாக இருப்பதால்தான் அந்த நிலத்தை மேம்படுத்த முடியவில்லை. அதனால்தான் எந்தச் சாகுபடியும் செய்ய முடியவில்லை. அதனால்தான் அது தரிசு நிலமாகக் கிடக்கிறது. ஆகவே, இந்த மூன்றரை இலட்சம் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலம் போக, மீதமுள்ள. (குறுக்கீடு)

முற்பகல் 10–25

***மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நீங்கள் ஏன் குறுக்கிடுகிறீர்கள்?



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** முன்வரிசையிலே இருக்கிற அமைச்சர் எப்போது வேண்டுமானாலும் எழுந்திருக்கலாம், நீங்கள் கொடுத்த Ruling. உங்களுடைய கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** I am not yielding. (Interruption) I am not yielding.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** நாங்கள் பேசும்போது–கடந்த கால வரலாற்றை மறந்து விடாதீர்கள். நீங்கள் சொன்னதற்கு நாங்கள் பதில் சொல்ல வருகிறோம். பதில் சொல்ல என்னை அனுமதிக்கவேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்லியிருக்கிற கூற்றுக்கு நான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், கொஞ்சம் உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, இது நியாயமல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள். ஆளுநர் உரையில் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** பேரவைத் தலைவர் அவர்களே, இது நியாயம் இல்லை. (குறுக்கீடு) இல்லை, இல்லை, என்னைப் பேசவிடுங்கள். நான் என்ன சொல்லப் போகிறேன் என்பதைக் கேட்டுவிட்டுச் சொல்லுங்கள். இந்த மாதிரி ** செய்யக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தையை நீக்குகிறேன். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) கொஞ்சம் பொறுங்கள். அதாவது, இதிலே குறிப்பிட்டிருப்பது தவறு என்று சொல்லியிருக்கிறீர்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அது எப்படித் தவறு என்று நான் விளக்க வேண்டும் அல்லவா? அது எப்படித் தவறு, ஏன் தவறு என்று நான் விளக்க வேண்டும் அல்லவா? சொல்லவிடவில்லை என்றால் எப்படி? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதில் தவறாகப் போட்டிருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2006 மே 27

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது- (குறுக்கீடு) தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொன்னதற்கு அவர் பதில் சொல்லவேண்டும் அல்லவா?

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இன்னும் குற்றச்சாட்டையே நான் சொல்லி முடிக்கவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? நீங்கள் தவறு என்று சுட்டிக்காட்டியதற்குப் பிறகு, அது குற்றச்சாட்டு இல்லையா?

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் சொல்லி முடிக்க வேண்டும். அதற்கு அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தவறு என்று சுட்டிக் காட்டிவிட்டீர்கள் என்றால், அது குற்றச்சாட்டுதானே? அதற்குப் பதில் சொல்லியாக வேண்டும் இல்லையா அவர்கள்?

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் கேள்வியே கேட்கவில்லையே? அப்புறம் எங்கே பதில் சொல்வது? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தவறு என்று சுட்டிக்காட்டிவிட்டீர்கள். (குறுக்கீடு)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் இன்னும் குற்றச்சாட்டைச் சொல்லி முடிக்கவில்லை. எப்படித் தவறு என்கிறீர்கள்? நான் கேட்ட பிறகுதான் இவர்கள் பதில் சொல்ல வேண்டும். பிரச்சினையை, எப்படித் தவறு என்று நான் விளக்க வேண்டும். (குறுக்கீடுகள்) I am not yielding.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். அதற்கு விளக்கம் அளிக்கட்டும். பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், ஏற்கெனவே இந்த அவையில் முதலமைச்சராக இருந்தவர்கள். முதலமைச்சராக இருந்தவர்களுக்கு அவையினுடைய மரபு மிக நன்றாகத் தெரியும். இப்போது மாண்புமிகு ஜெயலலிதா அவர்கள் உறுப்பினராகத்தான் இருக்கிறார். உறுப்பினர்



2006 மே 27] [பேராசிரியர் க. அன்பழகன்]

பேசுகிறபோது, பேசுகிற கருத்துகள் தவறு என்றாலோ, அல்லது மறுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலோ, ஆளுங்கட்சியிலே உள்ளவர்கள், குறிப்பாக அமைச்சர்கள் எழுந்திருந்து மறுப்பதற்கு உரிமை உண்டு.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இன்னும் கருத்தே சொல்லி முடிக்கவில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** சொன்ன செய்திக்கு மறுப்பு. ஆனால், தலைவர் அவர்களே, பேசிய உறுப்பினர் அவர்கள், பேசுகிறபோது ** என்ற ஒரு வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** பின்னாலே ரங்கநாதன் எழுந்து சத்தம் போட்டார். அதற்குத்தான் நான் சொன்னேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** யார் சத்தம் போட்டாலும் ** என்ற அந்த வார்த்தை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் கேட்பது, அந்த வார்த்தை நீக்கப்பட வேண்டும். (குறுக்கீடு)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** பின்னாலே என்ன செய்கிறார்கள் என்று திரும்பிப் பாருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** சொல்லப்பட்ட வார்த்தையை நீக்கிவிட்டு, அவையைக் கட்டுப்படுத்தி நடத்த, அவைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நீக்கும்படியாக நான் எதையும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்கிற அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அது உங்கள் இஷ்டம். நான் பேசி முடிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதற்கு நான் ஒரு வரியில் பதில் சொல்லிவிடுகிறேன்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** என்னங்க இது? இது என்ன நியாயம்? அவருக்கும், இதற்கும் என்ன சம்பந்தம்? அவர் கல்வித் துறைக்குத்தானே அமைச்சர்? அவருக்கும், தரிசு நிலத்திற்கும் என்னங்க சம்பந்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Joint responsibility இருக்கிறது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இருக்கலாம். எனக்குப் பேச நீங்கள் நேரம் கொடுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள். அதாவது, நீங்கள் தவறு என்று சுட்டிக்காட்டியதனாலே — ஆளுநர் அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதை, அந்தக் குறிப்பைத் தவறு என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு) தவறு என்று நீங்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னதனாலே— அதற்கு மறுப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது அல்லவா?

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் சொல்லி முடித்த பிறகு அல்லவா மறுக்க வேண்டும்? என்ன கருத்து என்றே தெரியாது அவர்களுக்கு. என்ன சொல்லப் போகிறேன் என்றே தெரியாது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதலமைச்சராக இருந்தபோது கொடுக்கப்பட்ட Ruling தான். அமைச்சர்கள் எப்போது வேண்டுமானாலும் பேசலாம், குறுக்கிட்டுச் சொல்லலாம் என்று நான் பேசும்போதே சொல்லியிருக்கிறார்கள். இப்போது நான் சொல்வது, மூன்றரை இலட்சம் ஏக்கர்தான் அரசிடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இதே அவையில் நான் கேள்வி கேட்டபோது, எவ்வளவு தரிசு நிலங்கள் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டபோது, இவர்களே பதில் சொல்லியிருக்கிறார்கள், அதுவும் மூன்று அமைச்சர்கள் மாறி, மாறிச் சொன்னார்கள். முதலமைச்சராக இருந்த அவர்கள் எழுந்து சொன்னார்கள். நாங்கள் எட்டரை இலட்சம் எக்டேரைக் கொடுத்திருக்கிறோம் என்று பதில் சொல்லியிருக்கிறார்கள். அது எப்படி எட்டரை இலட்சம் எக்டேரைக் கொடுத்துவிட்டு, இப்போது மூன்றரை இலட்சம்தான் இருக்கிறது அரசிடம் என்று எப்படிச் சொல்கிறார்கள் என்றுதான் தெரியவில்லை. அவைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கிற குறிப்பு.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** சொன்னது புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் மீண்டும் சொல்கிறேன். அரசிடம் உள்ளது மூன்றரை இலட்சம் ஏக்கர் தரிசு நிலம்தான். தனியாரிடம் உள்ளது நாற்பத்தாறரை இலட்சம் ஏக்கர் தரிசு நிலம். அவையெல்லாம், சிறு,



குறு விவசாயிகளிடம் பட்டா நிலங்களாக உள்ளன. அவர்கள் ஏற்கெனவே ஏழைகளாக இருப்பதால்தான், மேம்படுத்த முடியாமல் அந்த நிலங்களைத் தரிசாக விட்டிருக்கிறார்கள். ஆகவேதான் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்பதை அறிவித்து, பெரிய தொழில் முதலீட்டாளர்கள் (குறுக்கீடு) என்னங்க இது? நான் இன்னும் சொல்லியே முடிக்கவில்லையே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தயவுசெய்து அம்மையார் அவர்கள், (குறுக்கீடு) தயவுசெய்து அம்மையார் அவர்கள் கடந்த கால ஆட்சியை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். (குறுக்கீடு) சில நேரங்களில்..

**செல்வி ஜெ ஜெயலலிதா:** கடந்த கால ஆட்சி, இப்போது உங்கள் ஆட்சிதான். நன்றாகத் தெரிகிறது. அதனால்தான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். வாய்ப்புக் கொடுக்கிறேன். அவர் சொன்னதற்குப் பிறகு, நீங்கள் உரையாற்றுங்கள். உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. உட்காருங்கள்.

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இல்லை, சில நேரங்களில் (குறுக்கீடு) எத்தனை முறை தாங்கள் குறுக்கிட்டிருக்கிறீர்கள் என்பதையெல்லாம் நான் நன்றாக அறிவேன். நாடும் நன்றாக அறியும். (குறுக்கீடு)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** தேவையிருந்தால்தான் நான் குறுக்கிடுவேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்::** கொஞ்சம் பொறுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் கேட்கிறேன். இல்லை.(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தவறு என்று சுட்டிக்காட்டியதால் பேசவிடுங்கள் என்று சொல்கிறார்கள். (குறுக்கீடு)

[2006 மே 27

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** சபாநாயகர் அவர்களே, என்னைப் பேசவிடுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் பேசும்போது நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நீங்கள் தந்த அந்த அறிக்கையில், அதாவது நிதிநிலை அறிக்கையில் இப்படிப் பிரித்துக் கூறவில்லை. அரசு நிலம் இவ்வளவு, அரசு அல்லாத நிலம்...(குறுக்கீடு)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நீங்கள் சொல்லவேண்டாம், அதை நீங்கள் சொல்லவேண்டாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** சபாநாயகர் அவர்களே, அரசு கைவசம் உள்ள நிலம் என்றோ, அரசு அல்லாத தனியார் வசம் உள்ள நிலம் என்றோ அந்த அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. அதையேதான் நாங்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம். குறிப்பிட்டுவிட்டு, 20 இலட்சம் எக்டேர், அதாவது 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் என்று குறிப்பிட்டிருப்பது, இதை மேம்படுத்தி நிலமற்ற விவசாயிகளுக்குத் தலா இரண்டு ஏக்கர் வழங்குவோம் என்று குறிப்பிட்டிருப்பது, அரசு நிலமாக இருந்தாலும் சரி, அது தனியார் நிலமாக இருந்தாலும் சரி, இரண்டையும் செம்மைப்படுத்தி வழங்குவதுதான் அதற்குப் பொருளே தவிர வேறு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படிங்க இது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், மணி. மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இரண்டு சந்தேகங்கள் எழுகின்றன. ஒன்று, நிலமற்ற ஏழைகளுக்கு அந்த நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நாற்பத்தாறரை இலட்சம் ஏக்கர் ஏழைகளிடமிருக்கின்றபோது, அந்த ஏழைகளிடமிருந்து இந்த நிலங்களைப் பறித்து வேறு ஆட்களுக்குக் கொடுக்கப் போகிறார்களா? இரண்டாவது, நிலமற்ற ஏழைகளுக்கு அந்த நிலம்..



2006 மே 27]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அந்த நிலங்களை எடுத்து மேம்படுத்தி, அந்த ஏழைகளுக்கே கொடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இப்போது சொல்கிற புது விளக்கம், யோசித்து, சமயோஜிதமாகச் சொல்லியிருக்கிறார். இருக்கட்டும். இப்போது இன்னொரு சந்தேகம்—நாங்கள் ஆட்சியில் இருக்கும்போது உழவர் பாதுகாப்புத் திட்டம் என்று ஒன்று கொண்டு வந்தோம். அதில், total number of beneficiaries—பயனீட்டாளர்கள்—ஒரு கோடியே, 37 இலட்சம் பேர். அதில் நிலமற்ற ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்கள் 86 இலட்சம் பேர். ஆகவே, நீங்கள் இன்னும் enumeration செய்தீர்களோ, இல்லையோ, தெரியவில்லை. உழவர் பாதுகாப்புத் திட்டத்திற்காக நாங்கள் செய்த enumeration-ல் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களே 86 இலட்சம் பேர் இருக்கிறார்கள். முதலமைச்சர் சொன்ன அறிவிப்புப்படி, நிலமற்ற ஒவ்வொரு ஏழைக்கும் 2 ஏக்கர் நிலம் தரப்படும் என்றால், இந்த 86 இலட்சம் நிலமற்ற ஏழையெளிய விவசாயத் தொழிலாளர்களுக்குத் தலா 2 ஏக்கர் கொடுக்க வேண்டுமென்றால், ஒரு கோடியே 72 இலட்சம் ஏக்கர் நிலம் வேண்டும். எங்கேயிருந்து கொடுப்பீர்கள்? பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இந்தத் திட்டம் முதலமைச்சர் அறிவித்தது. முதலமைச்சரே விளக்கம் சொல்லட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** முன்னவருக்கு அந்த உரிமை உண்டு. (குறுக்கீடு) முன்னவருக்கு அந்த உரிமை உண்டு. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அவை முன்னவர் பேசும்போது உட்காருங்கள். (குறுக்கீடு)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நீங்கள் எங்கேயிருந்து கொடுப்பீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். முன்னவர் பதில் சொல்கின்றார்.

[2006 மே 27

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஒவ்வொரு ஏழைக்கும் தருவோம் என்று சொல்லவில்லை. நிலமற்ற ஏழைக்கு ஒவ்வொருவருக்கும் 2 ஏக்கர் என்று சொல்லப்பட்டதே தவிர, நிலமற்ற ஏழை அத்தனை பேருக்கும் கொடுக்கப்படும் என்று பொருள் அல்ல. ஆகவே, அம்மையார் அவர்கள் சொல்வது, கருத்து விளக்கம் இல்லாததனுடைய விளைவு. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! வாக்குறுதிகளைக் கொடுத்துவிட்டு, முடியாது என்று தெரிந்ததும், இப்போது நழுவுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதெல்லாம் வேண்டாம். இப்போது நீங்கள் மற்ற subject-க்கு வாருங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** தேர்தல் வாக்குறுதியாகச் சொன்னது, நிலமற்றவர்களுக்குத் தலா 2 ஏக்கர் நிலம் தரப்படும்; (குறுக்கீடு) நிலமற்றவர்களுக்குத் தலா 2 ஏக்கர்..

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, 50 இலட்சம் ஏக்கர் நிலம்தான் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோமே தவிர, இவர்கள் சொன்னதுபோல, மொத்தம் ஒரு கோடியே 72 இலட்சம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடு) 50 இலட்சம் ஏக்கரைப் பிரித்து 2 ஏக்கர் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறோம். அதுதான் தேர்தல் வாக்குறுதி. வாக்குறுதியைச் சரியாகப் படிக்க வேண்டும். அந்தத் தேர்தல் வாக்குறுதியைக் கலைஞர் சொல்லும்போது, அதைப் பண்படுத்திக் கொடுப்போம் என்கிற வார்த்தையை அதிலேயே சொல்லியிருக்கிறார். இப்போது அவர் சமயோஜிதமாகச் சொன்னது அல்ல. தேர்தல் அறிக்கையில் சொல்லுகிறபோதே, அந்தத் தரிசு நிலங்களைப் பண்படுத்தி, (குறுக்கீடு) 50 இலட்சம் ஏக்கரை விவசாயிகளுக்கு, நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் கொடுக்கப்படும் என்று தெள்ளத்தெளிவாக ஆராய்ந்து சொல்கிற முதல்வர்தான் இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞரே தவிர, வேறு யாரும் இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** தட்டுங்கள்! ஆனால், உங்கள் கருத்தில் பிழை இருக்கிறது. உங்கள் வாக்குறுதி நிறைவேறாது. அதனால் நீங்கள் எவ்வளவு மேசையைத் தட்டினால் என்ன? அடுத்தது, இங்கே பேசிய உறுப்பினர்கள்.. (குறுக்கீடு)



2006 மே 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நீங்கள் எல்லோரையும் தலையிட அனுமதிக்கப் போகிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அவர்கள் பேசட்டும். பேசவிடுங்கள். பதில் சொல்லியாயிற்று. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினருக்கு நான் சொல்கிறேன். அவர்கள் பேசவேண்டும் என்று ஆரம்பித்தாயிற்று. அதற்கு, அவர்கள் சொன்னதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது. திரும்ப அடுத்த subject-க்கு அவர்கள் வரட்டும். (குறுக்கீடு) உட்காருங்கள். அடுத்த subject-க்கு அவர்கள் வரட்டும். உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே....

*முற்பகல் 10-35*

**செல்வி ஜெ ஜெயலலிதா:** விளக்கம் தருவதற்கு—அவருக்குப் பேசுகிற வாய்ப்புக் கிடைக்கும்போது சொல்லட்டும்.

இப்போது இன்னொரு தேர்தல் வாக்குறுதி—அதை ஆளுநர் உரையிலும் அறிவித்திருக்கிறார்கள். அதாவது, விவசாயிகள் வாங்கிய கூட்டுறவுக் கடன்கள், கூட்டுறவு வங்கிகளிலிருந்து பெறப்பட்ட கடன்கள் எல்லாம் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். பதவியேற்பு விழா மேடையிலேயே இதற்கான கோப்பிலும் கையெழுத்திடப்பட்டது. இந்தக் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன்கள், 6,866 கோடி ரூபாய் மதிப்புடையதாகும். அதைத்தான் தோராயமாக, 7,000 கோடி ரூபாய் என்கிறார்கள். ஒரு பேச்சுக்கு, உண்மையாகவே தள்ளுபடி செய்கிறார்கள் என்றே வைத்துக்கொள்வோம். சில நாணயமான விவசாயிகள் ஏற்கெனவே முழுக் கடனையும் செலுத்திவிட்டார்கள். அப்போது, அவர்களுக்கு அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டாமா? அதுதானே நியாயம்? (குறுக்கீடு) இல்லை, இல்லை! கட்டாதவர்களுக்கு நீங்கள் தள்ளுபடி செய்கிறீர்கள். அப்படியென்றால், ஏற்கெனவே கட்டியவர்களுக்கு நீங்கள் முழுவதுமாக refund செய்ய வேண்டும். அப்படியானால், மேலும் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டும். 7,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டும். இதைச் செய்வீர்களா? வழங்குவீர்களா?

மேலும், கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் ஓர் அறிவிப்பு வெளியிட்டிருக்கிறார். விவசாயிகளுக்குப் புதிதாக அவர்கள் விவசாய, வேளாண் operations தொடங்குவதற்கு, ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்கப்படும் என்று கூறியிருக்கிறார். குறுவை season விரைவில் தொடங்கவுள்ளது, தொடங்கப்படவுள்ளது. ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என்று ஏற்கெனவே முதலமைச்சர் அறிவித்திருக்கிறார். அப்படியானால் எப்படி இந்த ஆயிரம் கோடி ரூபாயை நீங்கள் விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுக்கப் போகிறீர்கள்? தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள்—Primary Agricultural Co-operative Banks—இப்போதே செயல்பட முடியவில்லை, இயங்க முடியவில்லை. ஏனென்றால், அவர்களிடம் பணம் இல்லை. எப்போது இந்தக் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்ற அறிவிப்பு வந்ததோ, அப்போதே விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்துவதை நிறுத்திவிட்டார்கள். அதனால் அரசாங்கம் இந்த முழுத் தொகையை இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கு reimburse செய்தால் தவிர, அவர்களால் புதிதாகக் கடன் கொடுக்க முடியாது. ஏற்கெனவே வாங்கிய கடனுக்கு வட்டி, அபராத வட்டி, எங்கள் அரசு தள்ளுபடி செய்துவிட்டது. ஆயிரத்து சொச்சம் கோடி ரூபாய், தள்ளுபடி செய்துவிட்டோம். இப்போது நீங்கள் அசலைத் தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். சரி, that is on paper. விவசாயிகள் கையில் பணம் இல்லை.

ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டால், குறுவை சாகுபடி, அதற்கான வேலைகள், ஆயத்தப் பணிகள் இப்போதே தொடங்கப்பட வேண்டும். அவர்களுக்குக் கையில் காசு வேண்டும். அப்படியானால், அமைச்சர் அவர்கள் அறிவித்த ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு, கூட்டுறவு வங்கிகள் எப்படிக் கடன் அளிக்க முடியும்? இப்போதே இந்த வங்கிகளால் செயல்பட முடியவில்லை. காரணம், ஏற்கெனவே விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட advance–களில் 70 சதவீதம், வங்கிகள் தங்கள் சொந்தப் பணத்திலேயே கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இப்போது உடனடியாக அரசாங்கம், இந்த 7,500 கோடி ரூபாயை வங்கிகளுக்குக் கொடுக்கவில்லையென்றால், அவர்களால் புதிதாகக் கடன்கள் கொடுக்க முடியாது. அப்படியிருக்கும்போது, ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணையை நீங்கள் திறந்தால்கூட, விவசாயிகளால் வேளாண் பணிகளைத் தொடங்க முடியாது. இதைப் பகுதியாகத் திருப்பிச் செலுத்தினால்கூட போதாது. Non-viable Banks–ஆல் function செய்ய முடியாது.



அதுமட்டுமல்லாமல், இந்தக் கூட்டுறவு வங்கிகளுக்கான கடனைக் கொடுப்பது மாநில அரசு அல்ல. NABARD கொடுக்கிறது. NABARD–க்கு இந்தப் பணம் எங்கிருந்து வருகிறது? Reserve Bank of India–இடமிருந்து வருகிறது. ஆகவே இதற்கு NABARD அனுமதி பெற்றாகிவிட்டதா? Reserve Bank of India அனுமதி பெற்றாகிவிட்டதா? ஏற்கெனவே அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் ஊருக்கு, தனது தொகுதிக்குச் சென்றிருந்தபோது, இதைப் பற்றிக் கேட்டபோது, சட்டச் சிக்கல் இருக்கிறது என்று சொன்னார். அதற்கு நேற்று முதலமைச்சர் விளக்கம் சொல்லியிருக்கிறார்.

இந்தச் செய்தி பத்திரிகையில் வந்தவுடனேயே கோ.சி. மணி தன்னுடன் தொடர்பு கொண்டதாகவும், தொலைபேசியில், அப்படி நான் சொல்லவில்லை என்று சொன்னதாகவும் இங்கு தெரிவித்தார். உண்மையாக திரு. கோ.சி. மணி அப்படிச் சொல்ல வில்லையென்றால், ஏன் அவர் தனிப்பட்ட முறையிலே, வெளியிலே யாருக்கும் தெரியாமல், முதலமைச்சருக்குத் தனிப்பட்ட முறையில் ஃபோனில் பேசி 'நான் அந்த மாதிரிச் சொல்லவில்லை' என்று சொல்கிறார்? ஊரறிய, உலகறிய பத்திரிகையிலே அவருடைய பெயரில் ஓர் அறிக்கை வந்திருக்கும்போது, அதற்கு அவர் பத்திரிகைகளிலேயே மறுப்பு விட்டிருக்கலாமே? ஆகவே, அன்றையதினம் அந்த மறுப்பு வெளியிட்டிருக்கலாமே? திரு. கோ.சி. மணி அவர்கள், இதற்கு statement–ல் என்ன வந்தது? ரிசர்வ் வங்கி அனுமதி பெற NABARD அனுமதி பெற வேண்டும்; அதில் சட்டச் சிக்கல் இருக்கிறது; இந்த அனுமதியை முதலமைச்சர்தான் பெற்றுத் தரவேண்டும் என்று சொன்னார். ஆகவே, முதலமைச்சர் அந்த அனுமதியைப் பெற்றுவிட்டாரா? இல்லையென்றால், எப்போது பெறுவீர்கள்? எப்போது தள்ளுபடி செய்வீர்கள்?

முற்பகல் 10–40

அதுமட்டுமல்ல—கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன்தான் தோராயமாக 7,000 கோடி ரூபாய் மதிப்புடைய கடன்கள். இன்னும் நிறைய விவசாயிகள், இலட்சக்கணக்கான விவசாயிகள், குறிப்பாக டெல்டா பகுதியில் உள்ள விவசாயிகள், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், இந்த மாவட்டங்களிலுள்ள இலட்சக்கணக்கான விவசாயிகள் தேசிய வங்கிகளிடம் கடன்கள் பெற்றிருக்கிறார்கள். நிலவள வங்கிகளில்—L.D.Bank–களிடம் கடன் பெற்றிருக்கிறார்கள். Commercial Bank–களிடம் கடன்கள் பெற்றிருக்கிறார்கள். ஏன், அவர்கள் மட்டும்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2006 மே 27

விவசாயிகள் இல்லையா? அவர்களும் வறட்சியால் பாதிக்கப் படவில்லையா? அந்தக் கடன்களையும் ஏன் தள்ளுபடி செய்யவில்லை? (குறுக்கீடு) இவர் என்னங்க தலையிடுகிறார்? இவருக்கும், அதற்கும் என்ன சம்பந்தம்?

***மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** நாங்கள்தான் சொல்ல வேண்டும். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் வட்டி போன வருடம் தள்ளுபடி பண்ணினார்களே? அவர்கள் தள்ளுபடி பண்ணும்போது எல்லாவற்றுக்கும் மொத்தமாகச் சேர்த்துத்தான் தள்ளுபடி பண்ணினார்களா? இதற்கு மட்டும் தள்ளுபடி பண்ணினார்களா? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இப்போது என்னுடைய கேள்வி.(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** எல்லாவற்றுக்கும் சேர்த்துப் பண்ணினார்களா, கூட்டுறவு Bank–க்கு மட்டும் பண்ணினார்களா?

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இப்போது மிகச் சாமர்த்தியமாகப் பேசுவதாக நினைத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தேர்தல் வாக்குறுதி கொடுத்தது முதலமைச்சர். முதலமைச்சர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், (குறுக்கீடு) என்னங்க, அவர் பேசிக் கொண்டேயிருக்கிறார்? நீங்கள்தான் control பண்ண வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது தேர்தல் அறிக்கையிலே, கூட்டுறவுக் கடனைத்தான் சொல்லியிருக்கிறார்கள். கூட்டுறவுகளிலே கூட்டுறவுக் கடன்களை; மொத்தமாக, overall-ஆக விவசாயிகள் வாங்கிய கடன்களைப் பூராவும் சொல்லவேயில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். பதிலில் சொல்லலாம், உட்காருங்கள்.



2006 மே 27]

**செல்வி ஜெ ஜெயலலிதா:** தேசிய வங்கிகள், நிலவள வங்கிகள், commercial வங்கிகள், இந்த வங்கிகளிடம் விவசாயிகள் பெற்ற கடன்கள்கூட இன்னும் ஒரு 7,000 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும். ஆக, இவர்கள் மட்டும் விவசாயிகள் இல்லையா? இவர்களும் வறட்சியால் பாதிக்கப்படவில்லையா? இவர்கள் மட்டும் ஏழைகள் இல்லையா? ஆகவே, விவசாயிகளில் ஒரு பிரிவினருக்கு மட்டும் கடன்களைத் தள்ளுபடி செய்துவிட்டு, சரிபாதியானவர்களுக்குக் கடனைத் தள்ளுபடி செய்யவில்லையென்றால் என்ன நியாயம்? விவசாயிகளுக்கு நன்மை செய்கின்ற அரசு என்றால், 13,000 கோடி ரூபாய், கிட்டத்தட்ட 14 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்குக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும். அதை இந்த அரசு செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லப்பட்ட கருத்து, கூட்டுறவு வங்கிகள் மூலமாக விவசாயிகள், விவசாயத்திற்காக வாங்குகிற கடன் மூலமாகப் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் விவசாயத்தைத் தொடர்வதற்கு ஏதுவாக மறுபடியும் கடன் வாங்குவதற்கு வாய்ப்பாக, கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனை ரத்துச் செய்யும், செய்வோம் என்று அறிவிக்கப்பட்டதே தவிர, விவசாயிகள், மாமன், மச்சான் இடத்திலே வாங்கிய கடன்கள் எல்லாம் ரத்துச் செய்யப்படும் என்று அறிவிக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதியமைச்சர் அவர்கள் ஏதோ நகைச்சுவையாகப் பேசுவதாக எண்ணிக்கொண்டு same side goal அடித்துக் கொண்டிருக்கிறார். மாமன், மச்சானிடம் வாங்கிய கடன்களை எல்லாம் விவசாயிகள் தள்ளுபடி செய்வீர்களா என்று நான் கேட்கவில்லை. கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன்களை மட்டும் தள்ளுபடி செய்வோம் என்று சொல்கிறீர்களே? நிலவள வங்கி, தேசிய வங்கி, Commercial வங்கி, இங்கேயெல்லாம் கடன் பெற்ற விவசாயிகளும் ஏழைகள்தானே? அந்த.. (குறுக்கீடு) சொல்லிக் கொடுக்கிறார் பாருங்கள் அங்கே! அவர்களுக்கே தோன்றாதுபோல் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** உங்களிடம்தான் கேட்டுச் சொல்ல வேண்டுமா?

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இந்தக் கடன்களை எல்லாம் ஏன் தள்ளுபடி செய்யவில்லை? ஏன் அறிவிக்கவில்லை என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லப்பட்ட கருத்து, சிறிய விவசாயிகள், குறு விவசாயிகள், அவர்கள் வாங்கிய கடனுக்குத்தான் சொல்லப் பட்டிருக்கிறதே தவிர, பெரிய நிலச்சுவான்தார்கள் வாங்கிய கடனுக்கெல்லாம் சொல்லப்படவில்லை. ஆகவே, விவசாயிகள் அனைவரையும்—விவசாயிகள் அனைவருடைய கடன்களும் தீர்க்கப்படுமென்பது கருத்து அல்ல. விவசாயத்திலே ஈடுபட்டிருப்பவர்கள் பாதிக்கப்படாமல் விவசாயத்தைத் தொடர எந்த வகையிலே செய்ய வேண்டுமோ, அந்த வகையிலே செய்யப்பட்டிருக்கிறது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** எல்லா விவசாயிகளுக்கும் தள்ளுபடி செய்யப் போவதில்லை என்று நிதியமைச்சரே சொல்லிவிட்டார். இதைவிட ஒரு. (குறுக்கீடு) என்னங்க, ஆளுக்கு ஆள் தலையிடுகிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். அமைச்சருக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** அதனால்தான் பிரச்சினையே வந்தது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** என்னுடைய சந்தேகத்தையெல்லாம் கேட்கக் கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்கிறேன், உறுப்பினர்கள் எல்லோரும் பேசக் கூடாது. அமைச்சர் எழுந்து, பதில் சொல்லவேண்டும்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகளிலேயே பெரிய விவசாயிகள் இருக்கிறார்கள். 17 இலட்சம், 18 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கடன் பெற்ற விவசாயிகள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் இன்றைக்கு மகிழ்ச்சியில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்கள் சொல்கிறார்கள், 17 இலட்சம் ரூபாய் கடன் இருந்தது. இப்போது அதைத் தள்ளுபடி செய்திருக்கிறது இந்த அரசு. ஆகவே, கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றவர்கள் எல்லாம் ஏழைகள் அல்ல, சிறு, குறு விவசாயிகள் அல்ல. இன்னும் சொல்லப் போனால், டெல்டா மாவட்டங்களில் தேசிய வங்கிகளில் கடன் பெற்றவர்கள்தான் சிறு, குறு விவசாயிகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.





**செல்வி ஜெ ஜெயலலிதா:** கூட்டுறவு வங்கிகளைவிட தேசிய..

முற்பகல் 10–45

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியில் யாருக்கு வட்டி தள்ளுபடி செய்யப்பட்டதோ, அந்த விவசாயிகளுக்கு, அது சிறிய விவசாயிகளாக இருந்தாலும், பெரிய விவசாயிகளாக இருந்தாலும், அவர்களுக்கு எல்லாம் கூட்டுறவுக் கடன் ரத்துச் செய்வோம் என்று எங்கள் தேர்தல் அறிக்கையிலே, எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள் தேர்தல் நேரத்திலேயும் அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கடன் ரத்துச் செய்யப்படும். கடந்த காலத்திலே தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலேயோ, மற்ற வங்கிகளிலேயோ அப்போதிருந்த அரசு வட்டியைத் தள்ளுபடி செய்யவில்லை. ஒன்று. இரண்டு, NABARD இடத்திலே அனுமதி பெற்றுவிட்டீர்களா என்று கேட்டார். ரிசர்வ் வங்கியிலே அனுமதி பெற்றீர்களா என்று கேட்டார். நம்முடைய இந்தியாவினுடைய நிதி அமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்திலே, இதைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், கலைஞர் அறிவித்திருக்கின்ற இந்தத் திட்டங்கள் எல்லாம் சாத்தியமான திட்டங்கள்தான் என்று சொன்னதோடு மட்டுமல்ல, NABARD வங்கியிலேயும், ரிசர்வ் வங்கியிலேயும் பேசி, தமிழக அரசிடமிருந்து வரக்கூடிய அந்தக் கடிதத்தைப் பரிசீலித்து, இந்தக் கடன்களை எல்லாம் ரத்துச் செய்துவிட்டு, புதிய கடன்களைக் கொடுப்பதற்கான ஏற்பாடு செய்வதற்கு அவர் முயற்சித்துக் கொண்டிருக்கிறார். அந்த அறிக்கைகள், அந்த வாக்குறுதிகள் நிச்சயமாக இந்த ஆட்சியிலே நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்::** மாண்புமிகு உறுப்பினர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய நிதியமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் இன்றைய முதலமைச்சர் வெளியிட்ட தேர்தல் வாக்குறுதிகளை எல்லாம் பாராட்டினார். அதைச் சொல்லி அவரும் வாக்குக் கேட்டார். பின்னர் நாடாளுமன்றத்தில் மாநிலங்களவையில், கிலோவுக்கு 2 ரூபாய்க்கு அரிசி கொடுப்பதாகத் தமிழக அரசு அறிவித்திருக்கிறதே? அதற்கு நீங்கள் நிதி உதவி செய்வீர்களா என்று கேட்டதற்கு, இல்லை, இல்லை, எங்களுக்கும், அதற்கும் தொடர்பு இல்லை, அது முழுக்க, முழுக்க மாநில அரசின் திட்டம்தான். மாநில அரசுதான் அதற்குத் தேவையான நிதியை, அவர்கள்

வருவாயைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, நிதியமைச்சர் இதைப் பாராட்டி இருக்கிறார், அதனால் மத்திய அரசு இதற்கு நிதி வழங்கும் என்றால், மத்திய நிதி அமைச்சர் அத்தகைய எந்த உத்தரவாதமும் அளிக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும்...

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**செல்வி ஜெ ஜெயலலிதா:** இவர் அமைச்சரா, இல்லை ஆகப் போகிறாரா? அந்த இதுல பேசுகிறாரா? (குறுக்கீடு) வருங்கால அமைச்சர் என்ற ** பேசுகிறாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள், மத்திய நிதியமைச்சர் அளித்த சான்றிதழைப் பற்றி இந்த அவையிலே குறிப்பிட்டார். நான் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மத்திய நிதியமைச்சர், மத்திய நிதியமைச்சகம் தமிழகத்திலுள்ள கூட்டுறவு வங்கிகளை மட்டுமல்ல, அனைத்திந்தியாவிலும் இருக்கின்ற கூட்டுறவு வங்கிகளைச் சீர்படுத்தி, அவற்றில் இருக்கின்ற வாராக் கடன்களை முறைப்படுத்தி, அவற்றிற்கு மீண்டும் மறு நிதி வழங்குவதற்காக ஒரு திட்ட அறிக்கையை இந்த மாநில அரசிடம் கேட்டுப் பெற்று, ஏறக்குறைய ஒரு வருடமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மத்திய அரசினுடைய நிதி அமைச்சகம் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துகின்ற வகையிலே, வராத எல்லாக் கூட்டுறவுக் கடன்களையும் தள்ளுபடி செய்து, அதற்குப் புதிதாக நிதி உதவி முற்றிலுமாக மத்திய அரசு அளித்து, கூட்டுறவு இயக்கத்தை மீண்டும் வலுப்படுத்துவதற்கு ஒரு கோரிக்கையினை இந்த மாநில அரசிடம் கேட்டு எத்தனை மாதங்கள் ஆகின்றன? சிவகங்கை கூட்டுறவு வங்கிக்குக்கூட, தேர்தலுக்கு முன்னால் நடந்த சம்பவங்கள் உங்களுக்கு ஞாபகத்தில் இருக்கும். அன்றுகூட நீங்கள் நிதியமைச்சரை மிகக் கடுமையான குற்றச்சாட்டுக்களால்—வார்த்தைகளால் குற்றம் சாட்டினீர்கள். அதற்கு மாண்புமிகு மத்திய நிதியமைச்சர்கூட பதில் சொல்லியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இன்னும்கூட மத்திய அரசு நினைத்தால், நான் உதாரணமாகச் சொல்கிறேன். மாண்புமிகு முன்னாள் உள் துறை அமைச்சர் அத்வானி அவர்களுடைய சொந்தப் பாராளுமன்றத் தொகுதியிலே ஒரு கூட்டுறவு வங்கி திவாலாகி விட்டது. 350 கோடி ரூபாய் பொது மக்களுடைய deposits, வைப்பு நிதி. ஆனால், அன்றையதினம் யஷ்வந்த் சின்ஹா நிதியமைச்சராக இருந்தபோது, அந்த ஒரு வங்கிக்கு மட்டும் 350 கோடி ரூபாயை மத்திய அரசிடம் இருந்து கொடுத்து, அவர் தொகுதியிலுள்ள அந்த deposit-தாரர்களுக்கு மீண்டும் திரும்பக் கொடுத்தார். ஒரு யஷ்வந்த் சின்ஹா அத்வானிக்குச் செய்கின்றபோது, ஒரு சிதம்பரம் ஏன் கலைஞருக்குச் செய்யக் கூடாது? (மேசையைத் தட்டும் ஒலி). எனவேதான், நாம் இன்று கோரிக்கை வைக்க வேண்டும். (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன்.

I am on a clarification point. இன்று மத்திய அரசு மாநில அரசிடம் கோரி இருக்கிறது. (குறுக்கீடு) மத்திய அரசு மாநில அரசிடம் கோரி இருக்கிறது. தமிழகத்தில் கூட்டுறவு இயக்கங்களை, கூட்டுறவு வங்கிகளைச் சீர்படுத்தி, வராத கடன்களைத் தள்ளுபடி செய்து, மீண்டும் அதற்கு re-finance, அதற்கு மறு நிதியுதவி செய்வதற்காக ஒரு பெரிய திட்டத்தை ரிசர்வ் வங்கி வைத்திருக்கிறது, NABARD வங்கி வைத்திருக்கிறது. அதிலே ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை நம்முடைய தமிழக அரசு கேட்டுப் பெறமுடியும்; கலைஞர் அவர்கள் கொடுத்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றமுடியும்; நிறைவேற்றுவோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மத்தியிலேயிருக்கின்ற காங்கிரஸ் அரசு உதவி செய்யும் என்று நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், பேசுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை கூட்டுறவு வங்கியைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இதைப் பற்றி ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்தில், இந்த அவையில் பிரச்சினை எழுப்பப்பட்டு, அதற்கு விரிவான விளக்கத்தை நான் அளித்து, அவையெல்லாம் அவைக் குறிப்பிலே இருக்கின்றன. உறுப்பினர் அவர்களுக்கு நேரம் இருந்தால், அவற்றையெல்லாம் படித்துப் பார்க்கலாம்.

இப்போது நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகள், அதையேதான் அவர்கள் வாழ்வாதாரமாக நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது பெரிய இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், ** என்று சொன்னாரே. அந்த ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அதை ஏற்கெனவே அறிவித்து விட்டீர்களே? ஏற்கெனவே அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது என்று அறிவித்துவிட்டீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** என்னங்க, அவர்களெல்லாம் குறுக்கிடும்போது நீங்கள் அவர்களையெல்லாம் சீக்கிரமாகப் பேசச் சொல்லவில்லை. இப்போது ஏற்கெனவே நான் குறிப்பிட்டதுபோல், இந்த ஆளுநர் உரையில் உண்மைக்கு மாறான பல தகவல்கள் தெரிந்தே கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1 ஆம் பக்கத்தில், 5–வது para-வில் "The economic growth rate of Tamil Nadu has been less than the national average. This Government is determined to reverse this trend and usher in an era of rapid growth" என்றிருக்கிறது. இது முழுக்க, முழுக்க உண்மைக்குப் புறம்பான ஒரு தகவலாகும். 2004–2005 ஆம் ஆண்டில், ஒட்டுமொத்த இந்தியாவிற்கே economic growth rate 6.90 விழுக்காடாகும். ஆனால், அதே 2004–2005 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் economic growth rate 8.73 விழுக்காடாகும். ஆகவே, இந்திய சராசரியைவிட, தேசிய சராசரியைவிட, தமிழ்நாட்டின் economic growth rate குறைவாக உள்ளது என்பது உண்மைக்குப் புறம்பான ஒரு செய்தி.

மேலும், tentative estimate of economic growth for whole of India for 2005-2006 is 8.1%. அதாவது, மதிப்பீடு செய்யப்பட்டிருக்கின்ற economic growth இந்தியா முழுவதற்கும் 2005–2006 ஆம் ஆண்டிற்கு 8.1 விழுக்காடு. ஆனால், அதே மதிப்பீடு தமிழ்நாட்டிற்கு 2005–2006 ஆம் ஆண்டிற்கு, 8.46 சதவிகிதமாகும். ஆகவே, அந்த வகையிலும் தமிழ்நாட்டின் economic growth rate, இந்திய சராசரியைவிட அதிகமாக இருக்கிறது. ஆகவே, இத்தகைய தவறான தகவல்களை ஆளுநர் உரையில் கொடுத்ததற்கு நான் கண்டனம் தெரிவிக்கிறேன்.

மேலும், 14–வது பக்கம், 28–வது para-வில், "This Government will continue the scheme of providing free bicycles to +2 students, implemented

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



by the previous Government with the Central assistance of Rs.20 crores during 2001-2002 and Rs.6 crores during 2002-2003 and continued further from the State funds" என்று இதில் கொடுத்திருக்கிறார்கள். இந்த இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் முழுக்க, முழுக்க மாநில அரசின் திட்டமாகும். மாநில அரசின் சொந்த நிதி வருவாயை வைத்துத்தான் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

2001–2002 ஆம் ஆண்டில் மத்திய அரசு இதற்காக 20 கோடி ரூபாய் வழங்கியது என்றும், 2002–2003–ல் மத்திய அரசு இதற்காக 6 கோடி ரூபாய் வழங்கியது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது முழுக்க, முழுக்க உண்மைக்குப் புறம்பான செய்தியாகும். மத்திய திட்டக் குழு, Union Planning Commission, ஆண்டு ஒதுக்கீட்டை முடிவு செய்கின்றபோது, ஒரு மாநில அரசு நல்ல முறையில் செயல்பட்டிருந்தால், அவர்களிடம் discretionary grant என்று ஒரு தொகை இருக்கும். அதை அவர்கள் எப்படி வேண்டுமானாலும், அவர்கள் விரும்புகின்ற மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யலாம்.

2001–2002 ஆம் ஆண்டில் திட்டக் குழு மனமுவந்து 100 கோடி ரூபாய் அதிகம் கொடுத்திருப்பார்கள். அதேபோல் 2002–2003 ஆம் ஆண்டில் மாநில அரசு சிறப்பாகச் செயல்பட்டது என்பதற்காக, அவர்கள் அந்த discretionary grant–லேயிருந்து ஒரு 50 கோடியோ, 100 கோடியோ கொடுத்திருப்பார்கள். அதை வைத்து, அதிலிருந்து இந்த இலவச சைக்கிள் திட்டத்திற்காக, ரூபாய் 20 கோடியும், ரூபாய் 6 கோடியும் மாநில அரசு எடுத்துக்கொண்டதே தவிர, இந்தத் திட்டத்திற்காக மைய அரசு கொடுத்த நிதி அல்ல. அப்படியானால், இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு இருக்கவேண்டுமே? வேறு எந்த மாநிலத்திலும், இந்த இலவச சைக்கிள்கள் வழங்குகின்ற திட்டம் இல்லையே? ஆகவே, இது மத்திய அரசு நிதி உதவி செய்த திட்டம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், பாரா 29–ல் (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் பேசி முடியுங்கள், time ஆகிவிட்டது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனை குறுக்கீடுகள், எத்தனை குறுக்கீடுகள்? அந்த நேரத்தையெல்லாம் நீங்கள் கணக்கில் எடுக்கவில்லையா? மற்ற உறுப்பினர்கள் நிறையக் குறுக்கீடு செய்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குக் கொடுத்த நேரம் அரை மணி நேரம். அரை மணி நேரம் கொடுத்திருந்தும், அதைத் தாண்டி அதற்கு மேலே போய்விட்டது.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடிகாரத்தைப் பார்க்கவில்லை. மற்ற உறுப்பினர்கள் எவ்வளவு குறுக்கீடுகள் செய்தார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரை மணி நேரம் கொடுத்திருந்தேன். அதற்கு மேலே போய்விட்டது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீங்கள் சொல்கிறீர்கள். During the previous regime — கடந்த ஆட்சியில் மதமாற்றத் தடைச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது என்று சொல்கிறீர்கள். பக்கம் 14, para 29. அது கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம். இப்போது அதில் என்ன சொல்லப்பட்டு இருக்கிறது? அதைத் திரும்பப் பெறவேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்று, அதன் காரணமாக, 18-5-2004 அன்று ஓர் அவசரச் சட்டத்தின்மூலம், அந்தச் சட்டம் திரும்பப் பெறப்பட்டாலும், அதற்கான ஒப்புதலை சட்டப் பேரவையில் வைத்துப் பெற்றிடாத காரணத்தால், அந்த மதமாற்றத் தடைச் சட்டம் இன்னமும் ரத்து ஆகாத நிலையில் உள்ளது.

"அண்மையில் இந்திய அரசு ஒரு நேர்வில் அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சுதந்திரமாகச் செய்திட்ட.."—அப்படியெல்லாம் இருக்கிறது. இது ஏற்கெனவே தேர்தல் நேரத்தில் இன்றைய முதலமைச்சர் இதைப் பற்றிப் பேசி, தேர்தல் பிரசாரத்தின்போதே இதற்கான விளக்கத்தை நான் கூறி இருக்கிறேன். ஆனால், மீண்டும் அதையே ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இது எப்படி இருக்கிறது என்றால், ஒருவர் இறந்து போய், அந்தப் பிரேதத்தை புதைத்துவிட்டு, ஒரு முறை அடக்கம் செய்துவிட்டு, அதன் பின்னர், (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவர் சாகவில்லை, இன்னும் உயிரோடு இருக்கிறார் என்று சொல்லி, மீண்டும் புதைக்கப்பட்ட பிரேதத்தை வெளியே எடுத்து, இரண்டாவது முறையாக அடக்கம் செய்யப் போகிறோம் என்று சொல்வதுபோல் இருக்கிறது. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், இது Ordinance என்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இல்லை (குறுக்கீடு) இல்லை. பிரேதத்தைப் பற்றிச் சொன்னார்கள். சாவில் சந்தேகம் இருந்தால் அதையும் செய்துதான் பார்க்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, ஒரு நிமிடம்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாவில் சந்தேகம் இருக்கிறதா, இல்லையா..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஒரு Point of order இருக்கிறது. அந்த Point of order-க்குப் பதில் சொல்லட்டும்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அந்தச் சந்தேகத்திற்கு நான் பதில் சொல்கிறேன். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) ஆமாம். Point of order raise பண்ணி இருக்கிறார் அவர்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இங்கே சொல்கிறபோது, மதமாற்றத் தடைச் சட்டம் — ஏற்கெனவே ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், அது தேர்தல் நேரத்திலே சொல்லப்பட்டுவிட்டதாகவும், இப்போது, ஏற்கெனவே புதைத்த பிணத்தை மீண்டும் தோண்டி எடுப்பது என்றெல்லாம் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். ஒரு அவசரச் சட்டம் கவர்னரால் பிறப்பிக்கப்பட்டு, அது ஆறு மாத காலத்திற்குள் இந்த அவையிலே வைத்து

[திரு. சி. ஞானசேகரன்] [2006 மே 27

சட்டமாக்கப்பட்டு, அதை repeal செய்யவில்லை என்று சொன்னால், அந்த அவசரச் சட்டம் அமலில் இருப்பதாகத்தானே பொருள். ஆறு மாத காலத்திற்குள்ளே இந்த அவையிலே நீங்கள் அந்த அவசரச் சட்டத்தை இங்கே கொண்டு வந்து நீங்கள் நிறைவேற்றி இருக்கிறீர்களா என்பதை முதலிலே மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் விளக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அவசரச் சட்டத்தின் வாயிலாக நடைமுறையில் உள்ள ஒரு சட்டம் ரத்துச் செய்யப்பட்டபிறகு, அந்த அவசரச் சட்டத்திற்குச் சட்டமன்றத்தின் அனுமதி பெறப்படாவிட்டாலுங்கூட, அவசரச் சட்டத்தின் மூலம் ரத்தான சட்டம் தொடர்ந்து ரத்தானதாகவே இருக்கும், மீண்டும் உயிர் பெறாது. இதுதான் சட்ட நிலை. இது 1985 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பிலும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது. ஆகவே, முதலமைச்சர் அவர்கள் இப்போது பேசுகின்றபோது, சாவிலே சந்தேகம் இருந்தால் பிரேதத்தை மீண்டும் தோண்டி எடுக்கலாம் என்றார். இப்போது உண்மையாகவே செத்துவிட்டது என்று நிரூபணம் ஆகிவிட்டது. சுப்ரீம் கோர்ட்டே சொல்லியிருக்கிறது. ஆகவே சந்தேகமற.. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** என்னங்க மறுபடியும் Point of order? (குறுக்கீடு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, சுப்ரீம் கோர்ட்டே சொல்லியிருந்தாலுங்கூட, அதையே இறுதியானது என்று இல்லாமல், மீண்டும் ஒரு முறை சட்டசபையிலே வைத்து, அதை உறுதிப்படுத்துவது தவறு இல்லை, பழமொழியே உண்டு, "ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்று. எனவே, அதை உறுதிப்படுத்த மதமாற்றத் தடைச் சட்டம் இருக்கிறதா, இல்லையா என்ற சந்தேகத்தைப் போக்க, உறுதிப்படுத்த இந்தச் சட்டசபையிலே வைத்து அதை நிறைவேற்றுவது தவறு அல்ல என்பதுதான் என்னுடைய வாதம்.



2006 மே 27]

*முற்பகல் 11–00*

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, ஒரேயொரு விளக்கம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். முதலமைச்சர் அவர்கள் பேசி விட்டார்கள். (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** முதலமைச்சர் பேசியதில் Point of order–ஆ?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பேசியதில்தான் Point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இங்கே சொல்கிறபோது, ஏற்கெனவே அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து, பொதுவாக அந்தச் சட்டத்தை நீக்கிவிட்டாலே, அதுவே போதும், நீக்கிவிட்டதாகப் பொருள் என்று சொன்னார்கள். எப்பொழுதுமே ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால், அதை 6 மாத காலத்திற்குள் அவையில் வைத்து நீங்கள் சட்டமாக்கினால்தான், நிச்சயமாக அந்தச் சட்டம் ஒரு நிலைபெறும். அப்பொழுதுதான் இந்தச் சட்டமன்றத்திற்கே ஒரு மரியாதை கிடைக்கும்.

இங்கே நிறைவேற்றப்படக்கூடிய சட்டம். நீங்கள் அவசரச் சட்டத்தைப் போட்டுவிட்டு, அப்படி, அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டீர்கள் என்று சொன்னால், பிறகு எப்போதுதான் அதற்கு ஒரு விடிவுகாலம்? ஏற்கெனவே ஆடு–கோழி வெட்டக்கூடாது என்ற தடுப்புச் சட்டம்கூட இந்த அவையிலே கொண்டு வந்தீர்கள். இதை மாத்திரம் ஏன் கொண்டு வரவில்லை அன்றைக்கு? ஏனென்றால், சிறுபான்மை மக்கள்மீது உங்களுக்கு அந்த அளவிற்கு எதிர்ப்பு இருந்த காரணத்தினால், அதை விட்டுவிட்டீர்கள். இப்போது தேர்தல் நேரத்தில் வேறு வழியில்லாமல் அதைச் சொல்லி அவசரச் சட்டம் என்று கொண்டு வந்துவிட்டீர்கள். அது இந்த அவையை அவமதித்ததாகத்தானே அர்த்தம்? ஏன் இந்த அவையில் வைப்பதுதானே? எல்லோரும் இங்குதானே இருந்தோம்? நீங்களும் இங்கேதானே இருந்தீர்கள்? இந்த அவையில் நீங்கள் அவசரச் சட்டத்தை சட்டமாக்காமல் விட்டுவிட்டதே, நீங்கள் சிறுபான்மை மக்களுக்கு நேர் எதிரியாக இருந்தீர்கள், அவர்களுக்குத் துரோகம் செய்தீர்கள் என்றுதான் பொருள்.

[2006 மே 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இது மிகவும் விநோதமாக இருக்கிறது. இந்த அவையில் என்ன பேசினாலும் immunity இருக்கிறது.

**மாண்புமிகு கலைஞர் திரு. மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோலக் கற்பனை செய்யக்கூடாது. ** என்று நான் சொல்வதாக முன்னாள் முதலமைச்சர் சொல்வது, அவர் அன்று வகித்திருந்த பதவிக்கு அழகல்ல.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** சிறுபான்மையின மக்களைத் திசை திருப்ப வேண்டும் என்பதற்காகவே, கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் இன்னும் அமலில் உள்ளதாக, தி.மு.க.–வும், அதன் கூட்டணிக் கட்சிகளும் தேர்தல் நேரத்தில் வேண்டுமென்றே சொல்லி வந்தனர். தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் 18–5–2004 அன்று பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்தின்வாயிலாக, அறவே ரத்துச் செய்யப்பட்டுவிட்டது. ஆகவே, அந்தச் சட்டம் அதன்பிறகு, அமலில் இல்லை. அதுதான் உண்மை நிலை. ஆனால், அவர்கள் தெரிந்தே இப்படி உண்மைக்குப் புறம்பான ஒரு தகவலைத் தேர்தல் நேரத்தில் சொல்லிவிட்டதால், அதை உறுதிப்படுத்த வேண்டுமென்பதற்காக, தெரிந்தே, வேண்டுமென்றே, ஆளுநர் உரையில் இதைச் சேர்த்து, மீண்டும் இதற்கான ஒரு மசோதாவை சட்டமன்றத்தில் கொண்டு வருவோம் என்கிறார்கள். நான் மீண்டும் சொல்கிறேன், சுப்ரீம் கோர்ட் கொடுத்த தீர்ப்பின்படி, ஒரு அவசரச் சட்டத்தின் வாயிலாக நடைமுறையிலுள்ள ஒரு சட்டம் ரத்துச் செய்யப்பட்ட பிறகு, அந்த அவசரச் சட்டத்திற்கு சட்டமன்றத்தின் அனுமதி பெறப்படாவிட்டாலுங்கூட, அவசரச் சட்டத்தின்மூலம் ரத்தான சட்டம் தொடர்ந்து ரத்தானதாகவேதான் இருக்கும். ஆகவே, மீண்டும் உயிர் பெறாது. இது 1985...

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு 1985–லே சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோது, பல்வேறு அவசரச் சட்டங்களை இந்தச் சட்டமன்றத்தில் நிறைவேற்றியிருக்கிறீர்களா, இல்லையா? தீர்ப்பு அப்போதும் இருந்ததே? ஏன் நிறைவேற்றினீர்கள் அப்போது? தீர்ப்பை வைத்து அதையும் கொண்டு வராமல் இருந்திருக்கலாம் அல்லவா? மற்ற அவசரச் சட்டங்களைச்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 மே 27] [டாக்டர் க. பொன்முடி]

சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிய நீங்கள், இந்த ஒரு சட்டத்தை மட்டும் ஏன் நிறைவேற்றவில்லை? அப்போது 1985 ஆம் ஆண்டு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு இருக்கிறது. அதற்கெல்லாம் பொருந்துகிறபோது. இதற்கு ஏன் அது பொருந்தக் கூடாது? அதற்குப் பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்த நேரத்தைவிட நீங்கள் அதிகமாகப் பேசிவிட்டீர்கள். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** நான் முடிக்கிறேன். நீங்கள் விட்டால் நான் முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** ஆகவே, ** இங்கே கருத்துகள் தெரிவித்ததற்கு, நான் கடும் கண்டனத்தைத் தெரிவித்து இந்தக் கட்டாய மதமாற்ற...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) வேறு point-க்குப் போங்கள். அடுத்த point-க்குப் போங்கள். (குறுக்கீடு) அடுத்த point-க்குப் போங்கள். ** இங்கு யாரும் சொல்லவில்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) அடுத்த point-க்குப் போங்கள். (குறுக்கீடு) அதற்குரிய விளக்கங்களை முதலமைச்சர் அவர்கள் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) நீங்கள் அடுத்த point-க்குப் போங்கள்.

**செல்வி ஜெ ஜெயலலிதா:** அதுதான், முடிக்கப் போகிறேன். கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம் அமலில் இல்லை; 2004 ஆம் ஆண்டிற்கு பின்னரே அமலில் இல்லை. எவ்வளவுதான் முதலமைச்சர் அவர்களும், மற்ற கூட்டணிக் கட்சியினரும் அதைச் சொன்னாலும், அந்தச் சட்டம் அமலில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நான் இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜசேகரன் அவர்கள்.

முற்பகல் 11–05

***திரு. எஸ். ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுவதற்கு

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வாய்ப்புத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, நான் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலங்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என்னை அந்தத் தொகுதியிலே வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அந்தத் தொகுதியை ஒதுக்கித் தந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர், தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என்னை வெற்றிபெறச் செய்த அந்தத் தொகுதி மக்களுக்கும், இந்த அவையின் மூலமாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையில் இந்த அரசு செய்வதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். குறிப்பாக, தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையாக இருந்தாலும், அது டாக்டர் கலைஞர் அவர்களுடைய நாவிலே இருந்து வந்ததாக இருந்தாலும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய தேர்தல் அறிக்கையாக அது சொல்லப்பட்டது. குறிப்பாக, விவசாயிகள் கடந்த பல ஆண்டுகளாகக் கடனாளியாக ஆக்கப்பட்டார்கள். கடனிலிருந்து அவர்கள் விடுபட வேண்டுமென்ற நீண்ட நாள் கோரிக்கையை, விவசாயிகளுடைய கோரிக்கையை ஏற்று இந்த அரசு பதவியேற்ற அதே நாளில், ஆளுநர் அவர்கள் சொல்லியதைப்போல வரலாற்றுச் சிறப்புமிக்க பதவியேற்ற அந்த நாளில் விவசாயிகளுடைய கடனை ரத்துச் செய்திருக்கின்றார்கள்.

அதோடு மாத்திரமல்ல. 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்குக் கொடுக்கலாம் என்று சொன்னபோது அதை ஏளனம் செய்தார்கள். எப்படி 2 ரூபாய்க்கு அரிசி கொடுக்க முடியும்; எப்படிக் கடனை எல்லாம் ரத்துச் செய்ய முடியும் என்று ஏளனம் செய்தார்கள். ஆனால் பதவியேற்ற அன்றே 2 ரூபாய்க்கு அரிசி வழங்குவதாக கோப்பிலே கையெழுத்திட்டார் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர். அதுபோல முட்டை வழங்கினார்கள். நான் இவ்வறிவிப்புகளை வரவேற்று தமிழகத்து மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில், குறிப்பாக, இந்தத் தேர்தலில் தமிழகத்தில் ஒரு மாற்றாட்சி வரவேண்டுமென்று குரல் கொடுத்தோம். அந்த மாற்றாட்சி என்பது — கடந்த 5 ஆண்டுக் காலமாகத் தமிழ்நாட்டு மக்கள், குறிப்பாக, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள் என்று எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும் வஞ்சிக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட ஆட்சி இந்தத் தேர்தல் மூலமாகத் துடைத்தெறியப்பட வேண்டும் என்கின்ற நிலையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயக முற்போக்குக் கூட்டணியோடு சேர்ந்து, அந்த ஆட்சியை முற்றுப்பெற வைத்தது. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், இந்த ஆட்சி வந்தால் என்ன செய்வோம் என்பதைச் சொல்லியிருக்கின்றார்கள், செய்திருக்கின்றார்கள்.





அது மாத்திரமல்ல. ஆளுநர் உரையில், ஆசிரியர்கள், அதாவது, 4,000 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த ஆசிரியர்களுக்கு இனிமேல் அவர்களுடைய சம்பளம் முழுமையாக வழங்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். வேலைவாய்ப்பு வயது வரம்பு என்பது 5 ஆண்டுகள் உயர்த்தப்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நல்ல திட்டங்கள் எல்லாம் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

சென்ற 5 ஆண்டுகள் இருந்த அரசு, முன்பு டாக்டர் கலைஞரால் கொண்டு வரப்பட்ட நல்ல திட்டங்களைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். ஆனால், டாக்டர் கலைஞர் அரசு ஒரு பெருந்தன்மைமிக்க அரசு என்பதற்கு எடுத்துக்காட்டாக, முந்தைய அரசு வழங்கிய இலவச சைக்கிள்களை, தொடர்ந்து மாணவர்களுக்கு வழங்கும் என்று அறிவித்திருப்பது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

முற்பகல் 11–10

அதோடு மாத்திரமல்ல, இன்றைக்கு இட ஒதுக்கீடு என்பது, இந்தியாவை ஒரு மிகப் பெரிய சிக்கலில் ஆழ்த்தியிருக்கின்றது. இந்திய அரசு பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு என்பதை உறுதிப்படுத்தியிருக்கின்ற இந்த நேரத்தில், போராட்டங்கள் பல இடங்களில் நடந்துகொண்டிருந்தாலும், இன்றைக்குத் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், அந்த 27 சதவிகித இட ஒதுக்கீட்டை வலியுறுத்தி இந்த மன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்படும் என்று அறிவித்திருக்கின்றார். ஆகவே, இப்படிப்பட்ட நல்ல செய்திகளை இங்கே சொல்லி இருக்கின்ற இந்த ஆளுநர் உரைக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, வேறு பல விஷயங்களையும் நான் இங்கே சொல்ல விரும்புகின்றேன். குறிப்பாக, கடன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அவரவர்கள் இருக்கைகளில் உட்காருங்கள்.

**திரு. எஸ். ராஜசேகரன்:** விவசாயிகளுக்குக் கடனை எல்லாம் ரத்துச் செய்கின்ற அதே நேரத்தில், மீண்டும் கடன் வழங்குவதைப் பற்றி இன்றைக்கு சர்ச்சை எழுந்திருக்கின்றது. குறிப்பாக, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி என்பது இன்றைக்கு அழிந்துவிட்ட நிலையில் இருக்கின்றது. இன்னும் சொல்லப் போனால், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியிலிருந்து மத்தியக் கூட்டுறவு வங்கி வரையில் இன்றைக்கு நலிந்து இருக்கின்றன. ஆகவே, இந்தக் கூட்டுறவுத் துறையை நாம் சீர் செய்ய வேண்டும். கூட்டுறவுத் துறையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்குக் கடன் என்கின்ற அடிப்படையில் கூட்டுறவுத் துறையைச் சீர் செய்யவேண்டும், அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக, ஆயிரம் கோடி ரூபாயை கடன் கொடுப்பதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்த ஆயிரம் கோடி ரூபாய் எப்படிக் கொடுக்கப் போகிறார்கள் என்பதைப் பற்றி இங்கே தெரிவிக்கவில்லை. ஆகவே, கூட்டுறவுத் தேர்தல் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதை வரவேற்கின்ற அதே நேரத்தில், கூட்டுறவுத் துறையை சரியாக செம்மையாக வலுப்படுத்துவதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, கிராமப்புற மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மிகவும் மோசமான நிலையில் இன்றைக்கு இருக்கின்றன. கிராமப்புறங்களில் இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மருத்துவர்களே வருவதில்லை என்கின்ற நிலை இருக்கின்றது. ஆகவே, இப்படிப்பட்ட நிலையைப் போக்க வேண்டும், போக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அது மாத்திரமல்ல, என்னுடைய தொகுதியைப் பற்றி, என்னுடைய மாவட்டத்தைப் பற்றிய சில விவரங்களை இங்கே உங்கள் மத்தியிலே கூற விரும்புகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் என்பது தமிழகத்தில் முதலாவதாகப் பிரித்து உருவாக்கப்பட்ட ஒரு மாவட்டம். அந்த மாவட்டத்தில் ஆற்றுப் பாசனப் பகுதியே கிடையாது. வானம் பார்த்த பூமி. ஆகவே, அந்த வானம் பார்த்த பூமியில் 15 இலட்சம் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்த மக்களுக்கு விவசாயத் துறையில் ஈடுபடுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் கிடையாது. நிலத்தடி நீரோ 400 அடிக்குக் கீழே சென்றுவிட்டது. ஆகவே, இதைச் சீர் செய்வதற்காக, இதை ஒழுங்குபடுத்துவதற்காக நாங்கள் எங்களுடைய மாவட்ட மக்களின்





சார்பாகக் கேட்டுக்கொள்வதெல்லாம், கொள்ளிடம் உபரி நீர்த் திட்டத்தைப் புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கொண்டு வரவேண்டும். இதே கோரிக்கையைக் கடந்த பல ஆண்டுக் காலமாகச் சொல்லி வருகின்றோம். சென்ற ஆண்டு பெய்த கடும் மழையால் பல மடங்கு தண்ணீர் கடலிலே போய்ச் சேர்ந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், அந்த மழை, வெள்ளக் காலங்களில் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அந்தக் கொள்ளிடம் உபரி நீரைக் கொண்டு வரவேண்டும் என்ற கோரிக்கையை உங்கள் மத்தியிலே வைக்கின்றேன். புதுக்கோட்டை மாவட்ட மக்களினுடைய வாழ்வாதாரமான பிரச்சினை இது என்பதை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்தபடியாக, எங்களுடைய தொகுதி மிகப் பெரிய தொகுதி. அந்தத் தொகுதியில் கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியம் இருக்கின்றது. 1996—லிருந்து 2001 வரையில் ஆட்சியில் இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள், 2001 என்று நினைக்கின்றேன், அப்பொழுது ஒரு வாக்குறுதியை அவர் கொடுத்திருக்கின்றார். அந்தக் கரம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்து, தனி தாலுகாவாக ஆக்குவது என்கின்ற அந்த வாக்குறுதியை அவர் கொடுத்திருக்கின்றார். அந்த வாக்குறுதியை நிறைவேற்றும்படித் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11—15

அதுபோல, அங்கே பண்ணைகள், அண்ணா பண்ணை அல்லது வல்லத்திராக்கோட்டை பழப் பண்ணை என்றும், வெள்ளாள விடுதி எண்ணெய் வித்துப் பண்ணை என்றும், வம்பன் பயறு வகை ஆராய்ச்சிப் பண்ணை என்றும் பல பண்ணைகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து, ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் வேலைநிறுத்தம் செய்தபோது, அந்த வேலைநிறுத்தத்தை உடைக்க வேண்டுமென்று சொல்லி, அன்றைய அரசு, 12,000 இளநிலை உதவியாளர்களை நியமித்தது. அன்று வேலை வேண்டும் என்கின்ற அந்த நிலையில் அந்த 12,000 பேரும் வேலைக்கு வந்தார்கள். அவர்கள் இன்றைக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் இருக்கின்றார்கள். வேலைநிறுத்த நேரத்தில் வந்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்காமல், அவர்களுக்கு ஒரு வாய்ப்பளித்து இளநிலை உதவியாளர்களை நிரந்தரமாக்கி டாக்டர் கலைஞர் உத்தரவிட்டு

அவர்களின் வாழ்க்கையில் வசந்தத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் தலைவர் ஐயா ஜி.கே. மூப்பனார் அவர்கள் என்னை அரசியலிலே வளர்த்தார்கள். என்னை ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்தின் உறுப்பினராக ஆக்கினார்கள், மாவட்டத் தலைவராக்கினார்கள். அதன் பிறகு; எங்களது அன்புத் தலைவர் மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் போன்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்து, வழி நடத்திச் சென்றுகொண்டிருக்கிறார்கள். மீண்டும் இப்போது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் தலைவி அன்னை திருமதி சோனியா காந்தி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் நல்லாசியோடு மீண்டும் வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுவதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அன்னை திருமதி சோனியா காந்தி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய தலைவர், அரசியல் சாணக்கியர், சிறந்த ராஜதந்திரி, முத்தமிழ்க் காவலர், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் என்னுடைய வெற்றிக்கு உதவியாக இருந்தார்கள். அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் உதவியால், அவருடைய ஆதரவால், அவருடைய ஆசியால் மீண்டும் வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் 21,000 வாக்குகள் வித்தியாசத்திலே—கோவை மாவட்டத்திலேயே அதிகமான வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றி பெற்று இருக்கின்றேன். அதற்கு டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் உறுதுணையாக இருந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய வெற்றிக்காக எனது தொகுதியில் வீதி, வீதியாக வந்து வாக்குகளைக் கேட்டு உதவி புரிந்த எங்களது மத்திய அமைச்சர் அன்புத் தலைவர் ஜி.கே. வாசன் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் பேரியக்கம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் போன்ற இயக்கங்களின் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், செயல் வீரர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த வால்பாறை சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரையை படித்துப் பார்த்தேன். தமிழக சட்டமன்றத் தேர்தல் வருவதற்கு முன்பே, நம்முடைய தமிழினத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் ஐயா அவர்கள் தமிழ்நாட்டின் நலன் கருதி மத்திய அரசுடன் பேசி, பெரும் முயற்சியைச் செய்து, தமிழைச் செம்மொழியாக்கினார்கள். தமிழுக்கும், தமிழக மக்களுக்கும் பெருமை சேர்த்தார்கள். கடல் நீரைக் குடிநீராக்குவதற்கும், சேது சமுத்திரத் திட்டம் வெற்றிகரமாக நடப்பதற்கும் உதவி புரிந்தார்கள், அடித்தளமிட்டார்கள். இந்த நாடே டாக்டர் கலைஞர் அவர்களை நன்றியுடன் போற்றுகிறது, பாராட்டுகிறது. இந்தியாவின் நலன் கருதி, இந்திய மக்களின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக, அன்னை சோனியா காந்தி அவர்கள் இந்தியாவிற்குப் பிரதமராக வரவேண்டுமென்று முதன்முதலாக பலத்த குரல் கொடுத்தவர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் என்பதை நாங்கள் நன்றியோடு நினைக்கின்றோம்.

இன்று மத்திய அரசு சிறப்பாக நடைபெறவும், பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் தலைமையிலே நிலையான ஆட்சி அமையவும், உலக நாடுகள் இந்தியாவைப் பாராட்டவும், மதிக்கவும் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் ஆலோசனை வழங்கி வருகிறார்கள். இதைக் காங்கிரஸ் பேரியக்கமும், நானும், மக்களோடு மக்களாக நன்றியுடன் பார்க்கின்றோம். தங்களைப் பாராட்டுகின்றோம், வாழ்த்துகின்றோம். வாழ்த்துவதற்கு வயதில்லை, நான் வணங்குகின்றேன்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், தமிழக மக்களுக்காகவும், மிகவும் அற்புதமான நல்ல திட்டங்களை அறிவித்திருக்கின்றீர்கள். அவற்றைக் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக வரவேற்கின்றோம். ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்; விவசாயிகள் வாங்கிய கூட்டுறவுக் கடன் சுமார் ஏழாயிரம் கோடி ரூபாய் அறவே ரத்து; ஏழை எளியவர்களுக்கு கலர் டி.வி. இலவசம்; கல்லூரிகளிலே கட்டணம் குறைப்பு; பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள் முதல் பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் இரண்டு முறை முட்டை வழங்குவது என்று நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கின்றீர்கள். ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்

அனைத்து மதங்களிலும் இருக்கின்ற ஆதி திராவிடர்களுக்கும் கிடைத்திட வழிவகை செய்துள்ளீர்கள். பாராட்டுகின்றோம், வரவேற்கின்றோம். இதுமாதிரியான ஏராளமான திட்டங்களை அறிவித்திருக்கின்றீர்கள். அவற்றையும் பாராட்டுகின்றோம், வரவேற்கின்றோம்.

*முற்பகல் 11–20*

என்னுடைய வால்பாறை தொகுதியிலே இருக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைப் பற்றித் தாங்கள் குறிப்பிடவில்லை என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதல்வராக டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் இருந்தபோது, வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் நாளொன்றுக்கு ரூ.76.80. 2001–லே அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் தேயிலைத் தோட்ட நிருவாகம், ரூ.4.65–ஐக் குறைத்து, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் வயிற்றிலே அடித்தார்கள். 1997 ஆம் ஆண்டு ரூ.76–85. 2001–லே தேயிலை தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம், அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு ரூ.72.20. இப்போது 2006–ல் சம்பளம் ரூ.77/–.

டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் ஆட்சியில் இருந்த 1997–ல் ரூ.77/–, இப்போது 2006–லும் ரூ.77/–, அதுவும் எப்படி? 15 பைசாவை ஏற்றி, 11 கிலோ தேயிலை பறிப்பதற்குப் பதிலாக, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 28 கிலோ பறிக்க வேண்டுமென்று வேலைப் பளுவை நிருவாகம் உயர்த்தி இருக்கின்றது. இது உலகத்திலேயே வேறு எந்த நாட்டிலாவது நடைபெறுமா? இந்த அநியாயம், அக்கிரமம் நடைபெறுமா என்று சொல்லி, இந்தச் சட்டமன்றத்திலே மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களிடத்திலே பல முறை மனுக்களைக் கொடுத்திருக்கின்றேன். நேரடியாகவும் பேசியிருக்கின்றேன். பலமுறை இந்தச் சட்டமன்றத்திலே விரிவாகவும், விளக்கமாகவும் பேசியிருக்கின்றேன். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை சம்பளம் கூடுதலாகத் தொழிலாளர்களுக்குத் தருவதுதான் சட்டம். ஆனால், சம்பளத்தைக் குறைத்தது இந்தியாவிலே எங்கே நடைபெற்றது என்று சொன்னால், என்னுடைய வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய நிருவாகம் செய்தது என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

இத்தனைக்கும், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் கட்டிக்கொள்வதற்குச் சேலை இல்லை, சரியான வேட்டி இல்லை. காதில்



கம்மல் இல்லை. தான் பெற்றெடுத்த குழந்தைகளுக்குப் பால் வாங்கிக் கொடுப்பதற்குக்கூட சில நேரங்களில் கஷ்டப்படுவார்கள். மீட்டர் வட்டிக்கு வாங்கித்தான் குழந்தைகளைப் படிக்க வைக்கின்றார்கள். அப்படிப்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் கஷ்டங்களை இந்தப் பேரவையிலே நான் பல முறை சுட்டிக்காட்டியபோது, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அதை வேடிக்கை பார்த்தார்களேயொழிய, அதன்மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

பல முறை இந்தச் சட்டமன்றத்திலே வாதாடினேன், விரிவாகப் பேசியிருக்கின்றேன். அதன் பிறகு சிறப்பு நீதிமன்றத்திலே கேட்டுப் பெற்றேன், வாதாடிப் பெற்றேன். அந்தச் சிறப்பு நீதிமன்ற நீதிபதி, மூன்றாண்டுக் காலமாக காலம் கடத்தி வருகின்றார். ஆறு மாதங்களிலே தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்று இந்தப் பேரவையில் அறிவித்தார்கள். ஆனால் மூன்றாண்டுக் காலமாக—நிருவாகத்தின் சார்பாக, ஒரு சாட்சியை மட்டும் விசாரிப்பதற்கு இரண்டாண்டுக் காலம் செய்திருக்கின்றார்கள். அந்த நிருவாகத்தின் செயலாளர் இன்னும் சாட்சியே சொல்லி முடிக்கவில்லை. அதையும் மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். விரிவாக இந்தச் சட்டமன்றத்திலே பேசினேன். நான் கேட்டேன், மாண்புமிகு முதல்வர் அவர்களே, உங்களைப் பார்த்து கேட்கின்றேன், நீங்கள் நினைத்தால், ஒரு மணி நேரத்திலே வால்பாறை தேயிலைத் தொழிற்சங்கத் தலைவர்களையும், நிருவாகத்தையும் அழைத்துப் பேசினால், இந்தப் பிரச்சினை முடியுமல்லவா? ஏன் காலதாமதப்படுத்துகின்றீர்கள் என்று பல முறை கேட்டபோதும், அவர்கள் பதில் கூறவில்லை.

கடைசியாக, கடைசி சட்டமன்றக் கூட்டத்திலே முன்னாள் முதல்வர் அவர்களை வைத்துக்கொண்டு சொன்னேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களை நீங்கள் ஏமாற்றிவிட்டீர்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், 99 சதவிகிதம் இருக்கின்ற அந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நீங்கள் துரோகம் விளைவித்துவிட்டீர்கள், அவர்கள் வருத்தமாக இருக்கின்றார்கள், கண்டிப்பாகத் தமிழ்நாட்டில் இருக்கின்ற தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய ஆதரவு உங்களுக்குக் கிடைக்காது என்று சொன்னேன்.

அதேபோல, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே வால்பாறை மலைப் பகுதியிலே அவர்களுக்கு ஒரு மரண அடி கிடைத்தது. 21

ஆயிரம் ஓட்டு வித்தியாசத்திலே வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், கோவை மாவட்டத்திலேயே அதிகமான வாக்கு வித்தியாசத்திலே என்னை வெற்றி பெறச் செய்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், தமிழினத் தலைவர் அவர்கள், தாழ்த்தப்பட்ட மக்கள்மீதும், அரிசன மக்கள்மீதும், பிற்படுத்தப்பட்ட, பின்தங்கிய சிறுபான்மை மக்கள்மீதும் மதிப்பும், அன்பும் வைத்திருக்கின்ற நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், நிருவாகத்தையும், தொழிற்சங்கத்தையும் அழைத்துப் பேசி, நியாயமாகத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய தினக் கூலி, சுமார் ரூ.100/-— இன்றைய தேதிக்கு 100 ரூபாய் தரவேண்டும். நிலுவைத் தொகையோடு 100 ரூபாயைப் பெற்றுத் தருவதற்கு ஐயா அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும், மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இதிலே கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இதற்கு முன்மாதிரியாக வால்பாறையிலே மிகப் பெரிய மறியல் போராட்டத்தை நடத்தினோம். 7 ஆயிரம் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். 4 சட்டமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டோம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் அதிலே வந்து கலந்துகொண்டார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வி.கே. லட்சுமணன், குன்னூர் கந்தசாமி ஆகியோரும் கலந்துகொண்டார்கள். 7 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டது வால்பாறை சரித்திரத்திலேயே அதுதான் முதல் தடவை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

*முற்பகல் 11–25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி வெற்றி பெறுவதற்கு வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் கோவை மாவட்டத்திலே இருக்கின்ற பல தொகுதிகளுக்குச் சென்று, பிரச்சாரத்தை மேற்கொண்டார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, நான் மீண்டும் வற்புறுத்திச் சொல்கின்றேன். தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் இந்தப் பிரச்சினையில்





தலையிடவில்லை என்று சொன்னால், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வேறு நாதி இல்லை, வேறு கதி இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அவர்கள் பேசினால் ஒரு அரை மணி நேரத்தில் இந்தப் பிரச்சினை முடிந்துவிடும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் தற்காலிகத் தொழிலாளர்களாக வால்பாறையிலே பணியாற்றுகின்றார்கள். இது இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் நடைபெறாத ஒரு அதிசயம். நிருவாகம் 20 ஆண்டுகள், 25 ஆண்டுகள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களைத் தற்காலிகமாக வைத்திருக்கின்றார்கள். அவர்கள் நிரந்தரமாகப் பணியாற்றுவதற்கு உதவிபுரியுமாறு டாக்டர் கலைஞர் ஐயா அவர்களையும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் நேரத்திலே எங்களுடைய தலைவி அன்னை சோனியா காந்தி அவர்கள் கோவைக்கு வந்தார்கள். ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு வாக்குக் கேட்பதற்காகக் கோவைக்கு வந்தார்கள். கோவை, சிதம்பரம் பூங்கா கூட்டத்திலே அன்னை சோனியா காந்தி அவர்கள் சொன்னார்கள். 'வால்பாறை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார்கள். தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் கஷ்டங்களையெல்லாம் இங்கேயிருக்கின்றவர்கள் எனக்கு எடுத்துக் கூறினார்கள்.

தேர்தலிலே டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆட்சிக்கு வந்தவுடன், இந்தத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையிலே நான் தலையிட்டு முடித்துத் தருகின்றேன்' என்று கோவை, சிதம்பரம் பூங்காவில் அன்னை சோனியா காந்தி அவர்கள் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன். அன்னை சோனியா காந்தி அவர்கள் யாரை நம்பி அறிவித்தார்கள்? நம்முடைய தானைத் தலைவர், தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களை நம்பித்தான் சோனியா காந்தி அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். ஆகவே, இந்த நேரத்தில் இந்தப் பேரவையின் மூலமாக மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன். அன்னை சோனியா காந்தி

[திரு. கோவை தங்கம்] [2006 மே 27

அவர்கள் கோவை, சிதம்பரம் பூங்காவிலே தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுடைய பிரச்சினையை முடித்துத் தருகிறேன் என்று அறிவித்ததை, நீங்கள் உடனடியாக இதிலே தலையிட்டு முடித்துத் தரவேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–30*

அதேபோல, வால்பாறையிலே தாழ்த்தப்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் 99 சதவிகிதம் பேர் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு இப்போது 77 ரூபாய் கூலி. இந்த 77 ரூபாயை வைத்துக்கொண்டு வால்பாறையிலிருந்து 100 கிலோ மீட்டர், கோவைக்கு வந்து படிக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் எண்ணிப் பாருங்கள். 77 ரூபாயை வைத்துக்கொண்டு வால்பாறையிலிருந்து 100 கிலோ மீட்டர் கோவைக்கு வந்து எப்படிப் படிக்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். வால்பாறைக்கு ஒரு கலைக் கல்லூரி வேண்டும் என்று சொல்லி, பாரதியார் பல்கலைக்கழகமே கலைக் கல்லூரியை நாங்கள் எடுத்து நடத்துகிறோம் என்று அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பல முறை, வால்பாறைக்கு ஒரு கல்லூரி வேண்டும் என்று பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே நான் உங்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன். சென்ற 3 ஆண்டுக் காலமாக சட்டமன்றத்திலே போராடி, சென்ற அரசு 2 கோடியே 38 இலட்சம் ரூபாயில் வால்பாறைக்கு ஒரு கலைக் கல்லூரியைக் கட்டித் தருகிறோம் என்று முன்னாள் அமைச்சர் அவர்கள் இதே அவையிலே அறிவித்தார்கள். ஆனால், நான் எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற காரணத்தால், பல்கலைக்கழகமே நடத்துகிறேன் என்று அறிவித்தும், கலெக்டர் அவர்கள் 14 ஏக்கர் நிலத்தை ஒதுக்கித் தந்தும் வால்பாறையில் கலைக் கல்லூரியை ஏற்படுத்துவதைத் தடுத்து நிறுத்தி விட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கலைஞர் ஐயா அவர்களை, மாண்புமிகு முதல்வர் ஐயா அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன், தாழ்த்தப்பட்ட மக்கள் 99 சதவிகிதம் பேர் வசிக்கின்ற வால்பாறைக்கு அவருடைய காலத்தில் ஒரு கலைக் கல்லூரி வரவில்லை என்று சொன்னால், எந்தக் காலத்தில் எங்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கலைக் கல்லூரி வரப் போகிறது என்பதை இந்த நேரத்திலே நான் அவருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கே 14 ஏக்கர் இருக்கிறது. அந்த 14 ஏக்கர் நிலத்தில் கல்லூரிக்குக் கட்டடம் வேண்டும் என்று சொன்னாலுங்கூட, என்னுடைய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து 50 இலட்சம் ரூபாயைக் கட்டட நிதிக்காகத் தருகிறேன் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



2006 மே 27] [திரு. கோவை தங்கம்]

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கலைக் கல்லூரிக்காகக் கடந்த கால ஆட்சியிலே அந்தத் தொகுதிக்குக் கிடைக்கவில்லை, இந்த ஆட்சியிலாவது கிடைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் பணத்தைத் தருவதாகச் சொல்கிறார்கள். கலைஞருடைய அரசு தமிழகம் எங்கும் பல கலைக் கல்லூரிகளை உருவாக்கியது. மாண்புமிகு உறுப்பினருடைய இந்த வேண்டுகோளை, கலைஞர் அவர்கள் நிச்சயமாக நிறைவேற்றிக் கொடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுக்கும், இதை முன்மொழிந்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் ஆற்காடு வீராசாமி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர், மரியாதைக்குரிய தளபதி ஸ்டாலின் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் என்னுடைய நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்குத் தமிழ்நாட்டிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள்—தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனை பேரும் இந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணி அரசினுடைய தலைவர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுக்கு நன்றி கூறுகிறோம், நன்றியோடு இருப்போம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வால்பாறை கீழ்ப் பகுதி விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று அவர்களுக்குப் பயன்தரக்கூடிய ஆனைமலை—நல்லாறு திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசே தேங்காய் விலையை நிர்ணயம் செய்து, அரசே கொள்முதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு விளைபொருளுக்குரிய விலை கிடைக்கச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு, விவசாயத்திற்குப் போதுமான தண்ணீரைத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கோவை தங்கம்] [2006 மே 27

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மரியாதைக்குரிய தளபதி ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய அன்பான ஒரு வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்களிடம் நேரிலே நான் கூறியபடி, சென்ற வாரம் வீட்டு வாசற்படியிலேயே வில்லோனி எஸ்டேட்டிலே இரண்டு வயதுப் பெண் குழந்தையை, தாய் முன்னாலேயே சிறுத்தைப் புலி தூக்கிச் சென்றுவிட்டது. ஏனென்றால், இருள் சூழ்ந்த இடம். வாசற்படியிலேயே, தாய் முன்னாலேயே இரண்டு வயதுப் பெண் குழந்தையை சிறுத்தைப் புலி கொண்டு சென்றுவிட்டது. வால்பாறையில் பல குடியிருப்புப் பகுதிகள் இருள் சூழ்ந்த இடமாக இருக்கின்றன. ஆகவே, நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய தளபதி அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்; 500 தெரு விளக்குகளை வால்பாறைக்கு நீங்கள் தந்து உதவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–35

வாரத்திற்கு இரண்டு வீடுகளை யானைகள் இடித்துத் தள்ளுகின்றன. பள்ளிகளை இடித்துத் தள்ளுகின்றன. சிந்தாமணி கூட்டுறவு சொசைட்டிகளை இடித்துத் தள்ளுகின்றன. சென்ற வருடம் மட்டும் சுமார் 10 பேர்களை—5, 6 பேர்களைக் கொன்றிருக்கிறது. பலத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த நேரத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொள்கிறேன், 500 தெரு விளக்குகளை நீங்கள் போட்டுத் தருவதற்கு அனுமதித்தால் போதும்; வால்பாறை நகராட்சியிலே பணம் இருக்கிறது. நீங்கள் அனுமதி தந்தால் உடனடியாக அவர்கள் அந்தத் தெரு விளக்குகளைப் போடுவார்கள். அனுமதி தர வேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அரசு ஊழியர்கள். அரசு ஊழியர்களின் குடும்பத்தினர்கள் அனைவரும், நடைபெற்ற இந்தத் தேர்தலிலே ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்கு மகத்தான ஆதரவினைத் தந்துள்ளார்கள். அவர்கள் மகத்தான ஆதரவைத் தந்ததற்காக மத்திய அரசைப் போல, மாநில அரசு ஊழியர்களுக்குப் பணி ஓய்வு வயதை 58–லிருந்து 60 ஆக உயர்த்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அண்ணா தி.மு.க. அரசால் அரசு ஊழியர்களுக்குப் பறிக்கப்பட்ட சலுகைகளை மீண்டும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



2006 மே 27] [திரு. கோவை தங்கம்]

கோவையிலே மூடிக் கிடக்கும் பஞ்சாலைத் தொழிற்சாலைகளைத் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வால்பாறை சிறப்பு ஊராட்சியிலே குடிநீர் வசதிகள், தெரு விளக்கு வசதிகள், சாலை வசதிகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. நான் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில், அண்ணா தி.மு.க. ஆட்சியை எதிர்த்துப் பல முறை இங்கே குரல் கொடுத்ததால், என்னுடைய வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலே ஒரு பணியும் நடைபெறவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அடிப்படை வசதிகளை நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலுள்ள பள்ளிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும், போதுமான ஆசிரியர்களை நியமித்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறையில் உள்ளவர்களுக்கு உடல் நிலை பாதிப்பு என்று சொன்னால், வால்பாறையிலிருந்து 100 கிலோ மீட்டர் தூரம் கோவைக்குத்தான் கொண்டு வர வேண்டும். வால்பாறையிலே உடல் நிலை பாதிக்கப்பட்டால் – 40 ஏற்றம், இறக்கம் உள்ள வளைவுகள். மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே பல முறை வந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு அந்தக் கஷ்டம் தெரியும் — உடல் நிலை பாதிக்கப்பட்டால் அங்கேயிருந்து கோவைக்கு வருவதற்குள் பல பேர்களுடைய உயிர் இழப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, வால்பாறை அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோவையிலிருந்து வால்பாறைக்குக் கூடுதல் பேருந்துகளைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 30 ஆண்டு காலமாக, 25 ஆண்டு காலமாக வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலே குடியிருப்பவர்களுக்கு இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு உதவிபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அங்கலக்குறிச்சி, ஆழியார் பகுதிகளில், சென்ற நான்கு ஆண்டு காலமாக பல முறை விரிவாக, விளக்கமாக இந்தச் சட்டமன்றத்திலே பேசியிருக்கின்றேன். அங்கே ஒரு தொழிற்சாலைகூட கிடையாது. தேயிலைத் தொழிலைத் தவிர வால்பாறை சட்டமன்றத் தொகுதியிலே வேறு எந்தத் தொழிலும் கிடையாது. ஆகவே, சிறு

தொழில்களை அங்கே உருவாக்குவதற்கு உதவிபுரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களிடம் ஒரு முறை நிருபர்கள், டாக்டர் கலைஞர் ஐயா மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பற்றிக் கேட்கிறார்கள். மீண்டும் சொல்கிறேன்—டாக்டர் கலைஞர், மாண்புமிகு தமிழக முதல்வர் ஐயாவைப் பற்றி மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களிடம் கேட்கிறார்கள். டாக்டர் கலைஞர் அவர்களிடம் உங்களுக்குப் பிடித்த சிறப்பம்சம் என்ன என்று மக்கள் தலைவர் மூப்பனாரிடம் கேட்கிறார்கள். மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் சொல்கிறார், அவரிடம் பிடித்தது, அவருடைய கடுமையான உழைப்பு. *(மணியடிக்கப்பெற்றது)*

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சீக்கிரம் பேசி முடியுங்கள்.*

**திரு. கோவை தங்கம்:** டாக்டர் கலைஞர் அவர்களிடம் பிடித்தது, அவருடைய கடுமையான உழைப்பு என்று மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் கூறினார்கள். அன்னை இந்திரா காந்தி அவர்கள், கடின உழைப்புக்கு ஈடு இணை ஏதும் இல்லையென்று கூறுவார்கள். அதைப்போல, டாக்டர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், இந்த வயதிலும் தமிழக மக்களுக்காகவும், தமிழகத்தைக் காப்பாற்றுவதற்காகவும், இந்தியாவைக் காப்பபாற்றுவதற்காகவும், பல மணி நேரங்கள் செலவழிக்கிறார்கள். ஒரு நாள் 24 மணி நேரம் என்று சொன்னால், அதிலே 20 மணி நேரம் இந்த நாட்டிற்காகவும், நாட்டு மக்களுக்காகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகவும், சிறுபான்மை மக்களுக்காகவும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகவும், தன்னை முழுமையாக அர்ப்பணித்த மாண்புமிகு தமிழக முதல்வர், தானைத் தலைவர், முத்தமிழ்க் காவலர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல ஒரே ஒரு வார்த்தையைக் கோடிட்டுக்காட்டிவிட்டு, விடைபெற விரும்புகின்றேன். ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், மாண்புமிகு அமைச்சர்கள் அவரவர்கள் அறைகளிலே பொறுப்பேற்றார்கள். மரியாதை நிமித்தமாக நாங்கள், சில சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களைப் பார்க்கச் சென்றோம். முதலிலே உள்ளாட்சித் துறை அமைச்சர்,



மாண்புமிகு மரியாதைக்குரிய ஸ்டாலின் அவர்களை அவருடைய அறையிலே பார்க்கச் சென்றோம். ஏராளமான கூட்டம். அந்தக் கூட்டத்திலும், தோழமை உணர்வோடு எங்களைப் பார்த்தார். என்னிடம் கேட்டார். சௌக்கியமா, எப்போது வந்தீர்கள், வீட்டிலே இருப்பவர்கள் சௌக்கியமா? வாருங்கள் என்று சொல்லி, அன்போடு அழைத்து, அவ்வளவு பெரிய கூட்டத்திலும் ஒரு தோழமை உணர்வோடு, அந்தப் பாசத்தைக் காட்டினார்கள். அதேபோல, பேராசிரியர் அவர்களுடைய அறைக்குச் சென்றோம். அதேபோல அவர்களும் அன்பைக் காட்டினார். மாண்புமிகு அமைச்சர் ஆற்காடு வீராசாமி அண்ணனுடைய அறைக்கும் சென்றோம். அவரும் எங்களை அன்போடு வரவழைத்துப் பேசினார். அதேபோல வனத் துறை அமைச்சர். அவர் யார் என்றே நான் முதலிலே பார்த்ததில்லை. ஆனால், அவர் அறைக்குச் சென்றவுடன் என்னிடம், காபி சாப்பிட்டுவிட்டுச் செல்லுங்கள் என்றார். அதேபோல, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பார்க்கச் சென்றோம். பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பார்க்கச் சென்றபோது, எங்களை அன்போடு அழைத்து, ஒன்று சொன்னார். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நினைவுபடுத்தினேன். கடைசியாக அவர் பேசுகின்றபோது அவருடைய பாணியில் சொன்னார், 'மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் இருக்கிற இடத்தில் நாங்கள்; நாங்கள் இருக்கிற இடத்தில் நீங்கள்' என்று அவர் சொன்னார். அதை நான் நினைவுபடுத்தினேன். மீண்டும் அவர் ஒன்றைச் சொன்னார். நாங்கள் இருக்கிற இடத்திலே நாங்களாகத்தான் இருப்போம். நீங்கள் இருக்கிற இடத்தில் நீங்கள் இருக்கவே மாட்டீர்கள் என்று சொன்னாரே, அதை நீங்கள் மறந்துவிட்டீர்களா என்று சொன்னார். அதைப்போல, தொழிலாளர் நலத் துறை அமைச்சரிடத்திலே போனோம். அவரும் அன்போடு எங்களை வரவேற்றார். மரியாதைக்குரிய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சென்றபோது, அவர் ஒன்றைச் சொன்னார். 'என்ன வேண்டுமானாலும் தொலைபேசியிலே கேளுங்கள், செய்து தருகிறேன்' என்று சொன்னார்.

அதேபோல, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 'எங்களைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்' என்ற வார்த்தைகளை உபயோகித்தார்கள். ஆக, நல்ல அமைச்சர்களை இந்த அரசுக்கு மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். இந்த அன்பையும், மரியாதையையும் சென்ற ஐந்தாண்டுகளிலே எந்த அமைச்சரிடமும் நாங்கள் பார்க்க முடியவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, என்னுடைய நன்றியையும்,

பாராட்டையும் தெரிவித்து, மேதகு ஆளுநர் உரையைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன் என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன் அவர்கள்.

*முற்பகல் 11–45*

***திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூழும் தென்கடல், ஆடும் குமரி, தொடரும் வடபால் அடல்சேர் வங்கம், ஆளும் கடல்கள், கிழக்கும் மேற்காம் அறிவும் திறனும் சொரிந்த இன்பத் தமிழ்நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க இம்மாமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சராக ஐந்தாவது முறையாகப் பொறுப்பேற்று பதின்மூன்றாவது சட்டப் பேரவையில் நானும் ஓர் உறுப்பினராக அமர வாய்ப்பு அளித்த என் உயிரினும் மேலான தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், என்னை அரவணைத்து அடையாளம் காட்டி இன்று வரை என்னைக் கைபிடித்து அழைத்து வந்துகொண்டு இருக்கின்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர், எங்கள் தலைமுறையின் நிகழ்காலத் தலைவன். எங்கள் ஆருயிர் அண்ணன் தளபதி அவர்களுக்கும், தஞ்சை மாவட்டக் கழகத்தினுடைய செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான, எங்களை அரவணைத்துச் செல்கின்ற மாண்புமிகு சோழ மண்டலத் தளபதி அவர்களுக்கும், நாகை, திருவாரூர், இரண்டு மாவட்டங்களினுடைய, மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர் அவர்களுக்கும், 25 வயதே நிறைவடைந்து 6 மாதங்களேயான இந்த இளைஞனை, நாகை மாவட்டத்தில் இருக்கக்கூடிய தொகுதிகளிலேயே அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெறச் செய்த கடக்கம் சாமி சிதம்பரனார், கொடவிளாகம் பெரியவர் இராமநாதன், பெரும் பண்ணையூர் ஏ.டி. பன்னீர்செல்வம், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய நெருங்கிய நண்பரும், நீண்ட நாளைய திராவிட இயக்கத்தினுடைய கொள்கைவாதியுமான பெரியவர் நாகலூர் சீனிவாசன் போன்றவர்கள் எல்லாம் வாழ்ந்த, வாழுகின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அந்தக் குத்தாலம் தொகுதி மக்களுக்கு என்னுடைய வணக்கத்திற்குரிய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*



ஜனநாயக முற்போக்குக் கூட்டணியினுடைய நிர்வாகிகளுக்கும், தந்தை மகற்காற்றும் உதவிகளை முறையாகச் செய்து எனக்கு முகவரி தந்திட்ட, இம்மாமன்றத்தில் 1996–2001 கழக ஆட்சிக் காலத்தில் சிறப்பாகப் பணியாற்றிய எனது தந்தை குத்தாலம் கல்யாணம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் முன்மொழிந்து, மாண்புமிகு உறுப்பினர் கலிலூர் ரஹ்மான் அவர்கள் வழிமொழிந்துள்ள ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது, வயதிலே குறைந்தவனாக இருந்தாலும், இந்த மன்றத்திற்குப் புதியவனாக இருந்தாலும், எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த முதல்வர் அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசின் கொள்கைகள், திட்டம் இடம் பெற்றுள்ளதுதான் ஆளுநர் உரை. இப்படிப்பட்ட கொள்கை முடிவுகளைத் திட்டங்களாக இடம்பெறச் செய்து அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து, அதை நடைமுறைப்படுத்துவதற்கு வழிவகை செய்வதுதான் அடுத்து வர இருக்கின்ற நிதிநிலை அறிக்கை. அரசின் எதிர்காலச் செயல் திட்டங்களுக்கான வழிகாட்டும் கொள்கைக் குறிப்பேடாக இந்த ஆளுநர் உரை திகழ்ந்துகொண்டு இருக்கிறது. கழகத்தின் தேர்தல் அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் நிறைவேறும் வகையில் அறிவிப்புப் பிரகடனமாக அமைந்துள்ளது இந்த ஆளுநர் உரை. 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்பதைப்போல, வர இருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் நம்பிக்கையான பல்வேறு அம்சங்கள் இடம் பெற்றுள்ளன என்பதைக் காட்டுகிறது இந்த ஆளுநர் உரை.

"எனது தேர்தல் அறிக்கை முதல் நிதிநிலை அறிக்கையாக அமையும்" என்று சொல்லி ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களின் எண்ண ஓட்டத்தைப் பிரதிபலிக்கும் உரையாக அமைந்துள்ளதுதான் இந்த ஆளுநர் உரை. பதவியேற்பு விழாவில், இலட்சோப இலட்சம் மக்களுக்கு மத்தியில், "நான் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன்" என்று ஆணை வழங்கி, நிர்வாகத்தில் 'செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம்' என்ற புரட்சிகரமான மாறுதலுக்கு அடிகோலியிருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள். இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி, கூட்டுறவுக் கடன் முழுமையாக ரத்து, குழந்தைகளுக்கு வாரம் இரண்டு முட்டை சத்துணவிலே வழங்கப்படும் என்ற மூன்று அறிவிப்புகளுக்கும் கூடுதலான

செலவினை இந்த அரசு முடிவு செய்து இருக்கிறது என்கின்ற ஆளுநர் உரை வரவேற்கத்தக்கது.

இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்ற அந்தத் திட்டத்தை இன்றைக்கு நாடு முழுவதும் வரவேற்றுக்கொண்டு இருக்கிறார்கள். தமிழகத்தில் மட்டுமல்ல, வட நாட்டுத் தலைவர்கள், முதலமைச்சர்கள் கூட அந்தத் திட்டத்தை வரவேற்றுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நாடு, தலைவர் கலைஞருடைய கருத்தை முழுமையாக ஏற்றுக்கொள்கிறது, எப்படி என்பதை, நான் இந்த மாமன்றத்தில் ஒரு கருத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். இந்திய அரசியலில் ஒரு காலகட்டத்தில் முகமது அலி ஜின்னா தன்னுடைய சமுதாயத்திற்காகப் போராடிய அந்த நேரத்தில் வடக்கு, வடக்கை மட்டுமே பார்த்துக்கொண்டு இருந்தது. கம்யூனிசத் தத்துவம் இந்த மண்ணிலே வேரூன்றிய அந்த நேரத்தில், கம்யூனிசத் தத்துவம் இந்த மண்ணிலே வளருகின்ற அந்தக் காலக் கட்டத்தில், வடக்கு, மேற்கை மட்டுமே பார்த்துக்கொண்டு இருந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்ததற்குப் பின்னால், வடக்கு வடக்கை மட்டுமே பார்த்துக்கொண்டு இருந்தது. அப்போதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தை துவக்கி வைத்து, பேசத் தெரியாதவர்களைப் பேச வைத்த, பார்க்கத் தெரியாதவர்களைப் பார்க்க வைத்த மாமேதை அண்ணா அவர்கள் நாடாளுமன்றத்திலே பணியாற்றுகின்ற வாய்ப்பைப் பெற்றபோது, அங்கே உரையாற்றினார்:

'நைல் நதிக்கரையிலே நாகரிகம் அரும்புவதற்கு முன்னால், Egypt-இலே பிரமிடுகள் எழுந்து நிற்பதற்கு முன்னால், பாபிலோனாவில் தொங்கும் தோட்டம் தொடங்குவதற்கு முன்னால், சீனப் பெருஞ்சுவர் தனது அஸ்திவாரத்தைத் தோண்டிக்கொள்வதற்கு முன்னால் எங்கள் தமிழினம் வாழ்ந்திருக்கிறது, வியாபித்திருக்கிறது, அதற்கென்று கலை இருக்கிறது, கலாச்சாரம் இருக்கிறது, பண்பாடு இருக்கிறது, அரசு எங்களையும் திரும்பிப் பாருங்கள்' என்று சொன்னதற்குப் பின்னால்தான், வடக்கு தெற்கு நோக்கியே திரும்பிய வரலாறு. முதன்முதலில் வடக்கைத் தெற்கு நோக்கித் திருப்பியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பதை எவராலும் மறுக்க முடியாவிட்டாலுங்கூட, அதற்குப் பின்னால் நடைமுறைக்கு வந்ததா என்று கேட்டால், இல்லை. ஏன்?

ஒரு காலத்தில் மத்திய அரசாங்கம், மேற்கு வங்கம் எதைச் சிந்திக்கிறதோ, அதைத்தான் மத்திய அரசாங்கம் நிறைவேற்றுகின்ற நிலை



என்ற ஒரு காலக்கட்டம் இருந்தது. அது மாறி, இன்றைக்குத் தமிழகம் எதைச் சிந்திக்கின்றதோ, தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சராக இருக்கக்கூடிய தலைவர் கலைஞர் எதைச் சிந்திக்கிறாரோ, அதைத்தான் நிறைவேற்றுகிறது மத்திய அரசாங்கம் என்று நாடு போற்றுகின்ற அளவுக்கு, அதிகாரத்தால் அல்ல, தன்னுடைய அன்பால், அரவணைப்பால், அரசியல் ஸ்திரத்தன்மையால் — political equilibrium என்று சொல்வார்கள், அப்படிப்பட்ட ஒரு நன்மதிப்பைப் பெற்ற காரணத்தால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழகத்திற்கு ஆயிரக்கணக்கான திட்டங்களைக் கொண்டு வருகிறார்கள் என்பது வரலாற்று உண்மை.

*முற்பகல் 11–50*

அரசியல் கட்சித் தலைவர்கள் ஆளுநர் உரையைப் பற்றிப் பாராட்டுகின்றபோது, இந்த ஆளுநர் உரை தேனில் ஊற வைத்த பலாச் சுளையாக, ஒவ்வொரு அறிவிப்பும் முத்து, முத்தாக உள்ளது என்றும், தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட அனைத்தும் ஆளுநர் உரையில் இடம் பெற்றிருக்கின்றன என்றும் ஜனநாயகப் பண்பு மலிந்த உரை என்றும், தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படக்கூடிய உரை என்றும், புரட்சிகரமான உரை என்றும் இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, திராவிடர் கழகத்தினுடைய தலைவர் மானமிகு ஆசிரியர் வீரமணி அவர்களின் பாராட்டு வரிகளைச் சொல்ல விரும்புகிறேன். "கழக அரசின் சாதனை, செயல் திட்டம், மலர்ச் செண்டாக நறுமணம் வீசும் உரையாக இந்த உரை அமைந்திருக்கிறது. இந்த ஆளுநர் உரை ஒரு பாடமாக மட்டும் அல்ல, பல அரசுகளுக்குப் பாடமாகவும் விளங்கியிருக்கிறது" என்று வீரமணி அவர்கள் இந்த ஆளுநர் உரையைப் பாராட்டியிருக்கிறார்கள்.

"மாநில சுயாட்சி" என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் எண்ண ஓட்டத்தை, "மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி" என்ற வார்த்தை வரிகளை வரையறை செய்து இந்திய நாட்டில் அந்தக் கொள்கையைத் தவழவிட்டுள்ள பெருமை மாண்புமிகு முதல்வர் அவர்களையே சாரும். கூட்டாட்சியில் எதிர்பார்க்கும் மாற்றம் அரசியல் சட்டம்மூலம் ஏற்படும் வரை, உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற முறையில், மத்திய அரசோடு அணுகுமுறை இணக்கமாக இணைந்து செயல்படும் வகையில் அமையும் என்று அறிவித்திருப்பது, அரசியல் பார்வையாளர்கள் பெரிதும் பாராட்டத்தக்கதாக இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது.

சட்டம்—ஒழுங்கில் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழும். சமூக நீதி, சமத்துவம் கிடைக்கும். மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம், தொடரவுள்ள உழவர் சந்தைத் திட்டம், தொடரவுள்ள இலவச மின்சாரத் திட்டம் போன்ற வரையறுக்கத்தக்க அறிவிப்புகள் இடம் பெற்றுள்ள இந்த ஆளுநர் உரை மக்களால் பாராட்டப்பெற்று, வரவேற்பினையும் பெற்றுள்ளது.

பேரவைத் தலைவர் அவர்களே, இலவச மின்சாரம் குறித்து நான் ஒரு கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன். இலவச மின்சாரம் என்பதை வேளாண் உற்பத்தி மின்சாரம் என்று மாற்றம் செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும் டெல்டா மாவட்ட விவசாயிகளின் சார்பில் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

தென்னக நதிகள் இணைப்புத் திட்டம், வேளாண்மை பாதிப்புக்கு ஆளாகாமல் பாதுகாக்கப்படும். தொழிலாளர் நல வாரியம், பனைத் தொழிலாளர் நல வாரியம், கிராமங்களுக்கு கான்கிரீட் சாலைகள் மற்றும் இணைப்புச் சாலைகள், சோடியம் ஆவி விளக்குகள், ஜனநாயக முறையிலே கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்படும். ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் திட்டத்தில் 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரமாக உயர்வு, கழக ஆட்சியில் உருவான மகளிர் சுய உதவிக் குழுக்களைப் போல, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய உதவிக் குழுக்கள் திட்டம் தொடங்கப்படும் என்ற திட்டங்கள் இந்த நாட்டில் வரவேற்கப்பட்டுள்ள திட்டங்களாகும்.

**மேலவை:** அரசியல் சிந்தனைக்கு மேலாக, பல்துறை அறிவார்ந்த அறிஞர்களின் intellectuals-ன் ஆலோசனைகள் அரசுக்குக் கிடைக்க அமையவுள்ள மேலவை.

சிறுபான்மையினருக்குக் கல்வி, வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டுச் சட்டத் திருத்தம், ஆதி திராவிடர்கள் எந்த மதத்தில் இருந்தாலும் சலுகைகள் கிடைக்க வழிவகை செய்யப்படும் திட்டம், சமூக நீதிக் கொள்கையில் ஊறித் திளைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களால் சுய நிதிக் கல்லூரி நிறுவனங்களில் கொண்டு வரப்படவுள்ள இட ஒதுக்கீடு குறித்த சட்டம் ஆகியவை மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ள இந்த ஆளுநர் உரை பாராட்டத்தக்கது.

**மின் உற்பத்தி அதிகரிப்பு:** என்னுடைய தொகுதியாகிய குத்தாலத்தில் மருத்தூர் என்ற கிராமத்தில் ரூபாய் 500 கோடி செலவில்



அமைந்துள்ள—கழக ஆட்சிக் காலத்தில் 101 மெகாவாட் திறன் கொண்ட எரிவாயு மின்சுழலி நிலையத்தினை மேலும் திறன் அதிகரித்து, 200 மெகாவாட் அளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்யப் போதிய அளவு எரிவாயு கிடைப்பதால், gas turbine — எரிவாயு மின்சுழலி நிலையத்தினை விரிவாக்கம் செய்துதர மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11—55

கல்வித் துறையில் மறுமலர்ச்சி ஏற்படுத்திட அறிவித்துள்ள கட்டணக் குறைப்பு போன்ற புரட்சிகரமான அறிவிப்புகள் எதைக் குறிக்கிறது என்று சொன்னால், எந்த ஓர் அரசாங்கம் கல்வித் துறைக்கும், சமூகச் செலவிற்கும், அடிப்படைத் தேவைகளுக்கும் நிறைந்த நிதி ஒதுக்கீடு செய்கிறதோ, அதுதான் மக்கள் மத்தியிலே இடம்பெறுகின்ற அரசாங்கமாக விளங்க முடியும் என்ற நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென் அவர்களுடைய கருத்தை நிறைவேற்றுகின்ற உரையாக இந்த ஆளுநர் உரை அமைந்துள்ளது.

செம்மொழி அங்கீகாரம் பெற்று தமிழ் மத்தியிலே ஆட்சிமொழியில் இருக்கக்கூடிய ஒன்றாக அறிவிக்கப்படுமென்று அழுத்தமாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. நான் ஒரு கருத்தை வலியுறுத்த விரும்புகின்றேன், பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. தமிழ் செம்மொழியாக, அன்னைத் தமிழ் அரியணையிலே வைர மணி மகுடம் சூட்டப்பட்டிருக்கின்றது. அன்னைத் தமிழுக்கு அரியணையிலே வைர மணி மகுடம் சூட்டப்பட்டது மட்டுமல்ல, இந்தியப் பாராளுமன்றம் ஒரு நேரத்தில் எப்படி நம்மீது இந்தியைத் திணிப்பதற்கு முயற்சித்ததோ, திணிப்பதற்கு முயற்சிக்கப்பட்டபோது எப்படியெல்லாம் இந்த நாட்டிலே உயிர்ச் சேதங்கள் கழகத்திற்கும், நாட்டிற்கும் ஏற்பட்டனவோ, அவற்றிற்கெல்லாம் ஆறுதலாகத் தலைவர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு அன்னைத் தமிழுக்கு அரியணையிலே வைர மணி மகுடம் சூட்டியது மட்டுமல்ல, ஆட்சிமொழியில் ஒரு மொழியாக தமிழ் இடம்பெற வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இந்த நாட்டில் பாராளுமன்றத்திலிருந்து இந்தியையும் தலைவர் கலைஞர் எடுத்திருக்கிறார்கள். முதலமைச்சராக இருக்கக்கூடிய தலைவராக அல்ல, கழகத் தலைவராக இருந்தபோது அந்த இந்தியை எடுத்திருக்கிறார்கள். எப்படி என்று கேட்டால், இந்த நாட்டினுடைய ஜனாதிபதியாக இருக்கக்கூடிய அப்துல் கலாம் அவர்களுடைய தாய்மொழி இந்தி கிடையாது. இந்த நாட்டில் ஜனநாயக முற்போக்குக்

கூட்டணியினுடைய தேசியத் தலைவராக இருக்கக்கூடிய அன்னை சோனியா காந்தி அவர்களுடைய தாய்மொழி இந்தி கிடையாது. இந்த நாட்டை நிர்வகித்துக் கொண்டிருக்கின்ற மூத்த அமைச்சராக இருக்கக்கூடிய பிரதம மந்திரி மன்மோகன் சிங் அவர்களுடைய தாய்மொழி இந்தி கிடையாது. இங்கே நீங்கள் இந்த அவையிலே வீற்றிருப்பதைப்போல, வங்கத்துச் சிங்கமாம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பிறந்த மண்ணிலேயிருந்து வந்து இந்திய நாட்டினுடைய நாடாளுமன்றத்திற்கு நடுநாயகமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற சோம்நாத் சாட்டர்ஜி அவர்களுடைய தாய்மொழி இந்தி கிடையாது. தான் ஏற்றுக்கொண்ட கொள்கைக்கும், கொண்ட இலட்சியத்திற்கும், உழைக்க வேண்டுமென்று நினைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், முதல்வராக இருந்தாலும், இல்லாவிட்டாலும் அந்தக் கொள்கையை, பாராளுமன்றத்திலே இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பது பாராட்டத்தக்கதும், வரவேற்கத்தக்கதும் ஆகும். உலகத் தமிழனின் இதயக் கமலத்தில் எல்லாம் வீற்றிருக்கக்கூடிய தலைவராக அவர்கள் இன்றைக்கு நெகிழ்ந்து போய் இருக்கின்றார்கள்.

**அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம்:**

"இருட்டறையில் உள்ளதடா உலகம்,
சாதி இருக்கிறது என்பானும் இருக்கின்றானே"

என்ற புரட்சிக் கவிஞன் பாரதிதாசனுடைய ஆதங்கத்திற்கு விடியலாக, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் இலட்சியங்களில் ஒன்றான, தகுதியுள்ள அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற புரட்சிகரமான ஆணை வரவேற்கத்தக்கது.

**கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம்:** கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு இந்த ஆளுநர் உரையில் இடம் பெற்றிருக்கிறது, பாராட்டி வரவேற்கத்தக்கதாகும்.

அனைத்து நகராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு வரவேற்றுப் பாராட்டத்தக்க ஒன்று.

பண்பாட்டின் சின்னமாம், காவிய நாயகியாம் கண்ணகியினுடைய சிலையை தன்னுடைய திருக்கரத்தால் திறந்து வைக்கவிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன். கண்ணகி பெயர் சொல்லும் பூம்புகாரில் கழக ஆட்சியில் துவங்கப்பட்டு 1996–2001–ல் பணி தொடங்கி அமையவுள்ள பூம்புகார் மீன்பிடித்



துறைமுகத்தின் பணிகளை விரைந்து செயல்படுத்திட உங்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஜூன் 12 ஆம் தேதி வழக்கம்போல் காவிரியில் தண்ணீர் திறந்துவிடப்படும் என அறிவித்துள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் விவசாயிகளின் சார்பிலேயும், காவிரி டெல்டா விவசாயிகளின் சார்பிலேயும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, வாழுகின்ற வாழ்க்கைக்கும், கொண்ட கொள்கைக்கும், ஏற்றுக்கொண்ட இலட்சியத்திற்கும் மாறுபாடு இல்லாமல் வாழுகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கம்பம் நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தில் உரையாற்றுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கம்பம் தொகுதியில் வேட்பாளராக நிற்பதற்கு எனக்கு வாய்ப்பளித்த மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர், ஆருயிர் அண்ணன் புரட்சிப் புயல் வைகோ அவர்களுக்கும், கம்பம் பகுதியிலே தேர்தல் நேரத்தில், தேர்தல் பிரச்சாரத்திற்காக வருகை புரிந்து, எனது வெற்றிக்காகப் பிரச்சாரம் செய்த முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், கம்பம் தொகுதியில் எனது வெற்றிக்காக உழைத்த தோழமை கட்சியைச் சார்ந்த தலைவர்களுக்கும், நண்பர்களுக்கும், எனக்கு வாக்களித்து வெற்றியை ஈட்டித் தந்த அருமை கம்பம் தொகுதிப் பெருமக்களுக்கும் இந்த அவையிலே என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*நண்பகல் 12–00*

மேதகு ஆளுநர் உரையில் 11–வது வரிசை எண்ணில் முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை அதிகரிக்க அனுமதித்துள்ள உச்ச நீதிமன்றத்தின் ஆணையினை நடைமுறைப்படுத்த ஆவன செய்யப்படும் என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. முல்லைப்

பெரியாறு திட்டம், தேனி மாவட்டம், சிவகங்கை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம் போன்ற மாவட்டங்களில் 3 இலட்சம் ஏக்கர் பாசனம் செய்கின்ற விவசாயிகள் பயன்படுத்துகின்ற, மக்கள் குடிநீருக்காக உபயோகிக்கின்ற, மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்ற, ஒரு அருமையான திட்டம்.

1895 ஆம் ஆண்டு அக்டோபர் 10 ஆம் நாள், பல்வேறு கஷ்டங்களுக்கும், இடர்ப்பாடுகளுக்கும் இடையில், பென்னி குவிக் என்ற ஆங்கிலேயரால் கட்டப்பட்ட அந்தப் பெரியாறு அணை 999 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு, அந்த ஒப்பந்தத்திலே திருவாங்கூர் மகாராஜா சார்பில், திவான் வெங்கம் இராம ஐயங்காரும், சென்னை ராஜதானி சார்பில் ஜான் ஹைட் ஹாமில்டன் என்பவரும், சாட்சிகளாக பிரின்சும், குருவில்லாவும் சாட்சிக் கையெழுத்திட்டு, அந்த சாசனத்திலே, பெரியாறு அணையில் தேங்கி இருக்கின்ற அந்த நீர்ப் பரப்பில் எந்த அணையும் குறுக்கே கட்டக் கூடாது என்றும், அந்த 104 அடிக்கு மேலே 152 அடி வரைக்கும் தேங்கியிருக்கின்ற அந்தத் தண்ணீரை முழுமையாகப் பாசனத்திற்கும், மின்சாரத்திற்கும், மின்சார உற்பத்திக்கும் பயன்படுத்தலாம் என்றும், அந்த அணையினை மராமத்துச் செய்வதற்குண்டான முழு அதிகாரமும், பொருட்களை எடுத்துச் செல்வதற்குப் போக்குவரத்து உரிமையும், இப்படிப் பல்வேறு உரிமைகளோடு அந்த இடர்ப்பாடுகளை, இன்னல்களைத் தீர்க்கின்ற வகையிலே, நீண்ட நாட்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே, 999 ஆண்டு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு, 1979 ஆம் ஆண்டு வரைக்கும் முழுமையாக 152 அடி தண்ணீரை நாம் பெற்றோம், பயன்படுத்தினோம். விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தார்கள்.

பிற்பகல் 12–05

1979 ஆம் ஆண்டு, அந்த அணை பலகீனமாகிவிட்டது. பலமிழந்துவிட்டது. அணை உடைவதற்குண்டான அபாயம் அங்கே இருக்கின்றது என்று கேரள அரசும், அங்கே அந்த அணையைச் சுற்றி வாழ்கின்ற மக்களும் பீதி எழுப்பி, ஒரு அச்சத்தை எழுப்பி, அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதன்மூலமாக டெல்லியிலேயிருந்து மத்திய நீர்வளத் துறை கமிஷனின் மரியாதைக்குரிய தாமஸ் அவர்கள் பார்வையிட்டு, அந்த அணையினைப் பலப்படுத்திவிட்டு, 136 அடியிலிருந்து 152 அடி தண்ணீர் தேக்கலாம் என்று அவர் உறுதியாகக் கூறிய பின், அந்த அணையினைப் பலப்படுத்துகின்ற அந்தப் பணிகள், குறிப்பாக, Cable anchoring, RCC



capping, கைப்பிடிச் சுவர் உயர்த்துதல், முட்டுச் சுவர் கட்டுதல், சிற்றணை, மண் அணை பலப்படுத்துதல், மூன்று வெளிப்போக்கி உருவாக்குதல் போன்ற பணிகளையெல்லாம் செய்து முடித்து, இன்றளவும் இன்னும் 136 அடி தண்ணீருக்கு மேல் தேக்கி வைக்காமல் இருக்கின்ற அந்த நிலையில், அந்தப் பகுதியிலே, தேனி மாவட்டத்தில், இன்னும் பல்வேறு மாவட்டங்களிலே வாழ்கின்ற விவசாயிகள், விவசாய உற்பத்தி இழப்பு, அரசாங்கத்திற்கு மின்சார உற்பத்தி இழப்பு, தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு போன்ற கஷ்ட, நஷ்டங்களில் இன்றைக்கு அங்கே மக்கள் வாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தச் சூழ்நிலையில், டெல்லி உச்ச நீதிமன்றத்திலிருந்து ஒரு தீர்ப்பு தரப்பட்டிருக்கின்றது. 142 அடி தண்ணீர் தேக்கலாம். அதை கேரள அரசு அமல்படுத்த வேண்டும் என்று அந்தத் தீர்ப்பு வெளியாகி, அந்தத் தீர்ப்பைக் கண்ட பின்பு கேரள அரசு அவசர, அவசரமாக இப்பிரச்சினை குறித்து விவாதிக்க கேரள சட்டப் பேரவையின் சிறப்புக் கூட்டத் தொடர் நடைபெற்று, அதிலே கேரள நீர்ப்பாசனச் சட்டத் திருத்த மசோதாவின் நோக்கம், கேரள அணையின் பாதுகாப்பை வலுப்படுத்துவதாகும். இதற்காகக் கேரள மாநிலத்தின் அணைகள் பாதுகாப்பு ஆணையத்திற்குக் கூடுதல் அதிகாரம் வழங்க இம்மசோதா வகை செய்கின்றது. இம்மசோதாவை நீர்வளத் துறை அமைச்சர் மாண்புமிகு இராதாகிருஷ்ணன் தாக்கல் செய்தார். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்று அமல்படுத்தாமல், அவையில் மசோதா கொண்டு வந்து, கேரள அரசு அத்தீர்ப்பினை நிராகரித்துள்ளது. இந்த நிலையில், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை கேரள அரசு அமல்படுத்தாமல் நிராகரித்துள்ள இந்தச் சூழ்நிலையில், மாண்புமிகு முதல்வர் ஆருயிர் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த அவையிலே உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அமல்படுத்துகின்ற வகையிலே ஒரு மசோதாவைக் கொண்டு வரவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, பாலாறு திட்டம். கர்நாடக மாநிலத்தில் கமுதி—நந்திமலையில் பாலாறு உற்பத்தியாகி, ஆந்திர மாநில எல்லையான சாந்திபுரத்தைத் தொடுகின்றது. இங்கிருந்து 45 கிலோ மீட்டர் பயணித்துத் தமிழக எல்லையை அடைகின்றது. இந்தத் திட்டம்—இந்தப் பாலாறு நதி நீர் மூலமாக நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மரியாதைக்குரிய அண்ணன் துரைமுருகன் அவர்களுடைய மாவட்டமான வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சி, திருவள்ளூர், தாம்பரம், ஆலந்தூர், குரோம்பேட்டை ஆகிய

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2006 மே 27

பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்குக் குடிநீருக்காகவும், பாசனத்திற்காகவும் பயன்படுகின்ற ஒரு அருமையான திட்டம். ஏற்கெனவே கர்நாடகத்தில் உற்பத்தியாகி வருகின்ற அந்த வழியில் பேத்தமங்கலத்தில் கட்டப்பட்ட ஒரு அணையால் பாலாறு நீரினுடைய வரத்து குறைந்திருக்கின்றது.

மேலும், ஆந்திராவிலே பல தடுப்பணைகள் கட்டப்பட்டும், இச்சூழ்நிலையில் இன்னும் அந்தப் பாலாறு அணை, அதனுடைய தண்ணீர் முழுமையாக நமக்குக் கிடைக்க முடியாத வகையிலே, இன்றைய ஆந்திர முதல்வர் குப்பம் பகுதியிலே, அதன் பக்கத்திலே இருக்கின்ற கணேசபுரம் என்ற அந்தக் கிராமத்தில் நூறு கோடிக்கும் மேலாகச் செலவிட்டு ஒரு அணை கட்டும் திட்டம் போன்றவற்றால்—நான் மேலே குறிப்பிட்ட திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சி மாவட்டம், வேலூர் மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம் போன்ற பகுதிகளிலே இருக்கின்ற, வசிக்கின்ற அந்த விவசாயப் பெருமக்கள் அங்கே குடிநீருக்காக அல்லல்படுகின்ற நிலையிருக்கிறது. அந்த மக்கள் எல்லாம் இன்றைக்கு மிகவும் கஷ்டத்தில், ஒரு அவல நிலையில் இருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் இந்தப் பிரச்சினையில் தீவிரமாகச் செயல்பட்டு, அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களைக் காப்பாற்றுகிற முயற்சியிலே ஈடுபடவேண்டும் என்று இந்த அருமையான நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–10*

அதைப்போல, தேர்தல் அறிக்கையிலே இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்குவதாகச் சொல்லப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தின் நோக்கம், ஏழையெளிய மக்களின் பொழுதுபோக்கு அம்சமாக, பொழுதுபோக்காக அதைப் பயன்படுத்திக்கொள்வதற்காகவும், பொது அறிவைப் பெருக்கிக்கொள்வதற்காகவும், பொது அறிவின் மூலமாக நல்ல உலக விஷயங்களை அறிந்துகொள்வதற்காகவும் அந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டதாக ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. இது நல்ல திட்டம்தான். அதே நேரத்திலே நான் சொல்வது என்னவென்று சொன்னால், வண்ணத் தொலைக்காட்சி இல்லாத, வைத்திருக்காத அந்த ஏழையெளிய மக்களுக்கு வழங்கக்கூடிய ஒரு திட்டம் என்றாலுங்கூட, இன்றைக்குக் குடிசைப் பகுதியிலே வாழ்கின்ற பெருமக்கள், நிறையப் பேருக்கு இந்தத் தொலைக்காட்சிகூட இல்லாத நிலை இருக்கின்றது. அனேகமாக அந்தக் குடிசையிலே வாழ்கின்ற மக்களுக்குத்தான், இந்தத் தொலைக்காட்சி செல்லவிருக்கின்றது என்பதை நான் உணர்கின்றேன்.



2006 மே 27] [திரு. நா. இராமகிருஷ்ணன்]

அப்படி நீங்கள் குடிசைவாழ் மக்களுக்கும், ஏழையெளிய மக்களுக்கும் அந்த வண்ணத் தொலைக்காட்சியைத் தர இருக்கின்ற இந்த நேரத்தில், அந்தக் குடிசையிலே மின்சார இணைப்பு இல்லையென்று சொன்னால், முதலில் அந்த மின்சார இணைப்பைத் தந்துவிட்டு, பின்பு அந்த வண்ணத் தொலைக்காட்சியையும் தந்தால் அது பயனுள்ளதாக இருக்கும்.

இன்னொரு கருத்து, வண்ணத் தொலைக்காட்சி தருகின்ற அந்த நேரத்தில், அந்த வண்ணத் தொலைக்காட்சியின்மூலமாக பொது அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கோ, அல்லது பொழுதுபோக்கு அம்சம் நிறைய கிடைக்கும் என்றோ சொல்ல முடியாது. அதில் நிறைய சேனல்கள், அந்த வண்ணத் தொலைக்காட்சி இணைப்பில் இருந்தால்தான், இந்த விஷயங்கள் எல்லாம் அந்தப் பொது மக்களுக்குக் கிடைக்கும். ஆகவே, அந்தத் தொலைக்காட்சியைத் தருவதோடு, cable connection இணைப்பையும் தந்தால் அந்த ஏழையெளிய மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக, உருப்படியாக இருக்கும் என்று இந்த நேரத்திலே என்னுடைய கருத்தை, இந்த அருமையான சூழ்நிலையில் நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, வரிசை எண் 47–ல் ஒட்டுமொத்தச் சுற்றுலாத் திட்டம். அந்த ஒட்டுமொத்தச் சுற்றுலாத் திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சுற்றுலா மையங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதன் மூலமாகப் பயணிகள் ஈர்க்கப்பட்டு, அதன்மூலமாக வருவாய், வேலைவாய்ப்பு பெருகுவதற்கு ஒரு காரணமாக அந்தச் சுற்றுலாத் திட்டம் அமைகின்றது. அந்த வகையிலே எடுத்துக்கொண்டால், தேனி மாவட்டத்திலே, சுற்றுலா மையமாக, சுற்றுலாத் தலமாகக் கருதப்படுகின்ற, சுருளியாறு, மேகமலை போன்ற மையங்கள் எல்லாம் இருக்கின்றன. வான் பொய்த்தாலும் தான் பொய்க்காத அந்தச் சுருளியாறு—நீண்ட காலக் கோரிக்கை—அதைச் சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டுமென்பது நீண்ட காலக் கோரிக்கை. அந்த நீரில் குளிக்கும்பொழுது, நீரில் கலந்து வருகின்ற மூலிகைகள் உடல் ஆரோக்கியத்தைத் தருகின்றன. இந்தச் சிறப்புமிக்க சுருளியாறு மையத்திலே, அங்கே குளிக்கின்றவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே, சுற்றுச்சுவர் தடுப்பு கட்டியும், அதைப்போல விடுதிகள் கட்டியும், சுற்றுலா மையத்திற்குத் தேவையான என்னென்ன வசதிகள் செய்ய வேண்டுமோ, அந்த வசதிகளையெல்லாம் செய்து, அதைச் சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. நா. இராமகிருஷ்ணன்] [2006 மே 27

என்னுடைய தொகுதியிலே பச்சைக் காமாட்சி மேகமலை என்று
ன்றிருக்கின்றது. கொடைக்கானலைப்போல, ஊட்டியைப்போல, 7,000
புடிக்கு மேலாக இருக்கின்றது அந்த அருமையான இடம். அங்கே பச்சைப்
ட்டு உடுத்தியதைப்போல, எங்கும் பச்சைப் பசேல் என்று காணப்படுகின்ற
புழகான தேயிலைத் தோட்டங்கள், அழகான சாலைகள், விண்ணைத்
தாடுகின்ற மரங்கள், தவழ்ந்து விளையாடுகின்ற முகில்கள் கூட்டம்
புழகாக இருக்கும், ரம்மியமான தோற்றம்; ஏழுக்கும் மேலான
ர்த்தேக்கங்கள். இந்த இயற்கை அழகு கொண்ட, அந்த மேகமலையை
ங்கள் சுற்றுலாத் தலமாக ஆக்கி, தேனி மாவட்டத்திற்கும், எனது
தாகுதிக்கும் பெருமையைத் தேடித் தரவேண்டும் என்றும் இந்த
நரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, தமிழரின் பண்பாட்டுச் சின்னம், பத்தினித் தெய்வம்
ண்ணகி சிலையை மீண்டும் நிறுவுவது என்பது தமிழர்களுடைய
ண்பாடு. அதைப் பற்றி எனக்கு மாற்றுக் கருத்து ஒன்றும் கிடையாது.
மிழரின் பண்பாட்டுச் சின்னம், பத்தினித் தெய்வம், கண்ணகி சிலையை
ற்கரைச் சாலையிலே நீங்கள் நிர்மாணம் செய்வதை வரவேற்பதோடு,
தே நேரத்திலே, கம்பம் தொகுதியில், மேற்குத் தொடர்ச்சி மலையில்
ங்கேயிருக்கின்ற மங்களதேவிக் கோட்டம், வண்ணாத்திப் பாறையில்
ண்ணகிக் கோயில் சீரழிந்து, சிதைந்து, சின்னாபின்னமாகி, இன்றைக்கு
ருக்குலைந்து இருக்கின்றது. அந்த மங்களதேவிக் கோட்டத்தை இவ்வரசு
துப்பித்து, சீரமைத்துத் தரவேண்டும். அதோடு, அந்தக் கோட்டத்திற்குப்
யணிகள், பக்தர்கள் இப்போது செல்கின்ற அந்தப் பாதை
ரிமையில்லாமல் இருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், அந்தப் பாதை
ரிமையை கேரள அரசிடமிருந்து பெற்றோ, அல்லது தமிழ்நாட்டின்
ல்லையிலிருந்து அந்த மங்களதேவிக் கோட்டத்திற்குச் செல்கின்ற ஒரு
ாதையைப் புதுப்பித்துத் தந்தோ, அந்தப் பணியை உடனடியாக
மற்கொள்ள வேண்டுமென்ற எனது வேண்டுகோளை இந்த
ாமன்றத்திலே வைத்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகின்றேன். நன்றி,
ணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு
றுப்பினர் திரு. டி. ரவிக்குமார்.

*ற்பகல் 12–15*

***திரு. டி. ரவிக்குமார்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
ந்த மரபு மிகுந்த மாமன்றத்திற்கு நான் வருவதற்குக் காரணமாக இருந்து,



2006 மே 27] [திரு. டி. ரவிக்குமார்]

தான் போட்டியிட இருந்த தொகுதியினை எனக்கு ஒதுக்கித் தந்து,
என்னைத் தன்னிடத்தில் நிறுத்தி இங்கே அனுப்பி வைத்திருக்கின்ற எங்கள்
இயக்கத்தின் பொதுச் செயலாளரும், எழுச்சித் தமிழருமான தொல்.
திருமாவளவன் அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக உழைத்து 13,000
வாக்குகளுக்கும் அதிகமான வித்தியாசத்தில் என்னை வெற்றிபெறச்
செய்யப் பாடுபட்ட ஜனநாயக மக்கள் கூட்டணியின் தலைவர்களுக்கும்,
தொண்டர்களுக்கும், கடந்த ஒரு நூற்றாண்டுக் காலமாகவே, சுவாமி
சகஜானந்தா காலத்திலிருந்து அரசியல் உணர்வோடு செயல்பட்டு, அதே
உணர்வைப் போற்றிப் பாதுகாத்து, அதன் விளைவாக என்னைத்
தங்களுடைய பிரதிநிதியாக இங்கே அனுப்பியிருக்கின்ற
காட்டுமன்னார்கோயில் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியை,
வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பண்டைக் காலத்திலே திருக்குறளுக்கு எழுதப்பட்ட உரைகளிலேயே
சிறந்த உரை என்னவென்று கேட்டால், பரிமேலழகர் உரை என்று
சொல்வார்கள். இன்றைக்கு நவீன காலத்து உரைகளிலே சிறந்த உரை
எதுவென்று கேட்டால், அறிஞர் பெருமக்களெல்லாம் ஏற்றுக்கொள்கின்ற
ஓர் அற்புதமான உரையைத் தந்து வள்ளுவத்தைத் தமது மூச்சாகக்
கொண்டிருக்கின்ற முத்தமிழ் அறிஞரின் அவையிலே (மேசையைத் தட்டும்
ஒலி) ஓர் எழுத்தாளனாக நானும் நின்று பேசுகின்ற ஒரு பெருமையைப்
பெற்ற அந்த நிலையையும் எண்ணி இந்த ஆளுநர் உரைமீது என்னுடைய
கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

இன்றைக்கு ஊடகங்களால் ஊதி வளர்க்கப்பட்டு, இந்திய துணைக்
கண்டமே ஏதோ கொந்தளிப்பில் இருப்பதுபோல ஒரு மாயத் தோற்றத்தை
உருவாக்கி, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயர் கல்வி நிலையங்களிலே
இடவொதுக்கீட்டு உரிமையை மறுத்திட வேண்டுமென்று நடக்கின்ற
அந்தச் சதித் திட்டங்களுக்கு மைய அரசும் துணை போய்விடுமோ,
அல்லது பயந்து தயங்கி விடுமோ என்கின்ற ஓர் அச்ச உணர்வு நாட்டு
மக்களிடத்திலே எழுந்திருக்கின்ற நிலையிலே, மைய அரசு அந்த
இடவொதுக்கீட்டுக் கொள்கையை நிறைவேற்றுவோம் என்று உறுதியோடு
நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, அதற்கு ஊக்கம்
அளிக்கும் விதமாக இந்த மாமன்றத்திலே ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற
வேண்டுமென்று எங்கள் இயக்கத்தின் பொதுச் செயலாளர் அவர்கள்
அறிக்கையின் வாயிலாக விடுத்த வேண்டுகோளை ஏற்கும் விதமாக,
இதே கூட்டத் தொடரிலேயே அதற்கான தீர்மானம் நிறைவேற்றப்
படுமென்று ஆளுநர் உரையிலே அறிவித்து, இன்றைக்கு இந்த நாட்டிலே

இருக்கின்ற ஒடுக்கப்பட்ட கோடிக்கணக்கான மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்த இந்த அரசின் அறிவிப்பை நான் வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்திலே, இன்றைக்கு மத்திய அரசு அமைத்திருக்கின்ற அந்த அமைச்சர்கள் குழு, அவர்கள் உயர் கல்வி நிலையங்களிலே இடங்களை உயர்த்திக்கொள்ளலாம் என்கின்ற ஒரு பரிந்துரையை வழங்கியிருக்கின்றார்கள். அப்படியான பரிந்துரை என்பது இடவொதுக்கீடு தொடர்பாக இதுகாறும் பேணப்பட்டு வந்த மரபுக்கும், அரசியலமைப்புச் சட்ட விதிமுறைகளுக்கும் முரணானது. அப்படி இடங்கள் உயர்த்தப்படுமேயானால் அந்த இடங்களிலும் இடவொதுக்கீட்டினை வழங்க வேண்டுமென்ற திருத்தம், நாம் கொண்டு வருகிற தீர்மானத்திலே சேர்க்கப்பட வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் முன்னே தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இடவொதுக்கீட்டைக் காப்பதிலே நாம் எந்த அளவுக்கு அக்கறையோடு இருக்கின்றோமோ, அதற்காக இந்த அவையிலே தீர்மானம் இந்தத் தொடரிலேயே நிறைவேற்றப்படுமென்று அறிவித்திருக்கின்றோமோ, அப்படியே, மிக அண்மையில் இருக்கின்ற நம்முடைய சொந்தங்கள், ஈழத் தமிழர்கள்மீது இன்றைக்குப் பேரினவாதிகளால் ஒரு யுத்தம் வலிந்து திணிக்கப்படுகிறது. அதுபற்றியும் கவலை தெரிவித்து இதிலே குறிப்பிடப்பட்டிருந்தாலுங்கூட, இன்றைக்கு அவர்கள் எப்போது தங்கள் தலையிலே குண்டு விழுமோ, தங்கள் உயிர்கள் பறிக்கப்படுமோ என்கிற அச்சத்தின் காரணமாக ஏதிலிகளாக, தஞ்சம் தேடி நமது மண்ணை நோக்கி ஓடி வரும்போது, கடலிலேயே ஜல சமாதி அடைகின்ற கோரக் காட்சிகளை நாம் கண்டு கொண்டிருக்கின்றோம். இந்த நிலையிலும் நாம் பாராமுகமாக இருந்துவிடாமல், நாம் எல்லாம் அவர்களுக்கு ஆறுதலாக இருக்கின்றோம் என்று இந்த உலகுக்கு எடுத்துச் சொல்லும்விதமாக, அந்த நாட்டிலே வலிந்து திணிக்கப்படுகின்ற யுத்தம் தவிர்க்கப்பட வேண்டும், அமைதியான தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும் என்கின்ற தீர்மானத்தை நாம் இந்த அவையிலே, இதே கூட்டத்தொடரிலே ஒருமனதாக நிறைவேற்ற வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே கொண்டு வரப்பட்ட திட்டம் என்று புறக்கணித்துவிடாமல், ஏழை, எளிய குழந்தைகளுக்கு உதவும் என்கிற விதத்திலே பெருந்தன்மையோடு இலவச மிதி வண்டித் திட்டத்தைத்



தொடர்ந்து நிறைவேற்றுவோம் என்கின்ற உறுதிமொழியை இந்த அரசு வழங்கி இருக்கிறது. அது மிகவும் பாராட்டுக்குரியது. (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12–20

அதே பெருந்தன்மையோடு உழவர் பாதுகாப்புத் திட்டத்தையும் நீங்கள் தொடர்ந்து நிறைவேற்றவேண்டும் என்று உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக, இந்த ஆளுநர் உரையிலே பல்வேறு விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலுங்கூட, கல்விக்காகக் காட்டப்பட்டிருக்கின்ற அக்கறை மிகவும் முக்கியமானது, மிகவும் வரவேற்றுப் பாராட்டப்பட வேண்டியது. நுழைவுத் தேர்வை ரத்துச் செய்வதிலும், கல்விக் கட்டணங்களைக் குறைப்போம் என்று சொல்வதிலும், பள்ளிகளிலே, கல்லூரிகளிலே ஆசிரியர்களை டைம் ஸ்கேல் (Time Scale) அடிப்படையிலே நியமித்து, மாணவர்களுக்கு நல்ல கல்வியை வழங்குவோம் என்று சொல்வதிலும் அந்த அக்கறை வெளிப்பட்டிருக்கின்றது. இது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

அதே நேரத்திலே, இதற்கு முன்னாலே நீங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த காலத்திலே அறிமுகப்படுத்தப்பட்டு, பின்னாலே 25 விழுக்காடாக உயர்த்தப்பட்டு, இன்றைக்கு நீதிமன்றங்களுடைய தலையீட்டினாலே பறிக்கப்பட்டிருக்கின்ற கிராமப்புற மாணவர்களுக்கான இடவொதுக்கீடு என்கின்ற அந்த உரிமையை மீண்டும் பெறுவதற்கு— உச்ச நீதிமன்றத்திலே நிலுவையில் இருக்கின்ற அந்த வழக்கைத் துரிதப்படுத்தி, வரும் கல்வி ஆண்டிலேயே அந்த இடவொதுக்கீட்டு உரிமையை அந்த மாணவர்களுக்கு மீண்டும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். நேற்றும்கூட இந்த அவையிலே அது பற்றிய விவாதங்கள் நடந்தன.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு மருத்துவப் படிப்பிற்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் போட்டியிட்டும், நல்ல மதிப்பெண்களைப் பெற்றும், அவர்கள் இடம்பெற முடியாத நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதற்கான காரணம், நம்முடைய மாணவர்களுடைய வளர்ச்சிக்கும், அவர்களுடைய கல்வி நிலைக்கும் ஏற்ற விதத்திலே, அந்த விகிதத்திலே போதுமான மருத்துவக் கல்லூரிகள் நமது மாநிலத்திலே இல்லை. இன்றைக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும்,

மாவட்டத் தலைநகரங்களிலே மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த மருத்துவமனைகளோடு சேர்ந்து 50 இடங்கள் கொண்ட ஒரு மருத்துவக் கல்லூரியைத் துவக்குவது ஒன்றும் முடியாத காரியம் அல்ல. இன்றைக்கு மத்தியிலே சுகாதாரத் துறை அமைச்சராக இருக்கின்றவர் நமது தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்கின்ற காரணத்தினாலே, இப்படியான ஒரு திட்டம் வந்தால், அவரும் உங்களுக்கு ஒத்துழைப்பார். எனவே, மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகளை..

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடையது கன்னிப் பேச்சாக இருந்தாலும், அவருக்கு உதவும் வகையிலே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரையில் முதலமைச்சராக இருந்தபோது ஒரு கொள்கை முடிவையே அறிவித்தோம். ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அரசாங்க மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தினுடைய கொள்கை. அந்த அடிப்படையிலேதான், தூத்துக்குடியிலே, கன்னியாகுமரியிலே, வேலூரிலே அப்போது மருத்துவக் கல்லூரிகள் கொண்டு வந்தோம். தொடர்ந்து கலைஞருடைய ஆட்சியிலே விழுப்புரம் போன்ற மாவட்டங்களிலேயும் மருத்துவக் கல்லூரி கொண்டு வருவதற்கான முயற்சிகளுக்கு ஏற்கெனவே கலைஞர் அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள், கொண்டு வருவோம். (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 12–25*

**திரு. டி. ரவிக்குமார்:** உடனடியாகவே அதை ஏற்றுக்கொள்ளும் விதமாக அறிவிப்புச் செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. அடுத்து, தந்தை பெரியார் அவர்களுடைய நெஞ்சிலே தைத்த முள்ளைக் களையும் விதமாக, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்கின்ற ஒரு புரட்சிகரமான சட்டத்தை இன்றைக்கு இந்த அரசு நிறைவேற்றியிருக்கின்றது. அதை மனப்பூர்வமாக வரவேற்கின்ற அதே நேரத்திலே, அந்தச் சட்டத்தை இந்து அறநிலையத் துறைக்கு உட்படாத அனைத்து இந்துக் கோயில்களுக்கும் விரிவுபடுத்தி, அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம், அனைத்து இந்துக் கோயில்களிலும் அர்ச்சகராகலாம் என்று அதனை அறிவிக்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

அனைத்து மதங்களிலும் உள்ள ஆதி திராவிடர்களுக்கு, ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் விரிவுபடுத்தப்படும் என்ற



ஒரு சிறப்பான அறிவிப்பை ஆளுநர் உரையிலே வெளியிட்டிருக்கின்றீர்கள்.
அது மிகவும் வரவேற்கப்படவேண்டிய ஓர் அறிவிப்பு. புரட்சியாளர்
அம்பேத்கர் அவர்கள் இந்து மதத்தை விட்டு விலகி, பௌத்தத்தை ஏற்று,
இந்த ஆண்டு 50 ஆண்டுகளை எட்டுகிறது. அந்த மதமாற்றத்தின் பொன்
விழா ஆண்டு இது. இந்த ஆண்டிலே அனைத்து மதங்களிலும் உள்ள
ஆதி திராவிடர்களுக்கான சலுகைகள் விரிவுபடுத்தப்படும் என்கின்ற அந்த
அறிவிப்பை, தலித் கிறிஸ்துவர்களுக்கு இடவொதுக்கீடு, இஸ்லாத்தைத்
தழுவிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடவொதுக்கீட்டு உரிமை என்று
குறிப்பான சட்டங்களாக, அதிலும் குறிப்பாக, அந்த மதமாற்றப் பொன்
விழாவில், அக்டோபர் மாதத்திற்குள்ளாக அறிவித்து, அதைப்
பெருமைப்படுத்த வேண்டுமாய் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழுக்குச் செம்மொழி அந்தஸ்தை வாங்கித் தந்த செயலை உலகத்
தமிழர்கள் எல்லோருமே பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால்,
செம்மொழி என்கின்ற அந்தப் பெருமை, தமிழை நாம் இன்னும் ஆற்றல்
கொண்ட மொழியாக, அறிவியல் மொழியாக வளர்த்தெடுப்பதிலேதான்
தங்கியிருக்கின்றது. இன்றும்கூட ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள்,
அவையெல்லாம் படியெடுக்கப்பட்டாலுங்கூட, தொகுத்து
ஆவணப்படுத்தப்படாமல் கிடக்கின்றன. இன்னும் படியெடுக்கப்படாத
கல்வெட்டுகள் நம்முடைய கோயில்களிலே, சிற்றூர்களிலே நிறைந்து
கிடக்கின்றன. உலகத்திலேயே ஒரு வரலாற்றை உருவாக்குவதற்கு
ஆதாரங்களாக இருக்கின்ற கல்வெட்டுகள் நிறைந்த பகுதிகளிலே, மிகக்
குறைந்த பகுதிகளிலே ஒன்றாகத் தமிழகம் விளங்கிக் கொண்டிருக்கின்றது.
அப்படி நம்முடைய தமிழர்களுடைய தொன்மையான நாகரிகத்தின்
வரலாற்றை நாம் தோண்டியெடுக்கவேண்டும் என்று சொன்னால்,
அதற்கான ஆவணங்களாக, ஆதாரங்களாக இருக்கின்ற அந்தக்
கல்வெட்டுகளையெல்லாம் நாம் படியெடுத்துத் தொகுத்து,
படியெடுக்கப்பட்ட அந்தக் கல்வெட்டு ஆவணங்களையும் நாம்
ஆவணங்களாக மாற்றவேண்டும். அப்படியெல்லாம் செய்தால்தான்,
இந்தச் செம்மொழிச் சிறப்பு என்பது பாதுகாக்கப்படும்.

அதுமட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய வரலாற்றைச் சார்ந்த
பல்வேறு ஆவணங்கள் இன்றைக்கு லண்டனில் உள்ள ஆவணக்
காப்பகங்களிலே பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்குத் தமிழகத்தின்
வரலாற்றைப் பற்றி எழுதக்கூடியவர்கள், லண்டனுக்குச் சென்று அந்த
ஆவணங்களைப் பார்ப்பது என்பது எல்லோருக்கும் சாத்தியமாகக்கூடிய
காரியம் அல்ல. தமிழகம் தொடர்பாக லண்டன் ஆவணக் காப்பகத்திலே

ப்படி என்னென்ன ஆவணங்கள் எல்லாம் பாதுகாக்கப் ட்டிருக்கின்றனவோ, அவற்றின் படி ஒன்றை நாம் கேட்டுப்பெற்று, வற்றை நம்முடைய தமிழ்நாட்டு ஆவணக் காப்பகத்திலே வைத்தால், மிழகம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்கிறவர்களுக்கு அது உதவியாக ருக்கும். இந்தக் கோரிக்கையையும் நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்று ான் கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுடைய மேம்பாட்டிற்காக ஒதுக்கப்படுகிற நிதி பாதுமானதாக இல்லை என்கின்ற காரணத்தினாலும், இன்னும் வர்களது வாழ்க்கை மேம்பாடு அடையவேண்டும் என்ற நோக்கோடும், ) ஆண்டுகளுக்கு முன்பே மைய அரசு சிறப்புக் கூறுகள் திட்டம்— pecial Component Plan—என்று ஒன்றைக் கொண்டு வந்தார்கள். அதன்படி, வ்வொரு மாநில அரசும் தங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே துக்குகின்ற நிதியிலே, அந்தந்த மாநிலத்திலே இருக்கின்ற, தாழ்த்தப்பட்ட, ழங்குடியின மக்களுடைய மக்கள் தொகை விழுக்காட்டிற்கு இணையாக தியை ஒதுக்கவேண்டுமென்று சட்டமே இயற்றப்பட்டது. அந்தச் ட்டமும், வழிகாட்டுதலும் மத்திய அரசால், மறைந்த பிரதமர் அன்னை ந்திரா காந்தி அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு இருபது ண்டுகளுக்கு மேல் ஆனாலுங்கூட, இன்னமும் தமிழ்நாட்டைப் பாறுத்தளவிலே, அது முழுமையாக நடைமுறைக்கு வராத ஒன்றாகவே ருக்கிறது. அதனால் எதிர்வரும் நிதிநிலை அறிக்கையைத் யாரிக்கும்போது, அதைச் சிறப்புக் கூறுகள் திட்டத்தோடு சேர்ந்த திநிலை அறிக்கையாக, மத்திய அரசின் வழிகாட்டுதலை ஏற்றுக்கொண்ட திநிலை அறிக்கையாகத் தயாரிக்கவேண்டுமென்று நான் உங்களைக் கட்டுக்கொள்கிறேன்.

*றபகல் 12–30*

இன்றைக்கு வேலை நியமனத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு, பல்வேறு ணியிடங்களையெல்லாம் நீங்கள் நிரப்புவதாக அறிவித்து இருக்கிறீர்கள். ங்களுடைய கடந்த ஆட்சிக் காலத்திலே, மாண்புமிகு அமைச்சராக ருந்த சமயநல்லூர் செல்வராஜ் அவர்களுடைய தலைமையிலே ஓர் யர்நிலைக் குழு அமைக்கப்பட்டு, அதனுடைய அறிக்கை அந்த அரசிடம் ப்போது 1998 ஆம் ஆண்டிலே சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் டிப்படையிலே, உங்களுடைய முந்தைய ஆட்சிக் காலத்தின் இறுதிப் குதியிலே, நீங்கள் ஒரு வெள்ளை அறிக்கையைச் சமர்ப்பித்தீர்கள் இதே வையிலே. அந்த வெள்ளை அறிக்கையிலே, பின்னடைவுப் ணியிடங்களாக எவ்வளவு பணியிடங்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு



இருக்கின்றன என்பதை நீங்கள் அதிலே குறிப்பிட்டு இருந்தீர்கள். அந்தப் பின்னடைவுப் பணியிடங்கள் தவிர, அதற்குப் பின்னால் சேர்ந்த பின்னடைவுப் பணியிடங்களும் இன்றைக்குச் சேர்ந்துவிட்டன. இடையிலே வேலை நியமனத் தடையாணை இருந்த காரணத்தினாலே. அவை இன்னமும் பின்னடைவுப் பணியிடங்களாகவே தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. சமயநல்லூர் செல்வராஜ் தலைமையிலான அந்த உயர்நிலைக் குழுவின் அறிக்கை இன்றளவும் பொருத்தமுடையதாக இருக்கின்றது. நீங்களே நியமித்த குழு, உங்கள் அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அந்த அறிக்கை. அதனை இப்போது நீங்கள் பரிசீலித்து, மீண்டும் அந்தப் பின்னடைவுப் பணியிடங்கள், தாழ்த்தப்பட்ட பழங்குடியின மக்களுக்கு எவ்வளவு இருக்கின்றன என்று கணக்கிட்டு, அவற்றை நிரப்புவதற்கு முயற்சிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்குவது பற்றி இன்றைக்குக்கூட விவாதம் நடந்தது. அந்த நிலம் எங்கே இருக்கிறது, எப்படி வழங்கப் போகிறீர்கள் என்கின்ற பிரச்சினையெல்லாம் ஒருபுறம் இருக்க, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலே வழங்கப்பட்ட நிலம், பஞ்சமி நிலம் என்று அழைக்கப்பட்டு, அவர்கள் பெயரிலே இன்றளவும் ஆவணங்களிலே தொடர்ந்துகொண்டு இருக்கிறது. ஆனால், அந்த நிலங்களெல்லாம் பிறரால் அபகரிக்கப்பட்டு இருக்கின்றன. அந்தப் பஞ்சமி நிலங்களைக் கண்டறிந்து, அவர்களுக்கு உரிமையான அந்தப் பஞ்சமி நிலங்களை, இலட்சக்கணக்கான ஏக்கர் பஞ்சமி நிலங்களை மீட்டெடுத்து, முதலிலே அந்த மக்களுக்கு ஒப்படைப்பதற்கு நீங்கள் முயற்சித்தாலே எங்களுக்குப் பேருதவியாக இருக்கும். இரண்டு ஏக்கர் நிலம் நீங்கள் கொடுக்கிறீர்களோ, இல்லையோ, எங்களுக்கு ஏற்கெனவே உரிமையாக இருக்கின்ற அந்த நிலத்தையாவது நீங்கள் மீட்டுத் தர வேண்டுமென்று உங்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

TESMA சட்டத்தை ரத்துச் செய்வதாகச் செய்யப்பட்டு இருக்கின்ற அறிவிப்பு, அரசு ஊழியர்கள் மட்டுமல்ல, மனித உரிமைகளின்பால் அக்கறை கொண்ட எல்லோராலும் வரவேற்கப்பட வேண்டிய அறிவிப்பு ஆகும். TESMA சட்டம் மட்டும் அல்ல. (குறுக்கீடு) TESMA சட்டம் மட்டும் அல்ல. அதேபோல் கருப்புச் சட்டம் என்று சொல்லப்படுகின்ற பல்வேறு சட்டங்கள் நம் அரசு கையிலே இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், குண்டர் சட்டம். அப்படியே அந்தச் சட்டங்களையும்கூட நீங்கள் ரத்துச் செய்து, இந்தியாவிற்கு மட்டுமல்ல,

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227072
சென்னை-600 008
நூலகம்
V24, 3; p06.
106.2.3

உலகத்திற்கே முன்னுதாரணமாக விளங்கவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பெண்களுக்குப் பொழுதுபோக்கவும், பொது அறிவு தரவேண்டுமென்றும் நீங்கள் காட்டுகின்ற அக்கறை; அதற்காக வண்ணத் தொலைக்காட்சி தருவேன் என்கின்ற அறிவிப்பு. இது வரவேற்க வேண்டியதா, இல்லையா என்கின்ற வாதப் பிரதிவாதங்கள் ஒருபுறம் இருந்தாலும், இளைய சமுதாயத்தினருக்குப் பொது அறிவு வரவேண்டுமென்று சொன்னால், இன்றைக்குத் தகவல் தொழில்நுட்பம் வளர்ந்து இருக்கின்ற நிலையிலே, கணினி வழங்குவதால்தான் அவர்களுக்கு அந்தப் பொது அறிவு வளர்வதற்கு நாம் உதவ முடியும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. எனவே, இந்த அரசு குறைந்தபட்சம் ப்ளஸ் 2 முடித்த மாணவர்களுக்கு வழங்க முடியவில்லையென்றாலும், கல்லூரி அளவிலே, குறிப்பாக, கம்ப்யூட்டர் பாடப் பிரிவை எடுத்துப் படிக்கின்ற மாணவ, மாணவிகளுக்காவது இலவசமாக கம்ப்யூட்டர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–35*

இன்றைக்கு நமது மாநிலத்தை, நமது உதவியை, நம்முடைய ஆதரவைத் தேடி அகதிகளாக வருகின்ற ஈழத் தமிழ் மக்கள் சிறப்பு முகாம்கள் என்கின்ற பெயரிலே அமைந்திருக்கின்ற திறந்தவெளி சிறைச்சாலைகளிலே தங்க வைக்கப்படுகின்றார்கள். அந்த முகாம்களுடைய நடைமுறைகள்—நம் இந்திய அரசானது சர்வதேச அளவிலே இருக்கின்ற, குறிப்பாக ஐ.நா. சபையினால் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற, அகதிகளைப் பற்றிய ஒப்பந்தத்திலே கையெழுத்திடாத காரணத்தினாலே, பிற நாடுகளிலே அகதிகள் நடத்தப்படுகின்ற விதத்தைப் பின்பற்றாமல், தன்னுடைய பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கின்றது. அதனால், இங்கே நடத்தப்படுகின்ற சிறப்பு முகாம்களில் மிக மிக மனிதாபிமானமற்ற முறையிலே அதனுடைய நடைமுறைகள் இருக்கின்றன. அவற்றைச் சீர்திருத்தி, அதிலும் குறிப்பாக, அப்படி வருகின்ற அகதி மக்களுக்கு வழங்கப்படுகின்ற உதவித் தொகை மிக மிகக் குறைவாக இருக்கின்றது. ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட அந்தத் தொகையை நீங்கள் மறுபரிசீலனை செய்து அவர்களுக்கு அதை உயர்த்தித் தரவேண்டும். அப்படி வருகின்ற, நம்முடைய ஆதரவைத் தேடி வருகின்ற அந்த அகதிகளை நாம் மேலும்



மனிதாபிமானத்தோடு அணுகி, அவர்களை நடத்திட வேண்டும். அவர்களுடைய சுயமரியாதைக்குக் குந்தகம் வராமல் நாம் அவர்களை நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள்போலவே, ஆடவர்களுக்கும் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும் என்றும், அந்த சுய உதவி குழுக்களால் தயாரிக்கப்படுகின்ற பொருட்களை வணிகப்படுத்துவதற்கு, பூமாலைத் திட்டம் மீண்டும் துவக்கப்படும் என்றும் இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அத்துடன்கூட அந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக, கிராமப்புறப் பொருளாதார மேலாண்மையை நாம் அவர்கள் கையிலே ஒப்படைப்பதற்கு முன்வரவேண்டும். குறிப்பாக, கிராமப்புறங்களிலே மேற்கொள்ளப்படுகின்ற அரசு சார்ந்த கட்டமைப்புப் பணிகளுக்கான ஒப்பந்தங்களை, அதற்குத் தகுதியான மகளிர் சுய உதவிக் குழுக்கள் அந்தப் பகுதியிலே இருந்தால் அவர்களிடத்திலே அந்த கான்ட்ராக்ட் பணிகளைக் கொடுத்து, சாலை போடுகின்ற பணி, அல்லது அரசுக் கட்டடங்களைக் கட்டுகின்ற பணி போன்ற பணிகளிலும் அந்த மகளிர் சுய உதவிக் குழுக்களை நாம் ஈடுபடுத்த வேண்டும்.

கச்சத் தீவுப் பகுதியிலே தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படுகின்ற துயரத்தை உணர்ந்து இந்த அரசு, அவர்களுடைய உரிமைகளைக் காப்போம் என்று கூறியிருக்கிறது. கச்சத் தீவு மீனவர்களுடைய உரிமைகளை மீட்பது மட்டுமல்லாமல், கச்சத் தீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்து நாம் கச்சத் தீவையே மீட்கவேண்டுமென்ற கோரிக்கை பல காலமாக எழுப்பப்பட்டு இருக்கின்றது. அதை நீங்கள் பரிசீலிக்க வேண்டும். இவற்றோடு என்னுடைய தொகுதியைச் சார்ந்த சில கோரிக்கைகளை மட்டும் எழுப்பி நான் என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சோழர் காலத்திலே வெட்டப்பட்ட மிகப் பெரிய வீராணம் ஏரியைக் கொண்ட தொகுதி என்னுடையது. அந்தப் பகுதியைச் சொந்த ஊராகக் கொண்ட மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களும் எதிரிலே அமர்ந்திருக்கிறார். அந்த வீராணம் ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்த வேண்டுமென்றும், அதனுடைய கரையை உயர்த்த வேண்டுமென்றும் அந்தப் பகுதி மக்கள், குறிப்பாக விவசாயிகள் கூறி வருகின்றார்கள். இன்றைய நிலையிலே புதிய வீராணம் திட்டம் காரணமாக, அங்கிருந்து நீர் கொண்டு வரப்பட்டு, சென்னை மக்களுடைய தாகம் தீர்க்கப்படுகின்றது. சென்னை மக்களுடைய தண்ணீர்ப்

பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எம்முடைய தொகுதி உதவி செய்கின்றது என்கின்ற பெருமையை நாங்கள் கொள்கின்றோம்.

அதே சமயத்திலே, சென்னை மக்களுடைய குடிநீர்த் தாகத்தைத் தீர்த்து உதவி செய்கின்ற அந்தப் பகுதி மக்களுக்கு, அதற்கு ஈடாக சென்னை மாநகர் எதைத் தரப் போகிறது என்ற கேள்வி இருக்கிறது. அப்படி எடுக்கப்படுகின்ற தண்ணீருக்கு ராயல்டி வழங்க வேண்டும். ஏனென்று சொன்னால், தொடர்ந்து தண்ணீரை எடுத்தால் அந்தப் பகுதி விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். நிச்சயமாக அது ஒரு பிரச்சினையாக உருவெடுக்கப் போகிறது. அந்தப் பிரச்சினை வராமல், அந்தப் பகுதியை மேம்படுத்த வேண்டுமென்று சொன்னால், அங்கேயிருந்து எடுக்கப்படுகின்ற தண்ணீருக்கு நாம் அந்த மக்களுக்கு ராயல்டி வழங்க வேண்டும். அந்த ராயல்டியைக் கொண்டு அந்தப் பகுதி மேம்பாட்டிற்கு உதவி செய்ய வேண்டும். ஏற்கெனவே மினரல் வாட்டர் கம்பெனிகளுக்கு, அவர்கள் எடுக்கின்ற தண்ணீருக்கு ஒரு தொகை நிர்ணயிக்கப்பட்டு, அரசு அவர்களிடமிருந்து வசூலித்து வருகின்றது. அதையே முன்னுதாரணமாகக் கொண்டு அந்த ராயல்டியை நிர்ணயிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12–40*

கண்ணகிக்குச் சிலை வைப்பதை எல்லோரும் பாராட்டினார்கள். கற்பின் இலக்கணமாகக் கண்ணகி மட்டும் இல்லை. நீங்கள் பூம்புகாரிலே கலைக்கூடம் அமைத்தபோது, அங்கு கண்ணகியின் சிலைக்கு அருகிலேயே மாதவியின் சிலையையும் வைத்திருந்தீர்கள். கண்ணகியை மட்டும் இன்றைக்குக் கற்பின் சின்னமாகப் போற்றும்போது, மாதவி ஏதோ அதில் ஒரு மாற்றுக் குறைந்தவர்போல ஆகிவிடுகிறது. கண்ணகி சிலை எழுப்பும்போது, நீங்கள் மாதவிக்கும் அருகிலேயே சிலை அமைத்து, இந்த ஐயத்தைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்டப்படுகின்ற தொகுப்பு வீடுகள் பழைய முறையிலேயே கட்டப்படுகின்றன. அவை மனிதர்கள் வசிக்க முடியாத அளவுக்கு இருக்கின்றன என்பது நம்முடைய சபை உறுப்பினர்கள் எல்லோருக்குமே தெரியும். இன்றைக்கு சுனாமி பேரழிவுக்குப் பின்னாலே மீனவ மக்களுக்குக் கட்டப்பட்டிருக்கின்ற வீடுகள் நல்ல நிலையிலே கட்டித் தரப்பட்டிருக்கின்றன. அத்தகைய வீடுகளுக்கு என்ன unit cost நிர்ணயிக்கப்பட்டதோ, அந்த unit cost–ஐ நிர்ணயித்து, இனி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மீனவ மக்களுக்குக் கட்டித் தரப்பட்டிருக்கின்ற வீடுகளைப்போலவே தொகுப்பு வீடுகளைக் கட்டித் தரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.





அயோத்தி தாசர் அவர்களுக்கு—100 ஆண்டுகளுக்கு முன்னே 'தமிழன்' என்று பெயரிட்டு வார இதழை நடத்தி, நமது தமிழ்ச் சமூகம் பெருமைப்படக் காரணமாக இருந்த அயோத்தி தாச பண்டிதருக்கு—இன்றைய முதல்வர் அவர்கள் முன்முயற்சி எடுத்து அஞ்சல் தலையை வெளியிட்டார்கள். அந்தப் பெருமையின் தொடர்ச்சியாக, அயோத்தி தாசருக்கு ஒரு சிலையை நிறுவ வேண்டும் என்றும், தமிழ்ப் பல்கலைக்கழகத்திலே அவரது பெயரிலே ஓர் இருக்கையை ஏற்படுத்தி, தமிழ், பௌத்தம் பற்றிய ஆய்வுகள் நடத்துவதற்கு நீங்கள் வழிவகைகள் செய்ய வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஓர் எழுத்தாளர் என்கின்ற முறையிலே என்னுடைய கடைசியான வேண்டுகோளை வைக்கின்றேன். எழுத்தாளராக இருக்கின்ற முதல்வர் அவர்கள் இதை இப்போதேகூட ஏற்று அறிவிக்கக்கூடும். இன்றைக்கு நூலகங்களிலே வாங்குகின்ற நூல் பிரதிகள் அதிகபட்சமாக 750 படிகள்தான் வாங்கப்படுகின்றன. எந்த நூலை வாங்கினாலும் அதிகபட்சமாக அவ்வளவுதான் வாங்கப்படுகின்றன. பல கோடித் தமிழர்கள் வாழ்கின்ற இந்த நாட்டிலே, ஒரு நூல் அதிகபட்சமாக 1,100 படிகள்தான் அச்சிடப்படுகின்றது என்பது தமிழர்கள் பெருமைப்படக் கூடிய ஒரு விஷயம் அல்ல. எனவே, இந்தக் களங்கத்தை நீக்கும்விதமாக, நீங்கள் நூலகங்களில் நூல் வாங்கும்போது, எந்த நூலை அவர்கள் தேர்வு செய்தாலும், குறைந்தபட்சம் 1,500 படிகளாவது வாங்கவேண்டுமென்று உத்தரவிட்டு, தமிழ் எழுத்துலகிற்கு மட்டுமல்ல, தமிழ் மொழிக்கும் நீங்கள் வாழ்வு அளிக்க வேண்டுமென்று வேண்டி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 13–வது சட்டமன்றத்தில் பேசுகிற ஒரு நல்வாய்ப்பினை நல்கிய தங்களுக்கும், எனக்கு நான்காவது முறையாக மீண்டும் seat–ஐ வழங்கி வெற்றிபெறக்கூடிய வாய்ப்பை நல்கிய அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அருமை அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், மத்திய அமைச்சர் மாண்புமிகு வாசன் அவர்களுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக, வேலூர் கோட்டையிலே நாங்கள் எல்லாம்

ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, நெடுநேரம் காத்திருந்தபோது, கடைசி ஒரு நிமிடம், இரவு 10 மணிக்கு 1 மணித்துளி முன்னால்தான் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் வேலூர் கோட்டைக்கு வந்து, மேடை ஏறிப் பேசுவதற்கு நேரம் இல்லாமல், ஒரே நிமிடத்தில் தன்னுடைய உரையை முடிக்கிற வகையில், எதிரில் இருந்த மக்களை எல்லாம் பார்த்து, 'இப்பொழுது கோட்டை வெளியிலே உங்களைச் சந்திக்கிறேன். பிறகு கோட்டையிலே சந்திக்கிறேன்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று தீர்க்கதரிசியாகச் சொல்லிவிட்டு வந்து, அந்த ஒரே வார்த்தையில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில், 21,827 வாக்கு வித்தியாசத்திலே நான் வெற்றிபெறக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்த கலைஞர் அவர்களுக்கும் அதோடு மட்டுமல்லாமல், இந்தக் கூட்டணியைச் சார்ந்திருக்கிற தலைவர்கள், நம்முடைய மாண்புமிகு தளபதி அவர்கள், மற்றும் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் போன்றவர்கள் எல்லாம் வருகை தந்து, எங்களுக்கு எல்லாம் வாக்குச் சேகரித்து, இந்த மன்றத்திலே நான்காவது முறையாக நான் கால் பதிப்பதற்கு வழிவகை செய்திருக்கிற அத்துணை தலைவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–45*

இந்த மாமன்றத்தில் இன்றைய நடவடிக்கைகளைப் பார்க்கிறபோது, எவ்வளவு கண்ணியமாக இருக்கிறது, இழந்த பெருமையை மீண்டும் பெற்றிருக்கிறது என்பதை, இன்றைய நடவடிக்கையைப் பார்த்து உண்மையில் நான் மனம் பூரித்துப் போனேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 5–வது முறையாக முதலமைச்சராக அரியணை ஏறிப் பொறுப்பேற்ற பின்னால், முன்னாள் முதல்வர் அவர்கள், நான் இந்தச் சட்டமன்றத்திற்கு வரப் போவது இல்லை; காரணம், அங்கே காட்டுமிராண்டிகளாக நிறையப் பேர் வந்து விட்டார்கள், எனக்குப் பாதுகாப்பு இல்லை என்று சொன்னவர்கள், இன்று இந்த மன்றத்திற்கு வந்து, அதுவும் தனியாக வந்து இந்த மன்றத்திலே உங்களிடம் நேரம் ஒதுக்கக் கேட்டு, அவர் சொல்லவேண்டிய கருத்துகளையெல்லாம் சொல்லி, மிக அழகாக எல்லாவற்றையும் பதிவு செய்து, அமைதியாக வெளியே சென்றதிலிருந்தே இந்தச் சட்டமன்றம் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே, உங்களுடைய தலைமையிலே, பாதுகாப்போடு இன்று நடைபெற்றிருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது, எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.



நேற்று நடந்ததையும் பார்க்க வேண்டும். இந்தக் கட்டுகளையெல்லாம் பாருங்கள். உங்களுடைய தலைமையிலே, தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையிலே நேற்று நாங்கள் என்ன பாடுபட்டோம்? ஆகவே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மற்ற உறுப்பினர்கள் இங்கே இருந்தபோது தாக்குண்டவர்கள் நாங்கள். அந்த அம்மா மிக அழகாகச் சொல்லி, எல்லோரும் காட்டுமிராண்டிகள், எனக்குப் பாதுகாப்பு இல்லை என்றெல்லாம் சொல்லிவிட்டுப் போனவர்கள், இன்று இவ்வளவு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களும், மற்ற கட்சிக்காரர்களும் இங்கே இருக்கிறபோது, எவ்வளவு பாதுகாப்பாக இந்தச் சபை நடந்தது என்பதே ஒரு நல்ல எடுத்துக்காட்டு என்பதை, ஒரு நல்ல மரபு என்பதை நான் பார்த்து மகிழ்கிறேன்.

நேற்று பார்த்தோம் என்றால், அவர்கள் அத்தனை பேரும் எழுந்திருந்து அடே அப்பா, போட்டு எங்களையெல்லாம் அடி, அடி என்று அடித்து— பொதுவாக, கோபம் பூராவும் உங்கள் பேரிலே; நாங்கள் ஏதோ பக்கத்தில் இருந்தோம் என்பதற்காக, உங்கள் பக்கம் வர முடியவில்லை, தாண்டி வர முடியவில்லை அவர்களாலே; பக்கத்தில் நாங்கள் இருக்கிறோம் என்ற காரணத்திற்காக, என் அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், கடல் நீரை நன்னீர் ஆக்குகிற திட்டத்தை ஏன் இரண்டு வருடமாகப் பயன்படுத்தவில்லை என்று கேட்டதற்குக் கோபம் மூக்கு மேலே வந்து, அவர்கள் இதைக் கேட்டால், உடனே உப்பு உண்டா, பப்பு உந்தி என்று, இவர் கடல் நீரை நன்னீராக்குவதுப் பற்றிக் கேட்டதற்கு, அவர்பாட்டுக்கு வீராணம் திட்டத்தை அம்மா கொண்டு வந்தார் என்றார். இப்படியெல்லாம் சொல்லி, வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் எங்கெங்கேயோ போய், கடைசியிலே எங்கள்மீது மைக்குகள் எல்லாம் உடைந்து விழுந்தன. நிறைய மைக்குகள் போய், எல்லாம் ரிப்பேர் பண்ணி வைத்திருக்கிறீர்கள்.

இதையெல்லாம் பார்க்கிறபோது, நேற்றைக்கும், இன்றைக்கும் பார்க்கிறபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்து உறுப்பினர்கள் இருந்தால்தான் இந்தச் சபை இவ்வளவு அமளிதுமளியிலே ஈடுபடுகிறது. இல்லையென்று சொன்னால், இது அமைதியாக, ஒரு கடலில் எப்படி ஒரு ஓடம் பயணிக்கிறதோ, அப்படி அழகாக, அமைதியாக இது பயணித்தது என்பதை இன்றைய சான்று பார்க்கிறபோது நமக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இதை நாட்டு மக்கள் நிச்சயமாகப் புரிந்துகொண்டிருக்கிறார்கள். ஜெயலலிதா அவர்கள் தனியாக வந்தாலுங்கூட பாதுகாப்பைத் தரக்கூடியவர் நம்முடைய தமிழினத்

[திரு. சி. ஞானசேகரன்] [2006 மே 27

தலைவர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த நாடு நிச்சயமாக உணர்ந்திருக்கிறது; இந்த மன்றமும் அதைப் பதிவு செய்திருக்கிறது.

விவாதத்திற்குப் போவதற்கு முன்னால் சில கோரிக்கைகளை வைத்துவிட்டு, நான் விவாதத்திற்குப் போய்விடுகிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் வேலூருக்கு வந்தபோதும் சரி, பிறகு இங்கேயும் சரி, நான் பல மனுக்களையும் கொடுத்து, என்னுடைய கோரிக்கைகளை வைத்திருக்கிறேன். அதிலே தேர்தல் நேரத்திலே 2 பிரச்சினைகளில் ரொம்ப உயிரை எடுத்துவிட்டார்கள் மாற்று அணியிலிருந்து ஓட்டுக் கேட்டவன் பூராவும்.

நான் ஏற்கெனவே அரசு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று, தொடர்ந்து 1992–லிருந்து போராடி, அப்பொழுது நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், இப்பொழுது மின் துறை அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் இருக்கிறபோது, டாக்டர் கலைஞர் அவர்கள் இருக்கிறபோதுதான் வேலூருக்கு அரசு மருத்துவக் கல்லூரி வேண்டும் என்று போராடி அரசாணை பெற்று, பிறகு அந்த அரசு மருத்துவக் கல்லூரி வந்தது. வந்தவுடனே 80 ஆண்டுக் காலம் எங்களுடைய வேலூரில் இயங்கி வந்த Government Pentland Hospital—வெள்ளைக்காரனுடைய பெயரில் இருக்கிறது அந்த hospital. 80 வருடமாக இருந்த ஓர் ஆஸ்பத்திரியை Medical Council of India, இத்தனை டாக்டர்கள் அங்கே இருக்க வேண்டும் என்று வற்புறுத்திய காரணத்தினால் வேலூரில் இயங்கி வந்த மருத்துவமனை மூடுவிழாக் கண்டு 11 கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கம் இருக்கிற அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில், அடுக்கம்பாறைக்குக் கொண்டு போய்விட்ட காரணத்தினாலே, இன்று எனக்கு எதிராகத் தேர்தலில் நின்றவர்கள் ஆஸ்பத்திரியை ஞானசேகரன் கோட்டை விட்டுவிட்டார். ஆகவே, அவருக்கு வாக்களிக்காதீர்கள் என்று ஒரு பெரிய பிரச்சாரம் செய்து, துரைமுருகன் போன்றவர்களெல்லாம் எனக்காக வந்து வாக்குக் கேட்டு, அவர்களும் விளக்கம் கொடுத்தார்கள்; நாங்களும் விளக்கம் கொடுத்தோம். அதை நான் கொடுக்கவில்லை. முந்தைய அமைச்சர், அவர்கள் காலத்தில் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் 'உடனடியாக அந்த மருத்துவமனையை பழையபடி வேலூர் நகரத்திலே இயக்குகிறோம்' என்கிற வாக்குறுதியை அவரும் அளித்திருக்கிறார்; நானும் அளித்திருக்கிறேன். இதை அருமை அண்ணன், நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் கொடுத்து, கூடிய விரைவில் நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரை நீங்கள் வேலூருக்கு அனுப்பி வைத்து, வேலூர் நகரில் 80 ஆண்டுக் காலம் இயங்கி வந்த அந்த மருத்துவமனையை முழு அளவில் இயக்குவதற்கான ஆணையைத் தாங்கள் பிறப்பித்து, எங்களுடைய வேலூர் மக்களுடைய வயிற்றில் நீங்கள் பால் வார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2006 மே 27] [திரு. சி. ஞானசேகரன்]

*பிற்பகல் 12–50*

இரண்டாவது கோரிக்கை, ஒரு புதிய பஸ் ஸ்டாண்டு. நம்முடைய அருமை அண்ணன் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் இருந்தபோது தான் ஓர் அரசாணையை வாங்கி, ஒரு புதிய பஸ் ஸ்டாண்டைக் கொண்டு வந்தோம். இந்தப் புதிய பஸ் ஸ்டாண்டு கொண்டு வந்ததற்குப்பிறகு, கடந்த கால ஆட்சியிலே பழைய பஸ் ஸ்டாண்டை, அப்படியே எல்லாவற்றையும் மூடிவிட்டார்கள். அதை மூடிவிட்ட பிறகு, பழைய பஸ் ஸ்டாண்டில் இருந்த வியாபாரிகள் எல்லாம் ஒவ்வொரு பக்கம் எழுந்துகொண்டு, இந்த பஸ் ஸ்டாண்டையே இவர்தான் மூடிவிட்டார், இவருக்கு வாக்களிக்காதீர்கள் என்று இப்படி ஒரு பெரிய பிரச்சாரத்தைத் தொடங்கிவிட்டார்கள். இதையும் தேர்தல் வாக்குறுதியாகக் கொடுத்து, மீண்டும் பழையபடி அந்த பஸ் ஸ்டாண்டை நாங்கள் இயக்குகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். ஆகவே, தாங்கள், நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களிடமும், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடமும் தயவுசெய்து சொல்லி, உடனடியாக அந்தப் பழைய பஸ் ஸ்டாண்டையும் முழு அளவிலே அந்த இடத்திலே இயக்குவதற்கான ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்தப் புதிய பஸ் ஸ்டாண்டு இன்றைக்கு அடிப்படை வசதி இல்லாமல், அப்படியே சும்மாக் கிடக்கிறது. Town and Country Planning—உள்ளூர் திட்டக் குழுமம்தான் அந்தப் புதிய பஸ் ஸ்டாண்டை இயக்குவதற்கான அரசாணையைப் பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணைப்படி இப்போது, Town and Country Planning Consolidated Fund என்று பார்த்தால், 54 கோடி ரூபாய் ரொம்ப வருடங்களாக இருக்கிறது. கடந்த கால ஆட்சியிலே அதைத் தொடவே இல்லை; சும்மாத் தூங்கிக் கொண்டிருக்கிறது அந்த 54 கோடி ரூபாய். அதிலே 5 கோடி ரூபாயைத் தாங்கள் மானியமாக அளித்து, இந்தப் புதிய பஸ் ஸ்டாண்டிற்கு—

அங்கே பயணிகள் தங்குவதற்கான கூடம் ஒன்றுமே இல்லை, மொட்டையாக இருக்கிறது எல்லாமே. ஆகவே, அதற்கான அடிப்படை வசதிகளைத் தாங்கள் பெருக்க வேண்டும். அதற்கு இன்னும் நாங்கள் விழா எடுக்காமல் இருக்கிறோம்.

தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர், முதல்வர் அவர்கள் ஒரு நிமிடம்தான் வேலூர் கோட்டையிலே வந்து பேசிவிட்டு வந்தீர்கள், உங்கள் வாக்குப் பலித்துவிட்டது, ஜெயித்துவிட்டோம், அது வேறு. இருந்தாலும், நீங்கள் உரையாற்றி நெடுநேரம் கேட்க வேண்டுமென்று வேலூர் மக்கள் நிறையப் பேர் காத்துக்கொண்டிருந்தார்கள். வேலூர் மக்களுடைய தாகத்தைத் தீர்க்கின்ற வகையிலே, தாங்கள் வேலூருக்கு ஓர் அரசு விழா எடுத்து, உடனடியாக ஒரு தேதி கொடுத்து, அந்தப் புதிய பஸ் ஸ்டாண்டு திறப்பு விழாவிற்குத் தாங்கள் வருகை தந்து, திறந்து வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்குப் பிறகு, நம்முடைய ஆலடி அருணா அவர்கள் இங்கே சட்ட அமைச்சராக இருந்தபோது, வேலூரிலே 2000 ஆம் ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பிலே அரசு சட்டக் கல்லூரி ஒன்றைக் கொடுத்தார்கள். ஆனால், அடுத்து வந்த ஆட்சி, நிதி இல்லை என்று கையை விரித்துவிட்டார்கள். ஆகவே, இந்த அவையிலே அறிவித்ததுபோல, தாங்கள் வேலூருக்கு ஒரு Government Law College—ஐ உடனடியாகத் தொடங்குவதற்கான ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்களுடைய ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம். இப்போதெல்லாம் பெண்ணையாற்றுத் திட்டத்தில், 5 வருடங்கள்தான் தண்ணீர் வரும் என்று சொல்கிறார்கள். எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்கு இந்தப் பாலாறுதான் உயிர்நாடி. அந்த உயிர்நாடி பாலாற்றில் இப்போது அணை கட்டுகிறார்கள், பல பிரச்சினைகள்; அதுவும் பல காலங்களில் வறண்டு விடுகிறது. நீரே இல்லாத பாலாறு என்கிற பெயரைக் கொண்டிருக்கிறது. சில நேரங்களில்தான் நீர் வருகிறது. ஆகவே, ஒகேனக்கல்லிலிருந்து தண்ணீர் எடுக்க முடியாது என்று அருமை அண்ணன் பொதுப் பணித் துறை அமைச்சர் உடனே வருவார்கள். ஓடுகிற தண்ணீரிலிருந்து தண்ணீரை எடுக்கவே முடியாது என்று அவர் மிக அருமையான வாதத்தை வைப்பார்கள். அப்படி ஒரு வாதம் வருமேயானால், மேட்டூர் அணையிலிருந்து நீங்கள் எப்படியாவது 1,500 கோடி ரூபாயிலே ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றினால்தான்





எங்களுடைய மாவட்டம் எதிர்காலத்தில் பிழைக்கும், இல்லையென்று சொன்னால், மாவட்டமே காலியாகி விடக்கூடிய ஒரு நிலை இருக்கிறது.

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கு 1,008 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும், எங்களுடைய மாவட்டத்திற்கு அருமை அண்ணன் ஆற்காட்டார் அவர்கள், இப்போது அண்ணா நகரில் நின்றாலுங்கூட, மண்ணின் மைந்தர் அவர். ஆகவே, தாங்களும் இதிலே தலையிட்டு, எப்படியாவது 1,500 கோடி ரூபாயை எங்களுடைய மாவட்டத்திற்கு நீங்கள் வழங்கி, அந்த ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி, எங்களுடைய மாவட்டத்தை நீங்கள் காக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்றிடக்கூடிய ஒரு சூழ்நிலை முன்பே வந்து, அது தள்ளிப் போய்விட்டது. ஆகவே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதிலே கவனம் செலுத்தி, வேலூர் நகராட்சியை அடுத்த ஆண்டிலேகூட, அதை ஒரு மாநகராட்சியாக நீங்கள் மாற்றி, தேர்தலை வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பாலாறு. இப்போது எனக்கு முன்புகூட மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசினார்கள். பாலாற்றிலே, குப்பம் பகுதியில் அணை கட்டி—எப்போதாவது ஒரு தடவைதான் தண்ணீர் வருகிறது,3 வருடங்களுக்கு, 4 வருடங்களுக்கு ஒரு தடவை—அந்தத் தண்ணீரைக்கூட தடுத்து நிறுத்தி விடக்கூடிய நிலை இருக்கிறது. கடந்த கால ஆட்சியிலே நானும், அருமை அண்ணன் துரைமுருகன் அவர்களும் இதே அவையிலே உடனடியாகப் பேச்சுவார்த்தை நடத்தியாவது, அல்லது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றாவது பாலாற்றிலே ஆந்திர அரசு அணை கட்டுவதை நிறுத்த வேண்டுமென்று நாங்கள் எல்லாம் இங்கே போராடினோம், இங்கே குரல் கொடுத்தோம், போராட்டத்தையும் நடத்தினோம்.

இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற இந்த அவையிலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், தாங்கள் உடனடியாக பொதுப் பணித் துறை அமைச்சரை ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பி, அங்கேயிருக்கிற முதலமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தியோ, அல்லது உச்ச நீதிமன்றத்திலே ஓர் ஆணையைப் பெற்றோ, உடனடியாக எங்களுடைய பாலாற்றிலே ஆந்திர அரசு அணை கட்டுவதைத் தடுத்து

நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பாலாற்றிலே இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகளையெல்லாம் அகற்றி, check dam-களைப் பல இடங்களில் கட்டி, நீர் ஆதாரத்தை நீங்கள் பெருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூருக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக முன்பு போராடிப் போராடி, 55 கோடி ரூபாய் பணம் வந்துவிட்டது. ஆனால், கடந்த கால ஆட்சியிலே டெண்டரே வைக்காமல் ஏமாற்றிவிட்டு, அந்த டெண்டர் வைத்தால், நகராட்சியே அந்த டெண்டரை வைத்து சாப்பிட வேண்டும், கொள்ளை அடிக்க வேண்டுமென்று நினைத்தார்கள். குடிநீர் வடிகால் வாரியம்தான் அதை நிறைவேற்ற வேண்டும் என்பது G.O. ஆனால், குடிநீர் வடிகால் வாரியத்திடம் அதை ஒப்படைக்காமல், நகராட்சியே செய்ய வேண்டும், அந்த ஆணையை amend செய்ய வேண்டுமென்றெல்லாம் சொல்லிச் சொல்லி, இன்னும் காலம் கடத்திக் கொண்டு, இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து, நிதி வந்து விட்டது, டெண்டர் வைத்து உடனடியாக அதை யார் நிறைவேற்றுவது, குடிநீர் வடிகால் வாரியமே அதை உடனடியாக நிறைவேற்றுகிற பொறுப்பை நீங்கள் அளித்தால் உடனடியாக போர்க்கால அடிப்படையிலே அங்கே பணிகள் நடக்கும். ஆகவே, அதற்கான உத்தரவை நீங்கள், உடனடியாகத் தொடங்க உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

வேலூரில், படித்துவிட்டு இன்று வேலையில்லாத் திண்டாட்டத்தில் சிக்குண்டு தவிக்கிற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கக்கூடிய ஒரு நிலை உடனடியாக வந்தாக வேண்டும். ஏனெனில், நம்முடைய மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் அவர்கள் ஒரு Post Office திறப்பதற்கு வேலூருக்கு வந்தபோது, I.T. Park-ஐ நான் உடனடியாக வேலூரிலே அமைக்கிறேன்; எனக்கு ஐந்து ஏக்கர் நிலத்தை மட்டும் மாநில அரசிடமிருந்து வாங்கித் தாருங்கள் என்று அன்று கேட்டார். மாநில அரசிடம் கேட்டுக் கேட்டுப் பார்த்தேன். ஐந்து ஏக்கர் நிலத்தை அவர்கள் கொடுக்கவில்லை. ஆனால், இப்போது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிற இந்த அவையில் கேட்டுக்கொள்கிறேன். ஐந்து ஏக்கர் புறம்போக்கு நிலத்தை நீங்கள் எப்படியாவது உடனடியாக வழங்கி, Information Technology Park–ஐ நம்முடைய மத்திய அமைச்சர் மாண்புமிகு தயாநிதி மாறன் அவர்கள் அமைத்து, ஒரு இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்ற ஒரு நிலையை எங்களுடைய வேலூர் மாவட்டத்திற்குக் கொடுக்க வேண்டும். வேலூருக்கு ஒரு தொழிற்பேட்டையை அமைத்து, நீங்கள் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அடுத்து, இப்போதுதான் விவாதத்திற்கு வருகிறேன். இப்போது நடந்து முடிந்த தேர்தல், பணநாயகத்திற்கும், ஜனநாயகத்திற்கும் நடந்த தேர்தல் என்றே சொல்லலாம். ஏனென்றால், இப்போது ஜனநாயக முற்போக்குக் கூட்டணியிலே நாங்களெல்லாம் தேர்தலைச் சந்தித்தபொழுது, என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. ஆனால் எதிரணியில் இருந்தவர்கள் பணத்தை வைத்து எவ்வளவு விளையாட வேண்டுமோ, அவ்வளவு விளையாடினார்கள்.

அதைப்போல, எதைப் பார்த்தாலும், Bus owners Association-ஆ, அது அவர்கள் பக்கம். இல்லாவிட்டால் வியாபாரிகளா, அது அவர்கள் பக்கம். போதாக்குறைக்குச் சில வியாபாரிகள், சில சங்கங்களை வைத்து, நாங்களே வேட்பாளர்களாக நிற்கிறோம், திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களைத் தோற்கடிக்கிறோம், இந்த அணியைத் தோற்கடிக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், எது எப்படியிருந்தாலும், பணம் எவ்வளவுதான் வைத்துக் கொண்டிருந்தாலுங்கூட, நம்முடைய தமிழகத்து மக்கள் நிச்சயமாகப் பணநாயகத்திற்கு அவர்கள் அடிபணியாமல், ஜனநாயகத்தைக் கட்டிக் காப்பாற்றியிருக்கிறார்கள். மீண்டும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே ஒரு நல்லாட்சி அமைய வேண்டுமென்று நம்மையெல்லாம் இங்கே அனுப்பி வைத்த அந்தத் தமிழகத்து மக்களுக்கும், குறிப்பாக, என்னுடைய வேலூர் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை நான் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது பணநாயகம் தோற்றது என்று சொன்னாலுங்கூட, தேர்தலுக்குச் செலவழித்தது போக, இன்னும் நிறையப் பணத்தை வைத்திருக்கிறார்கள். ஐந்து வருஷம் கொஞ்சமா, நஞ்சமா அவர்கள் பணத்தைச் சேர்த்தது? ஆகவே, யார் எல்லாம் எவ்வளவு பணத்தைச் சேர்த்து வைத்திருக்கிறார்கள், அவர்களுடைய கடந்த கால வரலாறு என்ன? முன்பு ஆட்டோ ஓட்டிக்கொண்டிருந்திருப்பார்கள், அல்லது வேறு ஏதாவது விற்றுக்கொண்டிருந்திருப்பார்கள். வேறு தொழில் செய்துகொண்டிருந்திருப்பார்கள், டீ கடை வைத்திருந்திருப்பார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு அவர்களுடைய வருவாய்க்கு மீறி எப்படி சொத்து வந்தது என்பதை, நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் தயவுசெய்து அதனை ஆய்வு செய்து, உடனடியாக ஒரு விசாரணைக் குழுவைப் போட்டு, காவல் படையைத் துரிதமாக, போர்க்கால அடிப்படையிலே நீங்கள் முடுக்கிவிட்டு, சொத்தை இப்படியெல்லாம் சேர்த்து வைத்திருக்கிறவர்களை நீங்கள் பதம் பார்த்து உள்ளே தள்ளுங்கள்.

நீங்கள் ஒரு கலர் டி.வி. கொடுக்கிறேன் என்று சொல்கிறீர்கள். இரண்டு, மூன்று கலர் டி.வி. கொடுக்கலாம். அவர்களிடம் இருக்கிற பணத்தைப் பிடுங்கினாலே, இரண்டாண்டுகளுக்கான பட்ஜெட்டை நாம் அந்தப் பணத்தில் போட முடியும், அவ்வளவு பணத்தை வைத்துக்கொண்டு. ஒவ்வொரு துறையிலும் ஊழல். ஒவ்வொரு துறையிலும் முறைகேடுகள். இவ்வளவு முறைகேடுகளையும், ஊழலையும் செய்து, கொழுத்துப் போய் இருக்கக்கூடிய அவர்களையெல்லாம் தயவுசெய்து நீங்கள் உடனடியாக ஓர் ஆய்வினை மேற்கொண்டு, யார் எல்லாம் தங்களுடைய வருவாய்க்கு அதிகமாக சொத்து வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களைப் பிடித்து, யாராக இருந்தாலும் நீங்கள் உள்ளே தள்ளுங்கள். ஏனென்றால், சில பேர் ரொம்ப தைரியமாக இருக்கிறார்கள். இவ்வளவு தைரியமாக இருந்துகொண்டு, ஒன்றும் செய்துவிடமாட்டார்; கொஞ்சம் இவருக்குக் கருணை பெயரில் இருக்கிற காரணத்தால் கருணையோடு நடந்துகொள்வார் முதல்வர் என்று இருக்கிறார்கள். ஆகவே, உங்களுடைய பெயரிலிருந்து நிதி பக்கத்திற்குப் போய்விட்டது. இருந்தாலும், நீதி உங்களிடம் இருக்கிறது. ஆகவே கொள்ளையடித்தவர்களுக்கு, நீதி அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்குத் தண்டனை வழங்கியே தீர வேண்டும். அதற்கான ஆய்வினை உடனடியாக மேற்கொண்டாக வேண்டும். அதற்கான ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காவல் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, அதேபோல, சில அதிகாரிகள் மட்டத்தில் எடுத்துக்கொண்டாலும் சரி, சில பேர் மாவட்டச் செயலாளர்கள்போலவே அவர்கள் நடவடிக்கைகளை ஆரம்பித்து விட்டார்கள். ஒரு I.A.S. Officer, I.P.S. Officer எப்படி இருக்க வேண்டும் என்பதற்கான இலக்கணத்தை அடியோடு மறந்துவிட்டு, சில அதிகாரிகள் வரம்பு மீறி நடந்துகொண்ட காட்சிகளையெல்லாம் நாங்கள் பார்த்திருக்கிறோம். இப்படிப்பட்ட ஒரு நிலை. I.A.S. Officer–இடம் நாம்



யாராவது போனால்—மாற்றுக் கட்சி உறுப்பினர் போகிறபோது, ஒரு G.O. இருக்கிறது. M.L.As. are equivalent to Chief Secretary என்று Protocol இருக்கிறது. M.L.A. போனால், எழுந்து நின்று அதிகாரிகள் வரவேற்க வேண்டும் என்று எல்லாம் இருக்கிறது. ஆனால், அதிகாரிகளிடம் போனால் அவர் இன்னொரு அதிகாரியிடம் பேசிக்கொண்டிருப்பார். பேசினால் மீட்டிங்கில் இருக்கிறேன் என்பார். தொலைபேசியில் சொன்னாலும் மீட்டிங்கிலே இருக்கிறேன் என்பார். ஆனால், இவர்கள் இரண்டு பேரும், ஒருவரோடு ஒருவர் chit-chat பண்ணிக் கொண்டிருப்பவர்கள், மீட்டிங்கிலே இருக்கிறேன் என்று சொல்லி மணிக்கணக்கிலே சட்டமன்ற உறுப்பினர்களைக் காக்க வைத்துக் கொண்டிருக்கக்கூடிய சில அதிகாரிகளும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அதிகாரிகளை நீங்கள் இனம் கண்டுகொண்டு, அவர்களுக்கு நீங்கள் தக்க அறிவுரை கொடுத்து, ஒன்று, முடிந்தால், தப்புப் பண்ணியவர் என்று தெரிந்தால், வீட்டுக்கு அனுப்புங்கள். அவர்கள்கூட நிறைய சொத்துச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அவர்களிடம் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய சொத்தைக்கூட, தயவுசெய்து நீங்கள் உடனடியாக ஒரு team–ஐப் போட்டுக் கண்டுபிடித்து, யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கவேண்டும். சர்க்கரைத் துறையிலே ஒரு Commissioner இருந்தார்.

சர்க்கரைத் துறையிலே எவ்வளவு ஊழல் நடக்க வேண்டுமோ, அவ்வளவு நடந்திருக்கிறது. அதேபோல, வீடு ஒதுக்கீடு செய்வதிலே எவ்வளவு ஊழல்? அண்ணன், தம்பி, மாமன், மைத்துனன், எல்லாம் ஊர் பூராவும் சுற்ற ஆரம்பித்துவிட்டார்கள். புரோக்கர் மாதிரிப் பண்ணி, நம்முடைய பகுதியிலே இருக்கக்கூடிய அத்தனை வீட்டுமனைகளையும் பட்டா போட்டுக் கொடுத்துவிட்டார்கள். இவற்றையெல்லாம் நீங்கள் தயவுசெய்து கண்டுபிடித்து, உடனே நீதி கிடைப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–00

சட்டம்-ஒழுங்கு சரியில்லை என்று அந்த அம்மா சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். சட்டம்–ஒழுங்கு அவர்கள் ஆட்சியிலே எப்படி இருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். காவல் துறை அந்தக் கட்டுக்கோப்பையே இழந்துவிட்டது. மாண்புமிகு முதல்வர் அவர்களை நாங்கள் எல்லாம், நேற்றைய முன்தினம்

எங்களுடைய காங்கிரஸ் சட்டமன்றக் கட்சியினுடைய தலைவரோடு சென்று, அவர்களுடைய தலைமையிலே போய்ப் பார்த்தோம். அந்த முதலமைச்சருடைய அறையையே ஐந்து வருடங்கள் கழித்துத்தான் நாங்கள் பார்த்தோம். ஐந்து வருடங்களாக அந்த அறை எங்கே இருக்கிறது, எப்படி இருக்கிறது, ஏதேனும் modify பண்ணியிருக்கிறார்களா என்றுகூட எங்களுக்குத் தெரியாது. எத்தனையோ முறை நாங்கள் முதல்வரைச் சந்திக்க வேண்டுமென்று நாங்கள் எல்லாம் எவ்வளவோ தேதி கேட்டோம். தேதியாவது, ஒன்றாவது என்று எங்களை எல்லாம் முடக்கிவிட்டார்கள்.

ஐந்தாண்டுகளுக்குப் பிறகு ஒரு முதலமைச்சருடைய அறையையே இப்பொழுதுதான் பார்க்கிறோம். நாங்கள் ஊருக்குப் போனால், என்ன கேட்கிறார்கள் என்றால், ஊரில் இருப்பவர்கள் எல்லோரும் வந்து, 'முதலமைச்சரைப் பார்க்க வேண்டும், ஒரு லெட்டர் கொடுங்கள்', அப்படிக் கேட்பார்கள் முன்பெல்லாம். ஏம்மா, நாங்களே தர்ம தரிசனம், ஏதோ சட்டசபையிலே அந்த அம்மா வந்தால் பார்த்துக்கொள்வோம், ஏதோ மனு கேட்டால் கொடுப்போம், நீ லெட்டர் வாங்கிக் கொண்டுபோய் என்ன பண்ணப் போகிறாய்? போவதற்கு 55 ரூபாய் பஸ் சார்ஜ், வருவதற்கு 55 ரூபாய் பஸ் சார்ஜ் வேலூரிலிருந்து. அங்கே வேறு போலீஸ்காரன், நீ போனவுடன் உன்னைப் பதம் பார்ப்பான், உங்களை அடித்து விரட்டுவான், இதெல்லாம் நடக்கின்ற காரியமா என்றால், 'இல்லை, நீங்கள் லெட்டர் கொடுத்தால் விடுவார்கள் உள்ளே' என்பார்கள். 'என்னையே உள்ளே விடவில்லையம்மா, உன்னை எங்கே உள்ளே விடப் போகிறான்' என்று சொல்லி இருக்கிறேன். ஏனென்றால், ஒரு சட்டமன்ற உறுப்பினர், மூன்று இலட்சம், நான்கு இலட்சம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களேகூட ஒரு முதலமைச்சரைப் பார்க்க முடியாத அவலங்கள் கடந்த கால ஆட்சியிலே இருந்தன. ஆனால், யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், அருமை அண்ணன், நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய வீட்டுக் கதவைத் தட்டலாம், அவரைப் போய் அணுகலாம் என்கின்ற ஒரு நல்ல சூழல் இப்போது கிடைத்திருப்பது ஒரு நல்ல மாற்றம்.

அதேபோல, கடந்த கால ஆட்சியிலே பார்த்தீர்களானால், இங்கிருந்து திருவள்ளூருக்குப் போக வேண்டுமென்றாலும் சரி, Anna University-யிலே போய் ஏதாவது ஒரு விழா தொடங்கினாலும் சரி ஹெலிகாப்டரில்தான் போவார்கள் முதலமைச்சர். இங்கிருந்து பக்கம், திருவள்ளூர் எவ்வளவு தொலைவு? இவற்றிற்கெல்லாம்கூட ஹெலிகாப்டரில்தான் போவேன் என்று இருந்த முதலமைச்சர் எங்கே? அது திருக்குவளையாக இருந்தாலும் சரி, வேலூராக இருந்தாலும் சரி, ஈரோடாக இருந்தாலும் சரி, கன்னியாகுமரியாக இருந்தாலும் சரி, டெம்போ டிராவலர் வேன் மாதிரி ஒன்று, அதிலேயே நான் என்னுடைய பயணத்தை மேற்கொண்டு தமிழ்நாட்டு மக்களைச் சந்திக்கிறேன் என்று, தேர்தல் காலத்திலே முதலமைச்சராக ஆவதற்கு முன்னதாகத்தான் அப்படி இருந்தார் என்றால், இப்போது முதலமைச்சராக ஆன பிறகும்கூட, இன்னும் அவர் ஹெலிகாப்டரைப் பிடிக்கவில்லை. இப்படி ஒரு சர்வசாதாரணமாக, சாமானியனாக இருந்து மக்களைச் சந்திக்கக்கூடிய ஒரு நல்ல முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம் என்பதே நமக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு, மகிழ்ச்சிகரமான ஒரு விஷயம் என்கிற காரணத்தினாலே, தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு நல்ல எதிர்காலம், ஒளிமயமான எதிர்காலம் இருக்கிறது என்பதை நம்மாலே உணர முடிகிறது.





அருமை அண்ணன் அவர்களை நான் கேட்டுக்கொள்வேன், அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக இலஞ்ச லாவண்யம் எல்லா ஆபீசுகளிலும் இருக்கிறது. புழுத்துப் புரையோடிப்போய் இருக்கிறது. புழுத்துப் புரையோடியிருக்கக்கூடிய இந்த அலுவலகங்களின்மீது நீங்கள் தயவுசெய்து நடவடிக்கை எடுக்கவேண்டும். நாம் Vigilance and Anti-Corruption என்று ஒன்று வைத்திருக்கிறோம். அவர்கள் எப்படியென்றால், அவர்கள் போய் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறார்கள், மாதாமாதம். இப்படியெல்லாம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். எதற்காக? அவர்களைக் கண்காணித்து வழக்குப் போடுவதற்காக வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால், அவர்கள் R.T.O. ஆபீசில் நன்றாகப் பணம் வருமா, அதேபோல, எங்காவது Commercial Tax Office-ல் பணம் வருமா, இல்லாவிட்டால் Registration Office—ல் பணம் வருமா என்று பார்க்கிறார்கள். எங்கெங்கு பணம் நன்றாக வரும் என்று அவர்களுக்கு நன்றாகத் தெரிகிறது.

மாதாமாதம் போய் இவர்கள் வாங்கிக்கொண்டிருந்தால், பிறகு எங்கே சட்டம்—ஒழுங்கை நாம் காப்பாற்றப் போகிறோம்? எங்கே இலஞ்ச லாவண்யத்தை நாம் வேரறுக்கப் போகிறோம்? ஆகவே, நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், காவல் துறையை உங்களுடைய கையிலே வைத்திருக்கிறீர்கள். அது இப்போதைக்குக் கெட்டுப்போய் இருந்தாலுங்கூட, அதைச் சரி செய்து நீங்கள் உடனடியாக இலஞ்சத்தை ஒழிக்கவேண்டும். அப்போது எந்த ஆபீசுக்குப் போனாலும் இலஞ்சத்தைக் கொடுக்காமல் வந்தோம் என்றில்லை. நாங்கள் இலஞ்சத்தைக் கொடுக்காமல் வந்தோம் என்றில்லை. இலஞ்சத்தைக்கூட எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று தெரியமாட்டேன்

என்கிறது. நாம் 100 ரூபாய் எடுத்துக்கொண்டு போனால், அவன் 400 ரூபாய் எதிர்பார்க்கிறான். உடனே வேலையில்லை, முடியாது போ என்று சொல்லிவிடுகிறான். இப்படிப்பட்ட ஒரு சூழல் இருந்து கொண்டிருப்பதைத் தயவுசெய்து நீங்கள் மாற்றி இலஞ்ச லாவண்யத்திற்கு இந்தத் தமிழகத்திலே முடிவு கட்டினீர்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டு மக்களுக்கு அதுவே நல்ல ஒளிமயமான எதிர்காலமாக அமையும் என்கின்ற காரணத்தினாலேயே, நான் உங்களை அந்தப் பணியை உடனடியாக நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, Highway patrol என்று போன ஆட்சியிலே வந்தது. Highway patrol–லே—நான் பொதுவாகச் சொல்கிறேன்—Highway patrol என்பது ஏதோ வழிப்பறிக் கொள்ளை எல்லாம் நிறைய நடக்கும், அவர்களை மட்டும் தடுத்து நிறுத்துவதற்காக அவர்களைப் போட்டிருப்பதாக நினைத்தேன். இந்தச் சட்டமன்றத்தில் நான் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறேன், ஏனென்றால், போகிற, வருகிற எல்லா வண்டிகளையும், அது எம்.எல்.ஏ., வண்டி என்பதல்ல, எம்.பி., வண்டி என்பதல்ல, எந்த வண்டியாக இருந்தாலும் நிற்க வைத்து, கொடுப்பதைக் கொடு என்று கேட்டு வாங்கிக்கொள்கிறார்கள். அதற்காகவே நிற்க வைக்கிறார்கள் வண்டியை.

Highway patrol-ஐப் பார்த்தீர்களானால், அந்த Highway patrol ஊர், ஊருக்கும் நிற்கிறது. அத்தனை இடங்களிலும் பணம் கொடுத்துவிட்டுப் போக வேண்டியிருக்கிறது. ஒரு லாரிக்காரன் எவனாவது போகும்போது, அதில் விறகையோ இல்லாவிட்டால் சிமெண்டையோ ஏற்றிவிட்டு, அவன் போனால், எத்தனை இடத்தில் கொடுக்கப்பட்டது என்று கணக்குக் கொடுப்பதைப் பார்த்தால், அவன் இங்கே இவ்வளவு கொடுத்தேன், இவ்வளவு கொடுத்தேன் என்று அந்த Lorry Owners Association–லே சொல்கிறான். சார், எத்தனை இடத்தில் கணக்குக் கொடுப்பது, எவ்வளவு கொடுப்பது என்று தெரியமாட்டேன் என்கிறது என்கிறான். இந்த Highway patrol எங்கே பார்த்தாலும் நிறுத்தி, நிறுத்தி பணத்தைக் கொள்ளையடிக்கக்கூடிய ஒரு சூழல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, ஏதோ வழிப்பறிக் கொள்ளை போன்றவற்றையெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கோ அல்லது accident ஆனால் அவர்களைப் போய்ப் பார்ப்பதற்கோ மட்டுமான சூழலை வைத்துக்கொண்டு, அவர்கள் எங்கு பார்த்தாலும் இப்படி ஆங்காங்கே நிறுத்திப் பணம் பிடுங்குகிற, பணம் பறிக்கக்கூடிய வேலையில் ஈடுபட்டிருக்கக்கூடிய அந்த நிலைப்பாட்டைத்



தயவுசெய்து நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1–05

அடுத்து, மணல் கொள்ளை. அருமை அண்ணன், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்வதெல்லாம், மணல் எக்கச்சக்கமாக விலை ஏறிப் போய்விட்டது. முன்பு பொதுவாக, the business of the Government is only to rule, not to do the business என்று இருந்தது. ஆனால், கடந்த கால ஆட்சியிலே பார்த்தீர்களென்றால், எல்லாமே Government வியாபாரம் பண்ண வந்துவிட்டது. TASMAC கடையா? அவர்களே எடுத்துக்கொண்டு விட்டார்கள். மணலா? இவர்களே எடுத்துக்கொண்டு விட்டார்கள். எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்கான வழி செய்யவேண்டும் என்பது வேறு.

எங்கள் வேலூரை எடுத்துக்கொண்டால், ஒரு லாரி மணலை 500 ரூபாய்க்கு வாங்கிக் கொண்டிருந்தோம். பாலாற்றுப் பக்கத்திலேயே இருக்கிறோம் நாங்கள். ஆனால், எங்களுக்குக்கூட, 2,000 ரூபாய் கொடுத்துத்தான் மணல் வாங்க வேண்டும். 500 ரூபாய் கொடுத்து வாங்கியவர்கள், இப்போது 5,000 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டும்.

இப்போது மணலைப் பார்த்தீர்களென்றால், விலை எக்கச்சக்கமாக ஏறிப் போய் இருக்கிறது. இதில் நிறைய வருமானம் வருகிறது, அதனாலே நாங்கள் வைத்துக் கொள்கிறோம் என்று அரசாங்கம் நினைப்பது—வருமானம் என்பது—வருமானத்திற்கு மட்டுமே அரசாங்கம் என்பதல்ல. Social justice, அதுதான் நமக்கு முக்கியம். ஒரு சமூக நீதிதான் முக்கியம். அதிலே வருகிறபோது, நீங்கள் நம்முடைய நாட்டு மக்களுக்கு, ஏதோ இலவசமாக வரக்கூடிய மணலை நாம் அவர்களுக்குக் குறைந்த விலையில் ஆங்காங்கே கொடுப்பதிலே தவறே இல்லை.

அதைப்போல, அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது என்பதற்காக, அதை நாமே, அரசாங்கமே ஏன் எடுத்து நடத்த வேண்டும்? அதிலேயும் பார்த்தால் ஏதோ, ஆறுமுகசாமி, ஆறுமுகசாமி என்று ஒருவர் இருக்கிறார். அவர் கடந்த கால ஆட்சியிலே கொடி கட்டிப் பறந்ததென்ன? எத்தனை பேர், எப்படி கொடிகட்டிப் பறந்தார்கள். அப்பேற்பட்ட நிலைமை. அவர்களே மீண்டும் பெரிய Poclain-களை வைத்துக்கொண்டு—நேற்று நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய எம்.எல்.ஏ. அவர்களும்,

நம்முடைய ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் காந்தி அவர்களும் இரண்டு பேரும் சேர்ந்து தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

300 லாரி ஒரே இடத்திலே போட்டு—சுமார் இரண்டுக்கு மட்டும் permit–ஐ வைத்துக்கொண்டு, நிறைய லாரிகளை அடுக்கி வைத்துக்கொண்டு, மணலை ஏற்றிக்கொண்டிருந்தால், எங்கள் மணலும் போய் விடுகிறது. எப்படிக் கொள்ளை அடிக்கிறார்கள் என்று பாருங்கள். அதிகாரிகள் பக்கத்திலேயும் தப்பு இருக்கிறது. சில பேர், எடுக்கிறவர்கள் பேரிலேயும் தப்பு இருக்கிறது. ஆகவே, பழைய system–ஐயே கொண்டு வந்தாலும் சரி, இல்லை, உங்கள் Government–ஏ எடுத்துக்கொண்டாலும் சரி. ஆனால், ஆங்காங்கு இருக்கக்கூடிய பகுதியிலே law of demand இருக்கும். அந்த ஆற்று ஓரத்திலே இருக்கிறவர்களுக்கு விலை கம்மியாக இருக்கும். தொலைவிலே உள்ளவர்களுக்கு அதிகமாக இருக்கும். அந்த law of demand இருக்கக்கூடிய அளவிற்கு நீங்கள்...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசே மணல் வியாபாரத்தை நடத்துவதில் தவறில்லை. ஆனால் அரசுக்கும், வியாபாரத்திற்கும் இடையிலே ஒரு மாஃபியா கும்பல் உள்ளே நுழைந்துகொண்டு, ஆளுங்கட்சிக்குக் கப்பம் கட்டுகிற ஒரு காரியத்தைச் செய்த காரணத்தால், அதிகாரிகளின் கைகள் கட்டப்பட்டன. அவர்கள் இஷ்டத்திற்கு வாரலாம். யாரும் ஒன்றும் கேட்க முடியாது. ஒரு யூனிட்டுக்குப் பதில் 5 யூனிட், 6 யூனிட் ஏற்றிக்கொள்ளலாம். ஒரு யூனிட்டிற்கு 600 ரூபாய் என்றால், அதைக் கொடுத்துவிட்டு, 3 யூனிட் வாங்கிக் கொள்வது, அதிலே வருவதைத்தான் மாதாமாதம் கப்பம் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

இப்போது உதயமாகியிருப்பது கலைஞருடைய ஆட்சி. தக்க நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம். ஒரு வார காலத்திற்குள்ளாக நிலைமைகள் கட்டுக்குள் வந்துவிடும். எக்காரணத்தைக் கொண்டும் இடைத்தரகர்கள், இப்படிப்பட்ட மாஃபியா கும்பல்கள் இந்த வியாபாரத்திலே ஈடுபடுவதற்கு இந்த அரசு கண்டிப்பாக அனுமதிக்காது. தவறு எங்கு நடந்தாலும், மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினால், 24 மணி நேரத்திற்குள்ளாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அதிகாரிகளும் திருந்தவில்லையென்றால், திருத்தப்படுவார்கள், இல்லாவிட்டால் தண்டிக்கப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இந்த மாஃபியா கும்பல்



இருக்கிறதே—இப்பொழுது அமைச்சர்களெல்லாம் புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்குத் தெரியும் பழைய ஃபைலைப் பார்த்தால், எந்தெந்த இடத்தில் எங்கெங்கே ஓட்டை, எப்படியெல்லாம் அடித்தான் கொள்ளை என்று. ஆகவே, நீங்கள் அதை ஓர் ஆராய்ச்சி செய்து, எப்படியெல்லாம், யாரெல்லாம் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள், அவர்கள் எவ்வளவு சேர்த்து வைத்திருக்கிறார்கள், யார் தப்பு பண்ணியிருக்கிறார்கள், தயவுசெய்து அவர்களையெல்லாம் கொஞ்சம் பிடித்து தண்டியுங்கள். அப்பொழுதுதான் அவர்களுக்குப் பயம் பிடிக்கும். நீங்கள் அப்படியே விட்டுவிட்டீர்களென்றால், பிறகு பயமே இல்லாமல் போய்விடும். மீஆகவே, நீங்கள் அதற்கான நடவடிக்கையை எடுத்து, இந்த மாஃபியா கும்பலை முழுமையாகத் தடை செய்வதற்கு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்த அவையிலே பேசுகிறபோதுகூட, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ** என்று ஒரு வார்த்தையைச் சொன்னார்கள். பின்பு அதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட்டீர்கள். (குறுக்கீடு) எடுத்துவிட்டீர்கள். இதிலே முன்னாள் முதல்வர்—sorry, முன்னாள் முதல்வர், அதை நான் withdraw பண்ணிவிட்டேன். இப்போது நேற்று நடந்த கூத்தைப் பார்த்தீர்களென்றால், என்ன நடந்தது என்று பார்த்திருப்பீர்கள். கடந்த கால ஆட்சியிலே, வெள்ள நிவாரணத்தைக் கொடுக்கிறார்கள் என்று ஒரு கவுன்சிலர் சொன்னார் என்பதற்காக, அவர் ஏதோ கூட்டத்தைச் சேர்த்து, அத்தனை பேரும் சாவதற்கு அவர்தான் காரணம் என்று, குண்டர் சட்டத்தையெல்லாம் பொய்யாகப் பாய்ச்சிய ஆட்சி கடந்த கால ஆட்சி. ஆனால், இன்றைக்கு உண்மையிலே குண்டர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்குக்கூடப் பார்த்தால், இன்றைக்கு எங்கள் ஊரிலேயிருந்து, காங்கிரஸ் கட்சியிலேயிருந்து ஒருவர் வந்து, அ.தி.மு.க.வில் சேர்ந்தார், 5,000 பேருடன் சேர்ந்தார் என்று இன்றைக்குப் பேப்பரிலே பார்த்தேன் செய்தியை. அவர் சமாஜ்வாடி கட்சியிலே எனக்கு எதிராக நின்று—சந்தனக் கடத்தல் மன்னன், இன்னும் சொல்லப் போனால், சந்தனத்தைக் கடத்தி ஒரு Engineering College–ஐ ஆரம்பித்த ஆள். இன்றைக்கு 23 கேஸிலே N.B.W. pending. அவர்களெல்லாம் தேர்தலைச் சந்தித்துவிட்டு, இன்றைக்கு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் சேர்ந்து கொண்டு, இன்றைக்கு அவர்கள் ** இவர்கள் பேசுகிறார்கள். ** எப்படியாவது சட்டம்–ஒழுங்கைக் கெடுக்கலாம் என்று இருக்கக்கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்களுக்கு

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. சி. ஞானசேகரன்] [2006 மே 27

நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞருடைய ஆட்சி நிச்சயமாக சிம்ம சொப்பனமாக இருந்து, அவர்களையெல்லாம்,—ஒரு list எடுங்கள். ** list–டிலே யார், யாரெல்லாம் இருக்கிறார்கள்? எவ்வளவு எல்லாம் சம்பாதித்திருக்கிறார்கள்? எப்படியெல்லாம் நாட்டைச் சூறையாடியிருக்கிறார்கள்? இவற்றையெல்லாம் எடுத்து நீங்கள் உடனடியாக மீண்டும் அந்த நடவடிக்கை எடுத்து, அவர்களையெல்லாம் நீங்கள் ஒழிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். சிமெண்ட் விலை நிறைய ஏறிப் போய் இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்கிற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, ** என்பது இருக்கும். (குறுக்கீடு) அது வேண்டாம், ** (குறுக்கீடு) அப்படியென்று சொன்னார்கள். (குறுக்கீடு) சரி.

*பிற்பகல் 1–10*

சிமெண்ட் விலை உயர்வைப் பார்த்தால், 200 ரூபாய் ஒரு மூட்டைக்கு ஏறிப் போயிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மற்றும் நம்முடைய அமைச்சர்களையும் கேட்டுக்கொள்வேன். கட்டுமானத் தொழில்கள் எல்லாம் நிறையவே பாதிக்கப்பட்டிருக்கின்றன. முன்பெல்லாம் 120 ரூபாய், 100 ரூபாய் என்று இருந்த சிமெண்ட் விலை கடந்த கால ஆட்சியிலே நிறைய ஏறிப் போயிருக்கிறது. தேர்தல் வருகிறபோது அவர்கள் இஷ்டத்திற்கு நிறைய ஏற்றிவிட்டுப் போய்விட்டார்கள். இப்போது தாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த சிமெண்ட் விலையை—அந்த ஆலை அதிபர்களில் யாரோ மொத்தமாக வாங்கிவிட்டான், அதனாலே விலையை ஏற்றிவிட்டான் என்றெல்லாம் சொல்லி, இவர்கள் ஒரு சிண்டிகேட் வைத்துக் கொண்டு ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தாங்கள் நடவடிக்கை எடுத்து சிமெண்ட் விலையைக் குறைக்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது கல்வி தமிழகத்திலே வியாபாரமாக்கப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், சீக்கிரம் உரையை முடியுங்கள். அடுத்து திரு. ஆறுமுகம் பேசவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 மே 27]

**திரு. சி. ஞானசேகரன்:** காலையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல் முருகன் பேசுகிறபோது சில கருத்துகளை எல்லாம் சொன்னார்கள். கல்வியாளர்களை வைத்துக்கொண்டு ஒரு குழுவை அமைத்து, கடந்த கால ஆட்சியிலே அந்த B.Ed., College, Teacher Training பற்றி எல்லாம் சொன்னார்கள். அப்படிச் சொன்னது, பொதுவாக, கல்வியாளர்களை மட்டும் அல்ல, சட்டமன்ற குழுவைக் கூட, நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவை வைத்துக்கூட, எப்படியெல்லாம் முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று அவற்றைக் கண்டுபிடித்து, ஒரு அறிக்கை கொடுக்கச் சொல்லி, அந்த அறிக்கைமீது கூட நீங்கள் நடவடிக்கை எடுக்கலாம் என்ற என்னுடைய கருத்துகளை நான் இங்கே பதிவு செய்துகொள்கிறேன்.

கட்டணங்கள் நிறைய, school–லே, college–லே, capitation fee தனியாக வாங்குகிறார்கள், நிறைய fees–ம் வாங்குகிறார்கள். கல்விக் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறார்கள். கல்விக் கட்டணத்தை நீங்கள் குறைப்பதாகச் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் இது அரசாங்கம் நடத்தக்கூடிய சில நிறுவனங்களுக்கு மட்டும்தான் பொருந்துமேயொழிய தனியாராக நடத்தக்கூடியவர்கள்—நேற்றுக்கூடப் பார்த்தால், மதுரையிலே ஒரு Court order–ஐ மிஞ்சி சில பேர் நிறைய வசூல் பண்ணி, அதைத் திருப்பிக் கட்ட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறது. ஆகவே, இந்த capitation fee போன்றவற்றை எல்லாம் நிறைய வாங்கிக் கொண்டிருக்கக்கூடிய, கல்விக் கூடங்களை எல்லாம் நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழைக் கட்டாயப் பாடமாக ஆக்குவது, ஆட்சிமொழியாக ஆக்கக்கூடிய ஒரு அறிவிப்பை நீங்கள் செய்திருக்கிறீர்கள். ஆனால், அதற்கு ஒரு அரசாணை மட்டும் பிறப்பித்தால் போதாது. நான் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், அரசாணை என்று சொன்னால், நீதிமன்றத்திற்குச் சென்று அவற்றை எப்படியாவது அவர்கள் question செய்து அதை நீக்கறவு செய்துவிடுகிறார்கள். அதை ஒரு சட்டமாக, எல்லாப் பள்ளிகளிலும், அது English Medium பள்ளியாக இருந்தாலும் சரி, C.B.S.E.–யாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும், தமிழ் நிச்சயமாக அதிலே இருக்க வேண்டும் என்பதற்கான ஒரு சட்டத்தை இந்த அவையிலே நீங்கள் இயற்றி, தமிழை ஒரு ஆட்சிமொழியாக நீங்கள் ஆக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக்

[திரு. சி. ஞானசேகரன்] [2006 மே 27

கடமைப்பட்டிருக்கிறேன். அதை நீங்கள் சட்டமாக்கினால்தான் அது நிறைவுபெறும். G.O. மட்டும் போட்டால் அது போதாது.

அதேபோல,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்,
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்.'
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்."

என்று பாடினான் பாரதி.

அந்த 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ வழிசெய்தல் வேண்டும்' என்று பாடிய பாரதிக்கு நம்முடைய தலைநகரிலே, சென்னையிலே நீங்கள் ஒரு மணிமண்டபத்தைக் கட்டவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், சுதந்திரம் பெறுவதற்கு முன்னாலேயே, ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டதாக (குறுக்கீடு) இன்னும் நிறைய இருக்கிறது. ஆகவே, நீங்கள் அதற்கு ஒரு மண்டபம் கட்டித் தரவேண்டும். அதேபோல, கிருபானந்த வாரியாருக்கு—காங்கேயநல்லூர்—எங்களுடைய மாவட்டத்திற்குச் சொந்தக்காரர், கிருபானந்த வாரியாருக்கு நீங்கள் காட்பாடியிலே ஒரு சிலையையும், அதேபோல, வேலூர் நகரிலேகூட வைத்து விடலாம், ஒரு மணிமண்டபத்தையும் நீங்கள் அவருக்கு வைத்து, அவருக்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ரேஷன் கார்டு. ரேஷன் கார்டிலே கடந்த கால ஆட்சியிலே பல பேருக்கு ஒப்புகைச் சீட்டு வைத்திருந்தாலுங்கூட, renewal பண்ணியவர்களுக்கேகூட கார்டு வரவில்லை. எங்களுடைய வேலூர் தொகுதியிலேயே 15 ஆயிரம் பேருக்கு வரவில்லை. அதேபோல, எல்லாத் தொகுதிகளிலேயும் அந்தப் பிரச்சினை இருக்கிறது. அந்த கார்டினுடைய page எல்லாம் முடிந்துவிட்டது. Renewal–க்குப் போனால், இப்போது சரக்குக் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் ரேஷன் கடையிலே. ஆகவே, நான் நம்முடைய உணவுத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வது எல்லாம், தயவுசெய்து நீங்கள் உடனடியாக அதற்கு ஏதாவது மாற்று வழி கண்டுபிடியுங்கள். ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்கு உடனடியாக



2006 மே 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே ரேஷன் கார்டு renewal என்கிற பெயரிலே மனுக்கள் எல்லாம் கொடுக்கப்பட்டு, 3 தினங்களிலேயே, மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற உணர்வோடு, அந்த 3 தினங்கள் மட்டும் அதற்கு வாய்ப்புக் கொடுத்து மனுக்களைப் பெற்றார்கள். திடீரென்று தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட காரணத்தினால், முறையாக அரசு அதிகாரிகள் அதைக் கொடுக்க ஒரு வாய்ப்பு இல்லை. எனவே, ஒரு இரண்டு தினங்களுக்கு முன்னால் அனைத்து மாவட்ட விநியோக அதிகாரிகள், D.S.O.–களை அழைத்து, அதற்கு வேண்டிய கூட்டங்கள் எல்லாம் போடப்பட்டு இருக்கின்றன. இன்னும் ஒரு 15, 20 தினங்களிலே அவற்றை எல்லாம் verification செய்து, பரிசோதனை செய்து உரியவர்களுக்கு அந்த கார்டுகள் வழங்கப்படும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் பென்ஷன் அதேபோலத்தான். கடந்த கால ஆட்சியிலே பார்த்தீர்களானால், ஏற்கெனவே 200, 200 ரூபாய் நிறையப் பேர் வாங்கிக் கொண்டிருந்தவர்களை—இதே மாண்புமிகு முதல்வர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அதாவது ஆண் பிள்ளை அவர்களுக்கு இருந்தால்கூட அந்த ஆண் பிள்ளை பெற்றோர்களைக் கவனிக்கவில்லை, அவன் ஊரைவிட்டு ஓடிவிட்டான், கவனிக்கவில்லை, குடிகாரன் என்றால்கூட, அப்போதுகூட முதியோர் பென்ஷனை வழங்கலாம் என்கிற உத்தரவை மாண்புமிகு முதல்வர் அவர்கள் காலத்தில் நாங்கள் ஒரு அரசாணையாகப் பெற்றோம். ஆண் பிள்ளை இருந்தால், இல்லை. ஏதாவது ஒரு வீடு இருந்தால் எல்லாவற்றையும் கேன்சல் பண்ணிவிட்டார்கள். நிறைய கேன்சல் பண்ணி இருக்கக்கூடிய இந்த முதியோர் பென்ஷன் பல அப்படியே பென்டிங்கில் இருந்து, முதியோர்கள் பாவம், அன்றாடம் தெருவிலே சுற்றி அலைந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, புதியவர்கள் மனு வந்தாலும் சரி, பழைய மனுக்கள் cancel செய்யப்பெற்றவற்றை உடனடியாக அவர்களுக்கு restore செய்து, அந்த முதியோர் பென்ஷன் கொடுப்பதற்கான ஆணையைத் தாங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–15*

வீட்டுமனையைப் பொறுத்தளவிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், முன்பு முதல்வராக இருந்தபோது, 20 ஆண்டுகள் யாராவது புறம்போக்கு

நிலத்தில் குடியிருந்தாலுங்கூட அவர்களுக்கு வீட்டுமனையை வழங்கலாம், அது புறம்போக்கு இடமாக இருந்தாலும் வழங்கலாம் என்று ஒரு அரசாணை பிறப்பித்தார்கள். அந்த ஆணையை, அதற்கடுத்து வந்தவர்கள் அதை அப்படியே தூக்கிக் குப்பையில் போட்டுவிட்டார்கள். மீண்டும் அந்த அரசாணைக்கு நீங்கள் உயிர் கொடுத்து, 20 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகள் யாராவது ஒரு நிலத்தில் தொடர்ந்து வீடு கட்டி வாழ்ந்தால், அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா உடனடியாக வழங்குவதற்கான ஆணையை நீங்கள் மீண்டும் இட்டு, அவர்களைக் காக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், பறிக்கப்பட்ட சலுகைகளை—சிலவற்றை—TESMA சட்டத்தையெல்லாம் நீக்கி இருக்கிறீர்கள். ரொம்ப சந்தோஷம். உண்மையிலேயே அரசு ஊழியர்கள் அதை ரொம்ப மகிழ்ச்சியோடு வரவேற்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் leave நாளில் தலைமைச் செயலகத்திற்கு வந்தபோதுகூட, நாமெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அவரை வரவேற்பதற்கு முன்னாலே, அவர்கள் வந்து நின்று இந்த இடத்திலே முதலமைச்சருக்கு வரவேற்புக் கொடுத்தார்கள். அந்த அளவிற்கு, அரசு ஊழியர்கள் பறிக்கப்பட்ட அந்தச் சலுகைகள், இந்த ஆட்சி வந்தால் தங்களுக்குக் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட சலுகைகள் நிறைய உள்ளன. அவற்றைப் பட்டியல் போட்டால் நிறைய வரும், சொல்வதற்கு நேரம் இல்லை. ஆகவே, பறிக்கப்பட்ட அத்துணை சலுகைகளையும்—கடந்த கால ஆட்சியிலே என்ன செய்தார்கள் என்றால், ஒரே நாளில் 6 அரசாணைகளைப் போட்டு எல்லாவற்றையும் தூக்கிப் போட்டு விட்டார்கள் அவர்கள். அதாவது, 19-3-2003 ஆம் தேதி, அரசு 6 ஆணைகளைப் பிறப்பித்தது. 6 G.Os., அந்த 6 அரசாணைகளைப் பிறப்பித்து, பறிக்கப்பட்ட அத்துணை சலுகைகளையும்— மீண்டும் அரசு ஊழியர்களுக்கு இந்த அரசு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வீட்டுமனை எல்லாம்—அதாவது, பொதுவாக நிறைய கட்டிய வீடுகளுக்கு எல்லாம் இன்னும் அப்ரூவல் இல்லையென்ற ஒரே காரணத்திற்காக, உள்ளாட்சிகளிலே இன்னும் வரியே போடமாட்டேன் என்கிறார்கள். 10 வருடம், 20 வருடம் வரி போடப்படாமல் இருக்கிறது. உள்ளாட்சிக்கும் வருவாய் இல்லை. அவனும் அனுமதியே இல்லாமல் வீடு கட்டி நிம்மதியாக இருக்கிறான். இதை ஏதாவது வரைமுறைப்படுத்தி— அது பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, இல்லையென்றால் டவுன் பஞ்சாயத்தாக இருந்தாலும் சரி, நகராட்சியாக இருந்தாலும் சரி, C.M.D.A.–ஆக இருந்தாலும் சரி, தாங்கள் கட்டிவிட்ட வீடுகளுக்கு—சும்மா, அவன்பாட்டுக்கு அனுபவித்துக்கொண்டிருப்பதை வரைமுறைப்படுத்த ஏதாவது ஒரு எளிதான முறையைக் கடைப்பிடித்து, அதை வரைமுறை செய்து, உள்ளாட்சி மன்றங்களுக்கு வருவாயை நீங்கள் பெருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடனடியாக உரையை முடியுங்கள். இன்னும் ஓர் உறுப்பினர் பேச வேண்டும். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் உரையை முடி என்று சொல்லிவிட்டதால், நிச்சயமாக இதோடு நான் முடிக்கிறேன். மகளிர் சுய உதவிக் குழுக்கள் பற்றி மட்டும் ஒன்றைச் சொல்கிறேன். மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஒரு ஊருக்கு 60, 70 வந்துவிட்டது இப்போது. ஆனால், அவர்கள் B.P.L. list–ல் இல்லை. B.P.L. list–ல் இல்லாத காரணத்தினால், வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்ற கணக்கீடு கடந்த கால ஆட்சியிலே தப்பாக எடுத்துவிட்ட காரணத்தினால், அவர்களாலே அரசு மானியத்தைப் பெற முடியவில்லை. ஒரு தொகுப்பு வீட்டினுடைய beneficiary–ஆக வர வேண்டுமென்றாலும் சரி, அல்லது மகளிர் சுய உதவிக் குழுவாக இருந்தாலும் சரி, இந்த B.P.L. list–ல் பல குளறுபடிகள் கடந்த கால ஆட்சியிலே நடந்துவிட்டிருக்கின்றன. ஆகவே தாங்கள், இந்த B.P.L. list–ஐ மீண்டும் சரி செய்து, மீண்டும் ஒரு முறை பரிசீலனை செய்து, உண்மையிலேயே யாரெல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் அந்த அரசு மானியம் பெறுவதற்கான வழிமுறைகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, சட்டமன்ற உறுப்பினர்களுடைய அந்தத் தொகுதி வளர்ச்சி நிதியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கோடி ரூபாய் என்று உங்களுடைய காலத்திலே அறிவித்தீர்கள். அதை நீங்கள் இப்போது இரண்டு கோடி ரூபாயாக அறிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் முழுமையாக அவற்றைப் பயன்படுத்துவதற்கான ஆணையைத் தாங்கள் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி தெரிவித்து, அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள்.

[2006 மே 27

***திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கச்சூர் கிராமத்திலே ஏழை எளிய விவசாயக் குடும்பத்திலே பிறந்த என்னை இந்த மாமன்றத்திற்கு இரண்டாவது முறையாக செங்கல்பட்டு தொகுதியிலே நிற்க வைத்து அழகு பார்த்த எங்களுடைய குடும்பத் தலைவர், 'தமிழன் வாழ்ந்தால் தட்டிக் கொடு, தமிழன் தாழ்ந்தால் முட்டுக் கொடு' என்ற தாரக மந்திரத்தைச் சொல்லி, ஒடுக்கப்பட்ட மக்களினுடைய ஒப்பற்ற தலைவராக விளங்கிக்கொண்டிருக்கிற எங்களுடைய தமிழினப் போராளி மருத்துவர் ஐயா அவர்களுக்கும், இந்தியத் திருநாட்டினுடைய சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு சின்ன ஐயா அவர்களுக்கும், என்னை இந்த மாமன்றத்திலே பாட்டாளி மக்கள் கட்சியினுடைய துணைத் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுத்த அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி தெரிவித்து, இந்த மாமன்றத்திலே

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி"

என்ற வள்ளுவன் வாக்குக்கிணங்க, வேண்டுவோருக்கு வேண்டுவன கொடுத்தலும், அனைவருக்கும் முகம் மலர்ந்தும், முறை செய்து ஆட்சி செய்தலும், குடிமக்களைக் காத்திடுதலும், இவை நான்கும் உடையவர்தான் அரசன் என்ற வள்ளுவனின் வாக்குக்கிணங்க, இன்றைக்கு ஐந்தாவது முறையாகத் தமிழ் மண்ணிலே இந்த St. George கோட்டையிலே முதல்வராக வீற்றிருக்கிற நம்முடைய ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையும் வணங்கி, என்னுடைய வெற்றிக்கு ஒரு சில மணித்துளிகளே பேச வேண்டுமென்று செங்கை நகருக்கு வந்தாலும், மக்கள் வெள்ளத்திலே மேடை ஏறி ஒரு மணி நேரம் பேசி என்னை வெற்றிபெறச் செய்த நம்முடைய தளபதியார் அவர்களுக்கும், எங்களை எல்லாம் வழி நடத்திக்கொண்டு இருக்கிற எங்களுடைய தலைவர் தியாகச் செம்மல் அண்ணன் ஜி.கே.எம். அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே ஆளுநர் உரை பற்றி எனக்கு முன்பாக நல்ல கருத்துகளைச் சொன்னார்கள். தமிழக ஆளுநர் அவர்கள் உரை 27 பக்கங்களும் 60 பத்திகளும் கொண்டது. 'யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே' என்பதற்கிணங்க நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக இந்தத் தொடரிலே வைக்கப்பட்டிருக்கிற இந்த ஏடு, மிகச் சாமானிய மக்களுக்கும், தமிழக மக்களுடைய வளர்ச்சிக்கும், தமிழகத்தின் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டில் வாழுகின்ற ஒட்டுமொத்த மக்கள் நலனைப் பேணிக் காக்கின்ற தமிழக அரசின் அறிவிப்பாக அமைந்ததற்குப் பாட்டாளி



2006 மே 27] [திரு. கி. ஆறுமுகம்]

மக்கள் கட்சியின் சார்பிலும் என்னுடைய மருத்துவர் ஐயா சார்பிலும் வரவேற்கிறேன்.

பிற்பகல் 1–20

இந்த ஆளுநர் உரை பற்றித் தெரிவிப்பதற்கு முன்பாக ஒரு சில கருத்துகளை, என்னுடைய தொகுதியிலே செய்யவேண்டியவை குறித்த கருத்துகளைச் சொல்லி, பிறகு ஆளுநர் உரைக்கு வரலாம் என்று கருதுகிறேன். இங்கே எதிர்க்கட்சியினுடைய அணியிலே அந்த 60 பேர்கள்—61 பேர்கள் இல்லையே என்ற ஏக்கம் எனக்கு இருக்கிறது. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பாக என்னுடைய தொகுதியிலே கோடிக்கணக்கிலே நல்ல திட்டங்களை அறிவிக்கிறேன் என்று அறிவித்து, ஒரு திட்டத்தையும் நிறைவேற்றவில்லை. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால், செங்கல்பட்டு கொளவாய் ஏரியை ஆழப்படுத்துகிறோம், கரையைப் பலப்படுத்துகிறோம் என்று ரூ.15.25 கோடி ஒதுக்கினார்கள். இன்னும் தொடங்கப்பட்டபாடில்லை. செங்கற்பட்டு நகருக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ.32 கோடியிலே அமைக்கிறோம் என்று சொன்னார்கள். அது அமைத்தபாடில்லை. சுற்றுலா நகரமாக இருக்கிற மாமல்லபுரத்திலே ஒளி விளக்குக் காட்சிகள் அமைக்கிறோம் என்று சொன்னார்கள்; ஆனால், இதுவரையிலும் அமைத்தபாடில்லை.

அது மட்டுமல்ல, செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரியிலே கூடுதலாக 50 இடங்களை அனுமதிக்கிறோம் என்று சொன்னார்கள். சொல்லிய அறிவிப்புகள் 4 ஆண்டுகளாக இன்னும் அறிவிப்புகளாகவே இருக்கின்றனவே தவிர, எதுவும் செயல்படுத்தப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் அந்தத் திட்டங்களை உடனடியாக அமல்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்கவேண்டுமென்று இந்தச் சமயத்திலே என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் மூன்று முத்தான திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். நீங்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற உடனே 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்குகிறோம் என்ற திட்டத்தையும், விவசாயிகளின் நலன் கருதி 7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயிகளின் கடனை ஒரே கையெழுத்திலே தள்ளுபடி செய்து, ஏழை விவசாய மக்களுடைய வயிற்றிலே பால் வார்த்து இருக்கிறீர்கள். சத்துணவிலே வாரம் இரண்டு முட்டை போடுகிறேன் என்று நல்ல திட்டத்தையும் அறிவித்திருக்கிறார்கள். அதையெல்லாம் பாராட்டுவதற்கு மனம்

இல்லாமல்தான், இங்கே வந்து இருக்கிற முன்னாள் முதல்வர் அவர்கள் அரசைக் கொச்சைப்படுத்தினார்கள், கேலி பேசினார்கள். நேற்றுக்கூட நான் குறுக்கிடு செய்தேன். அண்ணா தி.மு.க. உறுப்பினர் முட்டை போடுவதைப் பற்றிப் பேசினார். முட்டை போடுவதைப் பற்றிப் பேசுவதற்கு நிச்சயமாக அவருக்குத் தகுதியே இல்லை. தகுதி படைத்த தலைவராக நம்முடைய கலைஞர் அவர்கள் இருந்துகொண்டு இருக்கிறார்கள்.

அதேபோன்று, நிலமற்ற விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் கொடுத்துவிட்டால், எங்கே நம்முடைய கூட்டணிக்குப் பலம் சேர்ந்து விடுமோ என்ற எண்ணத்திலேதான், அச்சத்திலேதான் அதற்கு எதிர்மறைக் கருத்துகளை இங்கே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். உழவர் சந்தை மீண்டும் திறக்கப்படும் என்று சொன்னீர்கள். அது விவசாயிகளுடைய வயிற்றிலே பாலை வார்க்கிறவிதமாக இருந்துகொண்டு இருக்கிறது. என்னுடைய தொகுதியிலேகூட சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்குப் பக்கத்திலே விவசாயிகளின் நலனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிற, நம்முடைய கலைஞர் அவர்கள் திறந்து வைத்த உழவர் சந்தை மூடிக் கிடக்கிறது. அதைப் புதுப் பொலிவோடு, அந்தப் பகுதியினுடைய சாலைகளை எல்லாம் புதுப்பித்துத் திறக்க வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளை இங்கே வைக்கிறேன்.

அதேபோன்று, பல்வேறு பகுதிகளில் இருந்து பல்வேறு கோரிக்கைகள் நம்முடைய தமிழக அரசாங்கத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, சத்துணவு அமைப்பாளர்கள் எங்களைப் பணி நிரந்தரம் செய்யுங்கள் என்று கோரிக்கை வைக்கிறார்கள். அதைச் செய்திடவும், அதேபோன்று ஊராட்சிகளிலே பணியாற்றுகிற எழுத்தர்கள், அவர்களுக்குப் பணி நிரந்தரம் வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்கள். அவற்றையெல்லாம் உடனடியாகச் செய்வதற்கான வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஏற்கெனவே கடந்த ஆட்சியிலே எது செய்தார்களோ, இல்லையோ, நான் தமிழகத்தை முதல் இடத்திலே கொண்டு வருவேன், கொண்டு வருவேன் என்று சொன்னவர்கள், குடிகாரர்களை அதிகமாகக் குடிக்க வைத்ததிலேதான் தமிழகத்தை முதல் இடத்திற்குக் கொண்டுவந்தார்கள். அந்தப் பெருமை கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு உண்டு என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அப்போதுகூட எங்களுடைய தமிழ்க்குடிதாங்கி மருத்துவர் ஐயா அவர்கள், புதிதாக கிராமங்களிலே இந்த TASMAC கடைகளைத் திறக்கக்கூடாது என்று போராட்டம் நடத்தினார்; கேட்கவில்லை.



அதன்மூலமாக, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் தமிழக அரசாங்கத்திற்கு வருமானம் வந்துகொண்டிருக்கிறது என்ற ஒரு செய்தியைச் சொல்கிறார்களே, அது எப்படி வருகிறது என்றால், குடிப்பதனாலே வருகிறது. இவ்வளவு மோசமான நிலையை ஏற்படுத்தி, இந்தத் தமிழகத்திலே பொருளாதார நிலையை சீர்குலைத்திருக்கிறது. அடித்தளத்திலே வாழ்கிற, குடிசையிலே வாழ்கிற அப்பாவி மக்களும், தொழிலாளர் தோழர்களும், விவசாய மக்களும், விவசாயக் கூலித் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதைச் சற்றும் திரும்பிப் பார்க்காத நிலையிலே அது நடந்திருக்கிறது. அதுபோன்று புதிதாக கிராமங்களிலே ஆரம்பிக்கப்பட்ட TASMAC கடைகளை அகற்ற வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1–25*

அதேபோன்று, இப்போது 27 சதவிகித பிற்படுத்தப்பட்டோர் பிரச்சினை இந்தியா முழுக்க ஒரு மிகப் பெரிய பூதாகரமான பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. அந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையிலே எங்களுடைய தமிழ்க்குடிதாங்கி டாக்டர் ஐயா அவர்களும், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்களும் பெருமுயற்சி எடுத்து, அதற்குப் புத்துயிர் ஊட்டியிருக்கிறார்கள். நம்முடைய சட்டமன்றத்திலே அதற்கான கோரிக்கை வைக்கப்படும் என்ற அறிவிப்பை, மிகச் சாலச் சிறந்த அறிவிப்பாக பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது.

அதேபோன்று, நம்முடைய முதல்வர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை. நெல் கொள்முதல் மையங்களிலே இப்போது காஞ்சிபுரம் மாவட்டத்திலே ஒரு நாளைக்கு ஒரு இலட்சம் ரூபாய், ஒன்றரை இலட்சம் ரூபாய்க்கு மேல் கொடுப்பதில்லை. அங்கே ஏராளமான அறுவடை செய்த நெல் குவியலாகக் கிடக்கிறது. சமயத்திலே மழை வருகிறபோது, அதைக் காக்க முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாகப் போதிய அளவுக்கு நெல் கொள்முதல் செய்வதற்கு நம்முடைய தமிழக அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நம்முடைய கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் 40 ரூபாய், அதற்காக, எடுத்துச் செல்கிற வண்டி வாடகை, மற்றும் இதர படிகள் கொடுக்கப்பட்டன. அது கடந்த ஆட்சியில் நிறுத்தப்பட்டுவிட்டது. அதை இந்த ஆண்டு உடனடியாகக் கொடுப்பதற்கான முயற்சியைத் தமிழக அரசாங்கம் எடுக்கவேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று, இங்கே மணல் எடுக்கிற பிரச்சினை பற்றிச் சொன்னார்கள், பாலாற்றிலே. நம்முடைய அரசாங்கம் பாலாற்றிலே மணல் எடுப்பதை அனுமதித்தாலுங்கூட 3 அடிக்கு மேலே மணல் எடுக்கக் கூடாது என்ற சரியான நிலைப்பாட்டோடு செயல்படவேண்டும். கடந்த காலத்தில் என்னுடைய தொகுதியில் பல இடங்களில், இடையாத்தூர், மாமண்டூர், வளாகம் போன்ற பகுதிகளில், மணப்பாக்கம் போன்ற பகுதியிலே, வாயலூர் போன்ற பகுதியிலே அரசாங்க அதிகாரிகளே உடனிருந்து 15 அடிக்கு மேல் மணல் எடுத்தார்கள். நாங்கள் எல்லாம், பொதுப் பணித் துறை அமைச்சரிடம்கூட படங்களைக் காட்டிப் பேசினோம். அதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக, நானே நேரில் சென்று ஆற்றிலே நின்ற நூற்றுக்கணக்கான லாரிகளைத் தடுத்து நிறுத்தி அனுப்பினேன். அப்போது அது பத்திரிகையிலே எல்லாம் செய்தியாக வந்தது.

அதேபோன்று அந்தப் பகுதியிலே ஏராளமான நகரங்களுக்குக் குடிதண்ணீர், சென்னைப் புறநகரங்களான ஆலந்தூர் ஆகட்டும், பல்லாவரம் ஆகட்டும், தாம்பரம் ஆகட்டும், பெருங்களத்தூரிலிருந்து, கூடுவாஞ்சேரி, மறைமலைநகர், அதேபோன்று அந்தப் பகுதியிலே மதுராந்தகம், செங்கல்பட்டு, கல்பாக்கம் போன்ற பல பகுதிகளுக்குத் தண்ணீர் அந்தப் பகுதியில் இருந்துதான் வழங்கப்படுகிறது. அங்கே மணல் எடுக்கிறபோது 3 அடிக்கு மேலாக மணலை அள்ளக் கூடாது என்று ஒரு கடுமையான சட்டம் போடவேண்டுமென்று நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, உங்களுக்குத் தெரியும், மழை பெய்த காலங்களிலே—கடந்த அரசாங்கத்திற்குக்கூட ஆலோசனை கூறினேன். அதை உதாசினப்படுத்திவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** 5 மணித்துளிகளில் உரையை முடித்து விடுகிறேன் தலைவர் அவர்களே! ஏரிகள் எல்லாம் உடைப்பெடுத்ததை நீங்கள் பார்த்திருப்பீர்கள். உடைப்பெடுத்தது எல்லாம் எங்கே என்று சொன்னால், ஏரிக்கரைகளிலே, மதகு பக்கத்திலே உடைப்பு எடுத்தது. மதகுகளைச் சரியாகப் பராமரிக்காத காரணத்தாலே, மதகுகளைச் சரியாகக் கட்டாததாலே, அதன் பக்கத்திலே revetment கட்டாததாலே மதகுகள் பக்கத்திலேதான் ஏரிகள் உடைப்பெடுத்தன. ஏரிக் கரைகளைப் பலப்படுத்தும்போது மதகுகள் பக்கத்திலே பலமாக அந்தக் கரைகளை பலப்படுத்துவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோன்று, நெடுஞ்சாலைத் துறை மூலம் ஒவ்வொரு ஆண்டும் மழைக் காலங்களிலே 100 கோடி, 200 கோடி ரூபாய் என்று செலவு செய்யப்படுகிறது. அதற்குக் காரணம், அந்தந்தப் பகுதிகளிலே வாய்க்கால்களும், அங்கே இருக்கிற மதகுகளும், அங்கே இருக்கிற பாலங்களும் சரியாக இல்லாத காரணத்தாலே அங்கே தண்ணீர் எல்லாம் சாலைக்கு மேலே போவதாலே பிரச்சினை ஏற்பட்டு பல்வேறு இடங்களிலே சாலைகள் மோசமாகிப் போய்விட்டன. அதையெல்லாம் தடுத்து நிறுத்தவேண்டும் என்று சொன்னால், ஏற்கெனவே ஆய்வு செய்து, எந்தெந்தப் பகுதிகளில் எல்லாம் வெள்ளம் அதிகமாகக் கரைபுரண்டு ஓடியதோ, எந்தெந்தப் பகுதிகளில் எல்லாம் வெள்ளம் அதிகமாகப் போய், சாலைகள் சீர் செய்யப்படாமல் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் முழுமையாகச் செய்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நம்முடைய ஆளுநர் உரையிலே ஒரு சிலவற்றைச் சேர்க்கவேண்டுமென்ற என்னுடைய அவாவை இங்கே தெரிவிக்கிறேன். குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கும், வீதியிலே திரியும் மன நோயாளிகளைக் கட்டுப்படுத்துவதற்கும், AIDS என்னும் ஆட்கொல்லி நோயினால் பாதிக்கப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்குமான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கி. ஆறுமுகம் அவர்கள், நாளை மறுநாள் தொடர்ந்து பேசலாம். பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

## 4. அறிவிப்பு

### அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களை மீண்டும் பேரவைப் பணிகளில் கலந்துகொள்ள அனுமதிப்பது குறித்த அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று (27–5–2006) காலை எனது அறையில் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில், அவையின் பிரதான எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை அவை

நடவடிக்கைகளிலிருந்து இக்கூட்டத்தொடர் முழுவதும் நீக்கி வைக்கப்பட்டது குறித்து மறுபரிசீலனை செய்யப்பட்டது. அதில், 26–5–2006 அன்று விரும்பத்தகாத செயல்களில் ஈடுபட்டு புகார் கூறப்பட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவர்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்துக் கடிதம் கொடுத்தால் பரிசீலனை செய்யப்படும் என்று முடிவு செய்யப்பட்டது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 29–05–2006 (திங்கட்கிழமை) அன்று காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

2. 2004–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) பிரிவு 105 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

* * *

D
V211, 31'P16
P06.2.3
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227072
சென்னை-600 008
நூலகம்